# அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி
## பட்டயம் (சோதிடவியல்)

## தாள் - 1 சோதிட அடிப்படைகள்

**பொருளடக்கம்**


**அலகு–I : கிரகங்கள், நட்சத்திரங்கள்**

1. சோதிடம் ஓர் அறிமுகம் ... 4

2. கிரகங்களும், நட்சத்திரங்களும் … 13

**அலகு–II : லக்னம், இராசி, நவாம்வசம்**

3. லக்னம், இராசி, நவாம்வசம் … 33

**அலகு–III: ஆட்சி, உச்சம், நீச்சம்**

4. கிரகங்களின் ஆட்சி, உச்சம், நீச்சம் … 52

**அலகு–IV : வர்கோத்தமம், பரிவர்த்தனை**

5. வர்கோத்தமம், பரிவர்த்தனை … 53

6. காரகத்துவமும் ஆதிபத்தியமும் … 56

7. பரஸ்பரபார்வை … 62

**அலகு–V : எண் கணிதம், நவரத்தினங்கள்**

8. பிறந்த எண் மற்றும் நவரத்தினங்கள் … 64

**அலகு- VI : யோகங்கள், தோஷங்கள்**

9. யோகங்கள் … 75

10. தோஷங்கள் … 89

11. விதிவிலக்குகள் … 95

# முகவுரை

மானுட வாழ்வினில் இன்றியமையாததும் எல்லா விஷயங்களிலும் இடம்பெறும் வண்ணம் உள்ளதுமான ஜோதிடம், எல்லா தரப்பினராலும் விரும்பத்தக்கதாயும் வியக்கத் தக்கதாயும் விளங்குகிறது. ஜோதிடம் அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றாகும். தங்களது எதிர் காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பாதவர்கள் யாருமிலர். உண்மையில் இக்கலை இறையருளுக்குத் தொடர்பானது. மற்றத் துறை படிப்புகளை யார் வேண்டுமானாலும் பயிலலாம். இத்துறைக் கலை மட்டும் இறையருளும் இணைந்து செயலாற்றினாலொழிய படித்தது பயன் தராது. இறையருளுள்ள ஒருவர், வாக்குப்பலிதம் உள்ள ஒருவர் எவரோ, அவரே சோதிடராய்த் திகழ முடியும். எல்லாருக்கும் கல்வி பொதுவானது என்றாலும் இக்கலை பயில விரும்புபவர் இறையருளுக்கு உட்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

சுமார் 16 ஆம் நூற்றாண்டு இறுதி வரை பூமியைச் சூரியன் சுற்றுகிறதா? சூரியனைப் பூமி சுற்றுகிறதா? என்றும், பூமி தட்டையானதா? கோளவடிவானதா? என்றும் விவாதிக்கப்பட்டு வந்தது. உண்மை நிலையைக் கண்ட விஞ்ஞானிகள் சிலர் மரண தண்டனையை ஏற்றதும் யாம் அறிந்ததே. இவ்வாறு ஒருவழியாக பூமி கோளவடிவமானது என்றும், அது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, சூரியனை ஓராண்டு கால அளவில் சுற்றி வலம்வருகிறது என்றும் முடிவுக்கு வந்தனர்.

ஆதிகாலத்தில் மனிதன் எதைக்கண்டு அஞ்சினானோ அதையே இறைவனாய் உளமாற நினைத்து வழிபட ஆரம்பித்தான். பூமி சுழற்சி அறியாத காலத்தில் இயற்றப்பட்டதுதான் (சுமார் 12 மணி நேர இருளுக்குப் பின் வெளிவரும் பரிதியைக் கண்டு) இயற்றப்பட்டதுதான் சந்தியா வந்தனம். இது நாத்திகக் கருத்தல்ல. உண்மை நிகழ்வு.

சோதிடம் என்றால் என்ன? அது ஒரு கலையா, விஞ்ஞானமா, மெய்ஞ்ஞான அறிவா? என்று பார்த்தால் இது மூன்றுமே என்று உணர முடியும். சூரிய ஒளியில் இருந்துதான் எல்லா இயக்கமும் நிகழ்கின்றன. வான்வழியே எண்ணற்ற நட்சத்திரங்கள் உலவினாலும், சூரியக் குடும்பத்துள் 27 நட்சத்திரங்கள், 9 கோள்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று பஞ்சபூதங்களாலான பிரபஞ்சம் இருப்பதும், அதன் மர்மங்களை இதுவரை முற்றுமுணர்ந்தவர்கள் யாருமில்லை என்பதும் கண்கூடு. ஒரு பூதம் மற்றொரு பூதத்தைக் கட்டுப்படுத்தாது. இதுவே நியதி.

கோள் என்றால் கொள்ளுதல்; சூரியனிடமிருந்து ஒளியைக் கொள்ளுதல் (நீட்டல் விகாரம், முதனிலைத் திரிந்த தொழிலாகுபெயர்) என்றும், கிரகம் என்றால் ஒளியைச் சூரியனிடமிருந்து கிரகித்துக் கொள்ளுதல் என்றும் பொருள். கோளம் என்பதே கோளானது என்பாரும் உளர். இது சர்ச்சைக்குரியது அல்ல. இந்த 9 கோள்களும் அவற்றிற்கான பண்புகளை உடைத்தனவாய் உள்ளன. வெப்ப நிலை, குளிர் நிலை, மந்த நிலை என்னும் வகையில் இந்த 9 கோள்களுமே மனித வாழ்வில் பின்னிப்பிணைந்து மனம் உடலுடன் இணைந்து எண்ணற்ற மாற்றங்களையும் அதிசயங்களையும் உண்டுபண்ணுகின்றன. கோள்வழிப்பாதை நீள்வழிப்பாதையை கிரகச்சாரம் என்பர்.

தற்போது முனைவர் பட்டம் வாங்கியவர்கள் பேராசிரியர்களாய் இருப்பது போன்று, அக்கால முனிவர்கள் முனைந்து முனைந்து தங்கள் தவ வல்லமையால் கண்ட உண்மைகளைப் பாடல்களாய், சாத்திரங்களாய் எழுதி வைத்தது சோதிடக்கலை என்பதால், சோதிடம் மெய்ஞ்ஞானம் என்று அழைக்கப்படுகிறது. கோள்கள் நடவடிக்கைகளை விஞ்ஞானிகள் ஏற்பதாலும் அதன் இயக்கங்களைக் கண்டறிந்ததாலும், இது விஞ்ஞானம் என்றும் அழைப்பர். பிறர் மனத்தத்துவம் அறிந்து சொல்லப்படுவதால் இது ஒரு கலை என்றும் உணரலாம்.

ஒருவர் அனுபவத்தாலும் பரம்பரை வழியினாலும் கற்றுணர்ந்ததாலும், இறையருளும் இயற்கையான நிலையாலும் கற்றுணர்வதாலும் சோதிடராகலாம். இனி கிரகங்கள், நட்சத்திரங்கள் அதன் இயக்கங்கள் முதலியவற்றைக் கற்றறிவோம்.

– கி.பாலசுப்ரமணியன்

## அலகு 1 – பாடம் 2 – கிரகங்களும் நட்சத்திரங்களும்

# தாள் – 1 சோதிட அடிப்படைகள்

***அலகு I - கிரகங்கள், நட்சத்திரங்கள்***

## பாடம் 1 – சோதிடம் ஓர் அறிமுகம்

உலகில் மனிதன் பிறக்கிறான்; சில காலம் வாழ்கிறான்; முடிவில் இறந்து விடுகிறான். பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட காலமே மனித வாழ்க்கை. மனிதன் 120 ஆண்டுகள் வாழமுடியும்.

வாழ்வில் மனிதன் கல்வி கற்கிறான்; தொழில் செய்து செல்வம் ஈட்டுகின்றான்; திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துகிறான்; குழந்தைகளைப் பெற்று வளர்க்கிறான்; பெற்றோரைப் பாதுகாக்கிறான்; தொழிலில் முன்னேற்றம் அடைந்து புகழ்பெறுகிறான்; சமுதாய வளர்ச்சிக்குத் துணைபுரிகிறான்; இயற்கையோடு ஒன்றி இணைந்து வாழ்கிறான்; இன்பம், துன்பங்களை அனுபவிக்கிறான்; வாழ்வில் அமைதி பெற்று முடிவில் முக்தி பெறுகிறான்.

இவ்வாறு பல நிகழ்ச்சிகளை ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் நடத்துவது இயற்கையின் பேராற்றலே. அந்த இயற்கையைப் புரிந்து கொண்டு வாழ்வாங்கு வாழ, வானியலையும் சோதிடவியலையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். அவற்றை நன்கு விளங்கிக்கொள்வோம்.

### 1.1. வானியல்

நாம் வாழ்வது பூமியில். பூமி ஒரு கோள் அல்லது கிரகம். இது தன்னைத் தானே ஒரு நாளைக்கு ஒரு முறை சுற்றி வருகிறது. பகல் 12 மணி நேரம், இரவு 12 மணி நேரம் என்று சுழல்கிறது. சூரியனிடமிருந்து வரும் ஒளி பூமியில் படும்போது அதைப் பகல் என்றும் ஒளி படாத காலம் பகுதியை இரவு என்றும் அழைக்கிறோம். பகலில் வேலை செய்வதும் இரவில் உறங்குவதும் இயற்கையோடு ஒட்டிய வாழ்வாகும்.

அதுபோல் பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வலம் வருவதற்கு ஓராண்டு அல்லது 12 மாதங்கள் அல்லது 365 1/4 நாட்கள் ஆகிறது. பூமி நீள்வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றி வருகிறது, அதனால் பருவ காலங்கள் ஏற்படுகின்றன, கோடைக் காலத்தில் பருத்தி ஆடைகளையும் குளிர் காலத்தில் கம்பளி ஆடைகளையும் அணிந்து சூரியனின் தட்பவெப்ப நிலைக்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறோம்.

பூமி சூரியக் குடும்பத்தின் ஓர் அங்கமாகும். சூரியக்குடும்பத்தில் 9 கோள்கள் உள்ளன. அவை புதன், வெள்ளி (சுக்கிரன்), பூமி, செவ்வாய், வியாழன் (குரு), சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ

என்று விஞ்ஞானிகள் அழைக்கின்றனர். 9 கோள்களும் ஒவ்வொரு வட்டப்பாதையில் வரிசையாக முறையாக சூரியனைச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றன.

சூரியன் ஒரு நெருப்புக்கோளம். அந்த நெருப்பினால் சுயமாக ஒளியை உற்பத்தி செய்து வெளியிட்டுக்கொண்டிருக்கிறது. சுயமாக ஒளியைத் தருகின்ற கோளத்திற்கு நட்சத்திரம் என்று பெயர்; இதை விண்மீன் என்றும் அழைப்பர்; உண்மையாக சூரியன் ஒரு நட்சத்திரமே; நமது சூரியக்குடும்பத்தில் உள்ள நட்சத்திரத்தைச் சூரியன் என்று நாம் அழைக்கிறோம். சூரியனிடமிருந்து வரும்ஒளியைக் கோள்கள் பிரதிபலிக்கின்றன. கோள்களுக்குச் சுயமாக ஒளியை உற்பத்தி செய்யத் தெரியாது.

நமது பூமியைச் சுற்றி வரும் துணைக்கோள் தான் சந்திரன். சந்திரனும் சூரியனின் ஒளியைப் பிரதிபலிக்கின்றது. சந்திரன் பூமியை ஒரு முறை சுற்றிவர 29.5 நாட்களை எடுத்துக் கொள்கிறது.

சூரியனுக்கும் பூமிக்கும் நடுவில் சந்திரன் வரும்போது ஏற்படும் இருளான கால நிலையை நாம் அமாவாசை என்று அழைக்கிறோம், சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் பூமி வரும்போது சந்திரனின் ஒளி பட்ட பகுதியை நாம் பௌர்ணமி என்று அழைக்கிறோம்.

நமது சூரியனைப் போல் பல கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் சேர்ந்த தொகுப்பை அண்டம் என்பர். நமது சூரியக் குடும்பம் இருப்பது பால்வழி அண்டம்.

இது போல் பல கோடிக்கணக்கான அண்டங்களின் தொகுப்பே பேரண்டம் ஆகும். இதுவே பிரபஞ்சம் எனப்படுகிறது. நாம் இரவில் வானத்தில் பார்க்கின்ற நட்சத்திரக் கூட்டங்களின் தொகுப்பே பேரண்டம்.

ஒவ்வொரு நட்சத்திரத்திலிருந்தும் ஒளிஅலைகள் பூமியை நோக்கி வருகின்றன. சூரியனிலிருந்தும் மற்ற கோள்களிலிருந்தும் ஒளி அலைகள் பூமியை நோக்கி வருகின்றன. அவை மனித உடலில் பட்டு இரசாயன மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. மனிதனின் வாழ்வில் அவனுடைய உடல், உயிர், மனம், ஆன்மா, சமுதாயம் ஆகியவற்றின் வளங்களில் ஏற்றத் தாழ்வுகளை உண்டுபண்ணுகின்றன. சோதி (ஒளி) அலைகளின் தாக்கமே மனத வாழ்வில் வெற்றி தோல்விகளாகும் என்பதால் அதைப் பற்றிய ஆராய்ச்சியே சோதிடக் கலை ஆயிற்று.

ஒரு சிறிய விளக்கிலிருந்து வரும் வெளிச்சத்திற்கும். மிகப் பெரிய விளக்கிலிருந்து வரும் வெளிச்சத்திற்கும் வேறுபாடு இருக்கும். அது மங்கலாகவோ பிரகாசமாகவோ விளங்கும். ஒரு டார்ச் விளக்கின் ஒளி ஒரு சுவருக்கு அருகில் இருந்தோ அல்லது தூரத்தில் இருந்தோ அந்தச் சுவரின் மீது

படும்போது சுவரில் வெளிச்சத்தின் அளவு வேறுபடும். அது போல்தான் சிறிய, பெரிய கோள்களிலிருந்தும், நட்சத்திரங்களிலிருந்தும் வரும் ஒளி அலைகள் அருகில் இருந்தோ, தூரத்தில் இருந்தோ புறப்பட்டு நம் மீது படுகின்றன. அவற்றின் தாக்கம் நம் வாழ்வின் தரத்தை நிர்ணயிக்கின்றன.

### 1.2. சோதிடக்கலையின் பயன்

சோதிடக்கலையின் தந்தை வராஹமிஹிரர் ஆவார். இவர் தான் இக்கலையை ஒழுங்கு படுத்தினார்.

சோதிடக்கலை நமக்கு ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது. மனித வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்வுகள் எப்போது நடைபெறுகின்றன? என்ன படிக்கலாம்? எப்போது திருமணம் செய்யலாம்? எப்போது தொழில் தொடங்கலாம்? எந்தத் தொழில் தொடங்கலாம்? நன்மை விளையுமா? ஒருவரது குணம் எப்படி? ஆயுள் எவ்வளவு? போன்ற கேள்விகளுக்கு விடை அளிக்கக் கூடியதாக சோதிடக்கலை விளங்குகிறது.

### 1.3. நவக்கிரகங்கள்

சோதிடக்கலையில் 1) சூரியன், 2) புதன், 3) சுக்கிரன் (வெள்ளி), 4) சந்திரன், 5) செவ்வாய், 6) குரு (வியாழன்), 7) சனி, 8) இராகு, 9) கேது என்று ஒன்பது கோள்களை முன்னோர்கள் கணக்கில் எடுத்துக்கொண்டார்கள். இவற்றையே நவக்கிரகங்கள் என்றனர். சூரியன் உண்மையில் ஒரு நட்சத்திரம். இராகு. கேது என்பவை நிழல் கிரகங்கள் அல்லது சாயாக் கிரகங்கள். யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ என்ற கோள்கள் சூரியனுக்கு மிகத் தொலைவில் இருப்பதால் அவற்றைச் சோதிடக் கலையில் விட்டுவிட்டனர்.

சூரியன், புதன், சுக்கிரன், சந்திரன், செவ்வாய், குரு, சனி என்ற ஏழு கிரகங்களும் முன்னோக்கிச் சுழலுகின்றன. இராகு, கேது என்ற நிழல் கிரகங்கள் பின்னோக்கி, எதிர்த் திசையில் சுழலுகின்றன. இந்தக் கிரகங்களின் அசைவை, நகர்வைத்தான் கிரகாச்சாரம் அல்லது வான் வீதியில் கோள்களின் சஞ்சாரம் என்று அழைக்கின்றோம்.

இந்த ஏழு கிரகங்களின் பெயர்களிலேயே ஒரு வாரத்திற்கு ஏழு கிழமைகள் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று அமைக்கப்பட்டன.

சோதிடக்கலையில் 9 கிரகங்கள், 12 இராசிகள், 27 நட்சத்திரங்கள் முக்கிய அம்சங்களாக அமைந்துள்ளன. அவற்றை நாம் நன்கு புரிந்து கொள்வோம்.

### 1.4. இராசிகள்

பூமி ஒரு முறை சூரியனைச் சுற்றிவர (அதாவது 360 பாகை (டிகிரி) சுற்றிவர) ஒரு வருடம் ஆகிறது. அதாவது 12 மாதங்கள் ஆகின்றன. ஒரு சுற்று வலம் வருவதற்கான 360 பாகையை 12 பகுதிகளாகப் பிரித்து, 12 இராசிகள் என்று அழைத்தனர். 12 இராசிகளின் பெயர்கள் வருமாறு:

1) மேஷம், 2) ரிஷபம். 3) மிதுனம், 4) கடகம், 5) சிம்மம், 6) கன்னி,

7) துலாம். 8) விருச்சிகம், 9) தனுசு, 10) மகரம், 11) கும்பம், 12) மீனம்

‘0’ டிகிரி பாகையிலிருந்து 30 பாகை வரை முதல் இராசி. அது மேஷம் என்று பெயர். அடுத்து 30 பாகையிலிருந்து 60 பா;கை வரை இரண்டாவது இராசி. அது ரிஷபம். இவ்வாறு வரிசையாக 12 இராசிகளுக்கும் பெயரிட்டுள்ளனர். இதை விளங்கிக் கொள்ள, படம்-1 வானமும் இராசிகளும் காண்க.

இந்த 12 இராசிகளையே, 1. சித்திரை, 2. வைகாசி, 3. ஆனி, 4. ஆடி, 5. ஆவணி, 6. புரட்டாசி, 7. ஐப்பசி, 8. கார்த்திகை, 9. மார்கழி, 10. தை, 11. மாசி, 12. பங்குனி என்று 12 மாதங்களாகப் பெயரிட்டுள்ளனர்.

| எண் | இராசி | பாகை | மாதம் பெயர் |
|---|---|---|---|
| 1 | மேஷம் | 0-30 | சித்திரை |
| 2 | ரிஷபம் | 30 -60 | வைகாசி |
| 3 | மிதுனம் | 60-90 | ஆனி |
| 4 | கடகம் | 90-120 | ஆடி |
| 5 | சிம்மம் | 120-150 | ஆவணி |
| 6 | கன்னி | 150-180 | புரட்டாசி |
| 7 | துலாம் | 180-210 | ஐப்பசி |
| 8 | விருச்சிகம் | 210-240 | கார்த்திகை |
| 9 | தனுசு | 240-270 | மார்கழி |
| 10 | மகரம் | 270-300 | தை |
| 11 | கும்பம் | 300-330 | மாசி |
| 12 | மீனம் | 330-360 | பங்குனி |


### 1.5. இராசிக் கட்டம்

360 பாகை (டிகிரி) உள்ள விஞ்ஞானப் படத்தை மக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளுவதற்காக, கீழ்க்கண்டவாறு 12 இராசிக் கட்டங்களாக ஜாதக வரைபடத்தை அமைத்தனர் நம் முன்னோர்கள்.

காலச்சக்கர வரிசையாக 1 முதல் 12 வரை, மேஷம் முதல் மீனம் வரை இராசிக் கட்டங்களே சோதிடவியலுக்கு அடிப்படை வரைபடமாகும். படம்-2 இராசிக் கட்டம் காண்க.

ஒரு குழந்தை பிறக்கும்போது, அக்குழந்தையின் பிறந்த தேதி, நேரத்தில் 9 கிரகங்களும் எந்தெந்த பாகையில் அதாவது எந்தெந்த இராசிக்கட்டத்தில் வலம் வருகின்றன என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவதே ஜாதகக் கட்டங்களாகும்.

***படம்-1 : வானமும் இராசிகளும்***




***படம்-2 : இராசிக் கட்டம்***

| | | | |
|---|---|---|---|
| 12 மீனம் | 1 மேஷம் | 2 ரிஷபம் | 3 மிதுனம் |
| 11 கும்பம் | இராசி | | 4 கடகம் |
| 10 மகரம் | | | 5 சிம்மம் |
| 9 தனுசு | 8 விருச்சிகம் | 7 துலாம் | 6 கன்னி |

சந்திரன் எந்த இராசிக்கட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கிறதோ, அவர் அந்த இராசிக்காரர் ஆவார். எடுத்துக்காட்டாக, சந்திரன் 140 பாகையில் இப்போது இன்று இருக்கிறது என்றால் 5 ஆவது இராசியான சிம்மம் இராசியில் சந்திரன் உள்ளது என்று பொருள். சந்திரன் இருக்கும் நிலையைக் குறிக்க, 5 ஆவது இராசிக் கட்டத்தில் சந்திரன் என்று எழுத வேண்டும். இந்நிலையில் பிறந்த குழந்தை சிம்மம் இராசிக்காரர் ஆவார்.

இவ்வாறு 9 கிரகங்களும் வான வீதியில் வலம் வரும்போது அவை எங்கு இருக்கின்றன என்பதைக் காட்டவே இராசிக் கட்டங்கள் பயன்படுகின்றன.

### 1.6. 27 நட்சத்திரங்கள்

இரவில் வானில் பலகோடி நட்சத்திரங்களைப் பார்க்கிறோம். சந்திரன் பூமியை ஒரு முறை சுற்றி வர 27 நாட்களை எடுத்துக் கொள்கிறது. ஒவ்வொரு நாளும் வானில் வெவ்வேறு இடத்தில் சந்திரன் காணப்படுகிறது. சந்திரனுக்குப் பின்னால் வானில் ஒவ்வொரு நாளும் சில நட்சத்திரங்கள் தொகுப்பாக இருப்பதைக் காணலாம். வான்வெளியை 360 பாகையை 27 நட்சத்திரத் தொகுதிகளாகப் பிரித்து பெயரிட்டுள்ளனர். அவை:

| | | |
|---|---|---|
| 1. அசுபதி | 10. மகம் | 19. மூலம் |
| 2. பரணி | 11. பூரம் | 20. பூராடம் |
| 3. கார்த்திகை | 12. உத்திரம் | 21. உத்திராடம் |
| 4. ரோகிணி | 13. ஹஸ்தம் | 22. திருவோணம் |
| 5. மிருகசீரிஷம் | 14. சித்திரை | 23. அவிட்டம் |
| 6. திருவாதிரை | 15. சுவாதி | 24. சதயம் |
| 7. புனர்பூசம் | 16. விசாகம் | 25.பூரட்டாதி |
| 8. பூசம் | 17. அனுஷம் | 26. உத்திரட்டாதி |
| 9. ஆயில்யம் | 18. கேட்டை | 27. ரேவதி |

நட்சத்திரங்களை விண்மீன் என்றும் உடு என்றும் அழைப்பர்.

ஒரு குழந்தை பிறந்த நாளில் சந்திரனுக்குப் பின்னால் வானில் தெரிகின்ற நட்சத்திரமே அக்குழந்தையின் பிறந்த நாள் நட்சத்திரமாகும். நாட்காட்டியில் அன்றைய தேதியில் என்ன நட்சத்திரம் என்றும் எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரைக்கும் ஒரு நட்சத்திரம் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும். சுமாராக 24 மணி நேரம். ஒவ்வொரு நாளும் சிறிது வேறுபடும். பிறந்த நேரத்தைப் பொறுத்தும் பிறந்த நட்சத்திரத்தை அறியலாம். அந்த வருடப் பஞ்சாங்கத்திலும் காணலாம்.

ஒவ்வொரு நட்சத்திரத்தில் பிறந்தவருக்கும் ஒவ்வொரு விதமான குணங்கள் அமைந்துள்ளதாக சோதிடக்கலை இயம்புகிறது. அவற்றைப் பின்னர் பார்ப்போம்.

27 நட்சத்திரங்களும் 12 இராசிகளுக்குள் அடங்குவதால் ஓர் இராசிக்கு 2 1/4 நட்சத்திரங்கள் ஆகும். முதல் இராசியான மேஷ இராசியில் அசுபதி, பரணி, கார்த்திகை என்று தொடங்கி, மீனம் இராசி வரையில் பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என்று 27 நட்சத்திரங்களும் முடிவடைகின்றன.

மேஷ இராசியில் அசுபதி, பரணி என்ற இரண்டு முழு நட்சத்திரங்களும் கார்த்திகை நட்சத்திரத்தில் கால் (1/4) பகுதியும் அமைகின்றன.

1/4 என்று குறிப்பதற்காக, ஒரு நட்சத்திரத்தை 4 பாதங்களாகப் பிரித்தனர். எனவே, மேஷம் இராசியில் அசுபதி 1, 2, 3, 4 பாதங்களும், பரணி 1, 2, 3, 4 பாதங்களும், கார்த்திகை 1 ஆம் பாதம் மட்டும் உள்ளன. எனவே, ஓர் இராசியில் மொத்தம் 9 பாதங்கள் உள்ளன.

அதைத் தொடர்ந்து ரிஷபம் இராசியில் கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்களும், ரோகிணி 1, 2, 3, 4 பாதங்களும் மிருக சீரிஷம் 1, 2 ஆம் பாதங்களும் அடங்கும். இவ்வாறு 27 நட்சத்திரங்களுக்கும் மொத்தம் 27 X 4 = 108 பாதங்கள் உள்ளன.

ஒருவர் பரணி நட்சத்திரத்தன்று பிறந்தார் என்றால் அவர் மேஷ இராசிக்காரர் ஆவார்.

### 1.7. இராசியும் நட்சத்திரப் பாதங்களும்

ஒவ்வொரு இராசிக்கும் உரிய நட்சத்திரங்களும் அவற்றின் பாதங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| எண் | இராசி | நட்சத்திரங்கள் பெயர் | | |
|---|---|---|---|---|
| 1 | மேஷம் | அசுபதி | பரணி | கார்த்திகை 1 |
| 2 | ரிஷபம் | கார்த்திகை 2, 3, 4 | ரோகிணி | மிருகசீரிஷம் 1, 2 |
| 3 | மிதுனம் | மிருகசீரிஷம் 3,4 | திருவாதிரை | புனர்பூசம் 1, 2, 3 |
| 4 | கடகம் | புனர்பூசம் 4 | பூசம் | ஆயில்யம் |
| 5 | சிம்மம் | மகம் | பூரம் | உத்திரம் 1 |
| 6 | கன்னி | உத்திரம் 2, 3, 4 | ஹஸ்தம் | சித்திரை 1, 2 |
| 7 | துலாம் | சித்திரை 3, 4 | சுவாதி | விசாகம் 1, 2, 3 |
| 8 | விருச்சிகம் | விசாகம் 4 | அனுஷம் | கேட்டை |
| 9 | தனுசு | மூலம் | பூராடம் | உத்திராடம் 1 |
| 10 | மகரம் | உத்திராடம் 2, 3, 4 | திருவோணம் | அவிட்டம் 1, 2 |
| 11 | கும்பம் | அவிட்டம் 3, 4 | சதயம் | பூரட்டாதி 1, 2, 3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | மீனம் | பூரட்டாதி 4 | உத்திரட்டாதி | ரேவதி |

ஒருவர் மிருகசீரிஷம் 3 ஆம் பாதத்தில் பிறந்தார் எனில் அவர் மிதுனம் இராசிக்காரர் ஆவார். அவரே மிருகசீரிஷம் 1 ஆம் பாதத்தில் பிறந்தார் என்றால் அவர் மேஷம் இராசிக்காரர் ஆவார்.

### 1.8. நட்சத்திரங்களும், கிரகங்களின் தெசை அமைப்பும்

27 நட்சத்திரங்களும் 9 கிரகங்களும் இருப்பதை அறிவோம். ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு கிரகத்தின் சாரம் பெற்று அமைந்துள்ளது என முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளனர். 27 நட்சத்திரங்களையும் 9 கிரகங்களின் ஆளுமைக்கு உட்படுவதால் ஒரு கிரகத்திற்கு 3 நடசத்திரங்கள் என வகைப்படுத்தினர்.

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் அதற்குரிய கிரகம், அந்தக் கிரகத் தெசை ஆண்டுகள் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **எண்** | **நட்சத்திரங்கள்** | | | **கிரகம்** | **தெசை ஆண்டுகள்** |
|---|---|---|---|---|---|
| 1. | அசுபதி | மகம் | மூலம் | கேது | 7 |
| 2. | பரணி | பூரம் | பூராடம் | சுக்கிரன் | 20 |
| 3. | கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் | சூரியன் | 6 |
| 4. | ரோகிணி | ஹஸ்தம் | திருவோணம் | சந்திரன் | 10 |
| 5. | மிருகசீரிஷம் | சித்திரை | அவிட்டம் | செவ்வாய் | 7 |
| 6. | திருவாதிரை | சுவாதி | சதயம் | இராகு | 18 |
| 7. | புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி | குரு | 16 |
| 8. | பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி | சனி | 19 |
| 9. | ஆயில்யம் | கேட்டை | ரேவதி | புதன் | 17 |
| | | | | மொத்தம் | 120 ஆண்டுகள். |

இதன்படி ஒருவர் பிறந்த நட்சத்திரம் அசுபதி அல்லது மகம் அல்லது மூலம் என்றால் அவர் கேதுவின் சாரம் பெற்றுள்ளார் என்று பொருள். அவர் கேதுவின் ஆளுமையில் உள்ளவர் ஆவார்.

**தெசை**

ஒரு மனிதன் 120 ஆண்டுகள் வாழ முடியும். 120 ஆண்டுகளும் 9 கிரகங்களின் ஆளுமையில் நடைபெறுகிறது. அதைத் தெசை அல்லது நிலை என்று அழைப்பர்.

ஒரு நட்சத்திரத்தில் பிறந்தவருக்கு அந்த நட்சத்திரத்திற்கு உரிய கிரகத்தின் தெசை அல்லது நிலையில் வாழ்க்கை தொடங்கும். ஒவ்வொரு கிரகத்தின் தெசைக்கும் குறிப்பிட்ட ஆண்டுகள் காலம் எனக் கணக்கிட்டுள்ளனர். அவை:

1. கேது 7 ஆண்டுகள்,
2. சுக்கிரன் 20 ஆண்டுகள்
3. சூரியன் 6 ஆண்டுகள்
4. சந்திரன் 10 ஆண்டுகள்
5. செவ்வாய் 7 ஆண்டுகள்
6. இராகு 18 ஆண்டுகள்
7. குரு 16 ஆண்டுகள்
8. சனி 19 ஆண்டுகள்
9. புதன் 17 ஆண்டுகள்

மேலே குறிப்பிட்ட வரிசையில் 9 தெசைகள் வரும் .மொத்தம் 120 ஆண்டுகள்..

அசுபதி, மகம், மூலம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு கேது தெசையில் வாழ்க்கை தொடங்கி சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, குரு, சனி, புதன் என்ற வரிசையில் வாழ்க்கை முறை அமையும்.

சுக்கிரன் தெசைக்கு அதிகமான ஆண்டுகள் 20 ஆண்டுகள். சூரியனுக்குக் குறைவான தெசை 6 ஆண்டுகள். பிறக்கும்போது ஒருவருக்கு முழுதெசைக்கான ஆண்டுகள் இருப்பதில்லை. அந்த நட்சத்திரத்தின் எந்தப் பாதத்தில் பிறந்தாரோ அதைப் பொறுத்து இருப்பு தெசை மாறும்.

எடுத்துக்காட்டாக, ஒருவர் திருவோணம் நட்சத்திரம் 2 ஆம் பாதம் தொடக்கத்தில் பிறந்திருந்தால், ஒரு பாதம் தாயின் வயிற்றில் போக, மீதி 3 பாதங்களே இருப்பு ஆகும்.

திருவோணம் நட்சத்திரத்திற்குச் சந்திரன் தசை 10 ஆண்டுகள். எனவே, இருப்புச் சந்திரன் தெசை 3 பாதம் × 10/4 = 7 ஆண்டு 6 மாதம் ஆகும்.

திருவோண நட்சத்திரக்காரருக்கு சந்திரன் இருப்புத் தெசை :7 வருடம் 6 மாதம்

அடுத்து செவ்வாய் தெசை :7 வருடம்

அடுத்து இராகு தெசை : 18 வருடம் என வரிசையாக வாழ்க்கை தொடரும்.

எந்தத் தெசையில் என்ன நடக்கும் என்பதைத் தெரிந்த கொள்ளவே தெசை விவரங்கள் அவசியமாகின்றன. துல்லியமாகக் கணக்கிடுவதைப் பின்னர் ஜாதகக் கணிதத்தில் தெரிந்த கொள்ளலாம்.இந்தப் பாடப்பகுதி மூலம் சோதிடக்கலையின் அடிப்படையை அறிய முடிகிறது.

* * * * *

பொதுவாக அறிவியல் கண்டுபிடிப்புகள், புதுவகை மாற்றங்கள். எளிய வழிகளில் பயன்படுத்தும் முறைகள் கண்டுபிடிக்கப்படுவதாலும், ஒரு சில ஆண்டுகளில் மாற்றம் பெறுகின்றன. புகை வண்டி, வானொலி போன்றவைகளின் வடிவமைப்பு மாற்றங்கள் இவற்றுக்கு எடுத்தக்காட்டுகளாகும். ஆனால், செவி வழியாய் கற்பித்து வரும் வேதங்கள் நான்கிலும் கிரக அமைப்புகளிலும் இதுவரை மாற்றங்கள் செய்யப்படவில்லை. பலன்கள் சொல்வதிலும் நட்சத்திரப் பழமொழிகளைத் தானுணர்ந்ததைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதிலும் மட்டும் மாற்றங்கள உள்ளன. அவை அடிக்கடி நிகழ்ந்துள்ளன.

பொதுவாக ஒன்பது கிரகங்களை நவக்கிரகங்கள் என்று அழைப்பதும், நட்சத்திரங்கள் 27 என்பதுவும் யாவரும் அறிந்ததே. இராகு – கேது நீங்கலாக ஏழு கிரகங்கள். அவை முறையே சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பனவாகும்.

ஒவ்வொரு நாளும் மேற்கண்ட வரிசைக் கிரமத்தில் ஞாயிறு முதல் நாள் எனக் கொண்டு ஒரு வாரத்திற்கு ஏழு கிழமைகள் என்று பெயரிட்டனர். கிழமை என்றால் தலைமை என்று பொருள். தமிழிலக்கியத்தில் தலைவனைக் கிழவன் என்றும், தலைவியைக் கிழவி என்றும் அழைப்பர். திங்கள் தலைமையிலான நாள் திங்கட்கிழமை என்றும் வரிசையில் அமைக்கப்பட்டது. அந்தந்த நாட்களில் அந்தந்தக் கிரகத்தின் தன்மையைப் பொறுத்து நாள் (கிழமை) அமையும். இப்படி ஞாயிறு முதல் சனி ஈறாக ஏழு நாட்கள் அமைக்கப்பட்டன. இராகு, கேது இரண்டும் சாயா (நிழல்) கிரகங்கள் என்பதால் கிழமை ஒதுக்கப்படவில்லை என்பதும் அறியத்தக்கது.

கிரகங்கள் ஒன்பது என்பது போல் நட்சத்திரங்களும் 27 என்றாலும், ஒன்பது வகையானவைகளே. ஒவ்வொரு நட்சத்திரங்களும் மூன்று பெயர்களுள்ள நட்சத்திரக் கூட்டமாய் இருப்பது சான்று.

இனி கிரகங்கள் – நட்சத்திரங்கள் அமைப்பைப் பார்ப்போம்.

1. சூரியன் – கார்த்திகை, உத்திரம், உத்திராடம்.
2. சந்திரன் – ரோகிணி, ஹஸ்தம், திருவோணம்.
3. செவ்வாய் – மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம்.
4. புதன் – ஆயில்யம், கேட்டை, ரேவதி.
5. குரு (வியாழன்) – புனர்பூசம், விசாகம், பூரட்டாதி.
6. சுக்கிரன் (வெள்ளி) – பரணி, பூரம், பூராடம்.
7. சனி – பூசம், அனுஷம், உத்திரட்டாதி.

8. இராகு – திருவாதிரை, சுவாதி, சதயம்.

9. கேது – அசுபதி, மகம், மூலம்.

என்ற வரிசையில் கிரகங்கள் அமைந்துள்ளன.

ஆனால், சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, குரு, சனி, புதன், கேது, சுக்கிரன் என்ற அமைப்பிலேயே மனித வாழ்வு தெசா புத்திகள் அமைக்கப்பட்டுள்ளன.

## 2.1. தெசைகள்

மனிதனுக்கு பூரண ஆயுள் என்பது 120 ஆண்டுகள். அதாவது, ஒருவர் எந்தத் தெசையில் பிறக்கிறாரோ, அதே தெசை மீண்டும் வரும் போது 120 ஆகியிருக்கும். தெசை என்றால் நிலை அல்லது காலம் என்று பொருள். சிலர் இதைத் திசை என்று எழுதுவார்கள். இது சரியானதல்ல. தெசை அல்லது தசை என்று எழுதுவதே சரியானது. திசை என்பது கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்கிற நால்வகைத் திசைகளைக் குறிக்கும்.

* அசுபதி, மகம், மூலம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குக் **கேது**, சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, குரு தெசை என்ற வரிசையில் வாழ்வு முறை அமையும்.

* பரணி, பூரம், பூராடம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குச் **சுக்கிரன்**, சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, குரு, சனி தெசை என்ற வரிசையில் வாழ்வு தெசைகள் அமையும்.

* கார்த்திகை, உத்திரம், உத்திராடம் நட்சத்திரக்காரர்களுக்குச் **சூரியன்,** சந்திரன் செவ்வாய், இராகு, குரு, சனி, புதன் தெசை என்ற வரிசையில் வாழ்வு தெசைகள் அமையும்.

* ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் நட்சத்திரக்காரர்களுக்குச் **சந்திரன்**, செவ்வாய், இராகு, குரு, சனி, புதன், கேது தெசை என்ற வரிசையில் வாழ்வு தெசைகள் அமையும்.

* மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரக்காரர்களுக்குச் **செவ்வாய்,** இராகு, குரு, சனி புதன், கேது, சுக்கிரன், சூரியன் தெசை என்ற வரிசையில் வாழ்வு தெசைகள் அமையும்.

* திருவாதிரை, சுவாதி, சதயம் நட்சத்திரக்காரர்களுக்கு, **இராகு,** குரு, சனி, புதன், கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன் தெசை என்ற வரிசையில் வாழ்வு தெசைகள் அமையும்.

* புனர்பூசம், விசாகம், பூரட்டாதி நட்சத்திரக்காரர்களுக்குக் **குரு,** சனி, புதன், கேது, சுக்கிரன், சூரியன் சந்திரன், செவ்வாய் தெசை என்ற வரிசையில் வாழ்வு தெசைகள் அமையும்.

* பூசம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்திரக்காரர்களுக்குச் **சனி**, புதன், கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு தெசை என்ற வரிசையில் வாழ்வு தெசைகள் அமையும்.

* ஆயில்யம், கேட்டை, ரேவதி நட்சத்திரக்காரர்களுக்குப் **புதன்**, கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, குரு தெசை என்ற வரிசையில் வாழ்வு தெசைகள் அமையும்.

ஒவ்வொரு மனிதரும் குறைந்த பட்சம் ஏழு தெசைகள் வரை ஆயுள் பலம் கொண்டவராய் இருப்பார்கள். அதற்கு மேல் விரல் விட்டு எண்ணும் அளவிற்கு நீண்ட ஆயுள் உள்ளவரும் இருப்பார்கள். ஆறு தெசைகள் முடிந்துவிட்டால், ஆயுள் முடிந்துவிடும் என்ற தவறான கருத்தும் உள்ளது. அப்படிப் பார்த்தால், சூரியத் தெசையில் பிறப்பவர்களுக்கு 23 வயதிற்குள் மூன்று தெசைகள் கடந்து விடும். அவர்கள் 60 வயதுதான் இருப்பார்கள் என்று சொல்வது சரியில்லை, அது போல் இராகு தெசையில் பிறப்பவர்கள் மூன்று தெசைகள் முடிய 65 வருடங்கள் ஆகும், அவர்கள் 90 வயதுவரை வாழ்வார்கள் என்பதுவும் சரியில்லை. ஆயுள் ஸ்தானத்தைப் பொறுத்தே ஆயுள் பலம் அமையும்.

**மகா தெசைகள் 3:**

இத்தெசைகளில் மகா தெசைகள் என்பவை காலக்கணக்கில் அமைந்தவை அல்ல. மிகச் சிறிய தெசை சூரியத் தெசை (6 ஆண்டுகள்). மிகப் பெரிய தெசை சுக்கிரன் தெசை (20 ஆண்டுகள்). ஆனால், ஜாதகம் எழுதும் போது, சூரிய மகா தெசை என்றோ, சுக்கிர மகா தெசை என்றோ எழுத வேண்டியதில்லை. எனினும் புதன் மகா தெசை, குரு மகா தெசை, சனி மகா தெசை என்றே சோதிடர்கள் எழுதுவர்.

புதன் மகாவிஷ்ணுவின் அம்சம். எனவே, ஆயில்யம், கேட்டை, ரேவதியில் பிறந்தவர்களுக்கு ஜாதகம் எழுதும் போது, புதன் மகா தெசை என்று எழுத வேண்டும்.

குரு தேவர்களுக்கு ஆசான். எனவே, புனர்பூசம், விசாகம், பூரட்டாதியில் பிறந்தவர்களுக்கு ஜாதகம் எழுதும் போது குரு மகா தெசை என்று எழுத வேண்டும்.

சனி தொழிலாளர் சங்கத் தலைவர் போன்றவர். எனவே, பூசம், அனுஷம், உத்திரட்டாதியில் பிறந்தவர்களுக்குச் சனி மகா தெசை என்று எழுத வேண்டும்.

மற்றபடி சூரிய தெசை, சந்திர தெசை, செவ்வாய் தெசை, இராகு தெசை, கேது தெசை, சுக்கிர தெசை கர்ப்ப செல் போக, இருப்பு என்று எழுதினால் போதும். எனவே, புதன், குரு, சனி மூன்று கோள்களுமே மகா தெசை அந்தஸ்து பெறுகின்றன என உணரலாம்.

கிரகங்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான பலன்களைத் தராது. அவை லக்னத்தில் இருந்து எத்தனையாவது வீட்டில் உள்ளது? எந்தக் கிரகத்தால் பார்க்கப்படுகிறது? அதன் உச்சம், நீச்சம், ஆட்சி, வர்கோத்தமம் நிலையைப் பொறுத்தே பலன்கள் அமைகின்றன. அதேபோல், அந்தக் கால கட்டத்தில் குரு, சனி, இராகு– கேது ஆகியவற்றின் கோச்சாரப் பலன்களை அனுசரித்தும், நன்மை, தீமை, கூடவோ, குறையவோ நிகழும். இதனைச் சோதிடர்கள் மனதில் கொள்வது நல்லது.

சூரியனுக்கு ஆதித்தியன், பரிதி, ஞாயிறு என்றும், சந்திரனுக்குத் திங்கள் உட்பட 60 பெயர்களும், செவ்வாய்க்குக் குஜன், அங்காரகன் என்றும், புதனுக்குச் சௌமியன், பௌமன் என்றும், குருவுக்கு வியாழன், பிரகஸ்பதி என்றும், சுக்கிரனுக்கு வெள்ளி, ப்ருகு என்றும், இராகுவுக்குச் செம்பாம்பு என்றும், கேதுவுக்குக் கரும்பாம்பு என்றும் பெயர்கள் உள்ளன.

OOOOO

## 2.2. நட்சத்திரங்களின் தன்மைகள்

அசுபதி முதல் ரேவதி வரை ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் உட்பொருள்கள் உள்ளன. இதில் திருவாதிரை, திருவோணம் என்ற ஆதிரை, ஓணம் ஆகிய நட்சத்திரங்கள் சிவன், விஷ்ணு அம்சத்தில்

உள்ளதால் திரு அடைமொழி பெறுகின்றன. ஏனைய 25 நட்சத்திரங்களுக்கும் திரு அடைமொழி கிடையாது.

பொதுவாக 27 நட்சத்திரங்கள் என்று இருந்தாலும் 28 ஆவதாக அபிஜித் என்று ஒரு நட்சத்திரம் இருப்பதாகக் கூறுவர். நட்சத்திரங்களுக்கு உடு என்ற பெயரும் விண்மீன் என்ற பெயரும் உண்டு. 27 நட்சத்திரங்களுக்கு உட்பொருள் உண்டு.நட்சத்திரங்களுக்கு முக்கியத்துவம் தரும் கோயில் கர்நாடகா மாநிலத்தில் உள்ளது.

இனி நட்சத்திரங்களும் அதன் தன்மைகள் பற்றியும் காண்போம்.

**1) அசுபதி**

இதனை அசுவினி என்றும் கூறுவர். ஆஸ்வீனம் மாதம் தாக்கமுள்ளதால், இப்பெயர் வந்தது. குதிரையின் வடிவமுள்ள இந்த நட்சத்திரம் முதல் நட்சத்திரம். கேது – செவ்வாயுடன் சம்பந்தப்பட்டு, மின்னியல், வேதியியல், மருத்துவம் தொழிலுக்கு வழிகாட்டும். சீனா, மங்கோலிய நாட்டைக் குறிக்கும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் கவிஞர்களாய் இருப்பர். பாடல் புனைவதிலும், பாடுவதிலும் தடகளப்போட்டிகளில் கலந்து கொள்வதிலும் ஆர்வமுள்ளவராய் இருப்பர். இவர்கள் காலி மனை வைத்திருந்தால், அரசாங்கம் பறிமுதல் செய்யும். பளிங்கு வீடு கட்டுவார். கவிஞர் கண்ணதாசனின் நட்சத்திரம் இதுவே.

**2) பரணி**

மணிமாலை போன்றது. கீரிடம் போன்றது. ஆபரணம் பரணம் அபபரணி என்றும் கூறுவர். இது இயமன் நட்சத்திரம். போர் மற்றும் மல்யுத்தம் சம்பந்தமான தொழில் உண்டு. இது இரண்டாவது நட்சத்திரம். அசுபதி போன்றே இதுவும் ஒரே இராசியில் அமைந்த பூரண நட்சத்திரம். செவ்வாய், சுக்கிரன் உடன் சம்பந்தப்பட்ட நட்சத்திரம். துணிமணிகள், வாகனப் போக்குவரத்து தொழில் சம்பந்தப்பட்டது. ரங்கூன், ரஷ்யா நாட்டுத் தொடர்பை உண்டாக்கும். இந்த நட்சத்திரக்காரர்கள் பேராசிரியர்கள், மருத்துவர்கள், மேலாளர், நடிகராய் இருப்பர். கலைஞர்களுக்குப் பரிசு தரும் குணமுள்ளவர். இந்தியன் வங்கி போன்று ஒரு தேசப் பெயருள்ள வங்கித் தொடர்பு உள்ளவர். கூட்டுக் குடும்ப இலாபம் உள்ளவர். நகரத்தார் ஆதரவு பெற்றவர். வேளாங்கன்னி அருள் உள்ளவர். சாபம் இடும் குணம் உள்ளவர். சமையலறையில் அமர்ந்து பாடம் படிப்பார்.

**3) கார்த்திகை**

இது 3–ஆவது நட்சத்திரம். ஆறுமுகம் உள்ளது. கிருத்திகை எனும் பெயரும் உண்டு. நாடகம், ஏலச்சீட்டு தொடர்பு உண்டு. இரயில் தண்டவாளப் பாதையில் இடர் உண்டாகும். இந்த நட்சத்திரக்காரர்களுக்குக் கடனுபாதை மற்றும் முகமதியராய் மதம் மாறும் வாய்ப்பும் உண்டு. நிலக்கரி தொழில் தொடர்பு உள்ளது. திருமண விசயங்களில் சுய முடிவு எடுப்பார். கல்லூரி முதல்வர் போன்றவர். இது பூரண நட்சத்திரம் அல்ல. பேச்சாற்றல் உள்ளவர். ரிஷப இராசியில் பிறந்தவர்கள் உணர்ச்சி வயப்படுவர். சுக்கிரனுக்கும் சூரியனுக்கும் தொடர்புள்ள நட்சத்திரம். 3 வீடுகள் உள்ளவர். புத்திர இலாபம் குறைவு. பர்மா, நாகாலாந்தைக் குறிக்கும்.

### 4) ரோகிணி

சந்திரன், சுக்கிரன் தொடர்புள்ள நட்சத்திரம். உரோகிணி என்னும் பெயர் உண்டு. நீண்ட ஆயுள் உள்ளவர். உட்புற விளையாட்டுகளால் இலாபம் உண்டு. இவர்கள் காசிக்கயிறு அணிவதால் இடருறுவர். வேடிக்கையாய்ப் பேசுவதால் இடருறுவார். கோவிலுக்கு வசூல் செய்வதால் இடருறுவார். நெடுஞ்சாலை, குடிநீர் வாரியம், பொதுப்பணித்துறை தொடர்பு உண்டு. குளிர்ந்த மனமுள்ளவர். சமத்துவமாய்ப் பழகுவதால் இருபாலர் வெறுப்புக்கு ஆளாவார். பிறருக்கு நல்லுபதேசம் செய்வார். ஜப்பான், ஹாங்காங் தொடர்பை உண்டாக்கும். பணமுடை உண்டு. கூட்டுறவுப் பண்டகசாலை முதல்வராவார். கடல் தாண்டும் யோகமுண்டு. தாயாரைப் பெயர்சொல்லி அழைப்பதும், மனைவி / கணவரைத் திட்டும் சுபாவமும் உண்டு. முதுநிலை வணிக மேலாண்மை படிப்பு அமையும். பொறியியல் கல்வி அமையும். சுயம்வரத் திருமணம். பாம்பு அமைப்புள்ளது. பகவான்கிருஷ்ணர் நட்சத்திரம். கடைவீதியில் வீடு அமையும். கலெக்டர் அலுவலகத் தொடர்பும் உண்டாகும்.

### 5) மிருகசீரிஷம்

மிருகத்தின் தலை போன்ற அமைப்புள்ளது. வாராகி, அனுமான், விநாயகர், கல்கி, நரசிம்மர் போன்ற தெய்வங்களுடனும், கொரியா தொடர்பும் கொண்டது. இந்த இராசிக்காரர்கள் சத்திய சாய்பாபா அருள் உள்ளவர்கள். மறந்தோம், மன்னித்தோம் என்னும் குணம் உள்ளவர். கேலி பேசுவார். மடத்தனமாய்த் தியாகம் செய்வார். சிலர் ஏளனத்துக்கு ஆளாவார். தனக்குத்தானே பேசிக்கொள்ளும் இவர் குடும்பத்தவரைவிடப் பிறருக்கே ஆதரவாய் இருப்பார். கலப்பு மணம், பிறர் அழகை இரசிப்பது தவறல்ல என்னும் கொள்கை உள்ளவர். இவர் கணவர்/மனைவி இரு பாலருக்கும் பலமாய், பலவீனமாய் இருப்பார். மருத்துவராகும் கனவு பலிக்காது. புகுந்த வீட்டில் வேலைக்காரி போல் வேலை செய்வார். குடும்பப் பொறுப்பு உண்டு.

### 6) திருவாதிரை

ஆதிரை, ஆருத்ரா என்றும் அழைக்கப்படும் இந்த நட்சத்திரத்துக்குத் திரு அடைமொழி உண்டு. ரோகிணி போன்றே இதுவும் முழு நட்சத்திரம். முகமதியர் ஆதரவும், நாயுடு, பிள்ளைமார் இனமக்கள் விரோதமும் உண்டு. சந்நியாசி போன்றவர். நண்பர்கள் அதிகமுள்ளவர். பிறர் மனம் புண்படப் பேசுவார். இவரது சொத்துக்கள் அவருடைய குடும்பத்தாருக்குச் சேராது. தைவான் ஹாங்காங், பஃக்ரைன் போன்ற நாட்டின் தொடர்பு உண்டு. சிறு வயதில் மஞ்சட்காமாலை நோய்க்கு ஆளாவார். கிரிக்கெட் பிரியர். மேலாளர். புத்திரரால் இலாபம் இருக்காது. மன்னர் போன்று இருப்பார். சொல்லிக் காட்டுவார். இது இராகுவுக்கு உரிய நட்சத்திரம். ஆதிசங்கரர் நட்சத்திரம். நாட்டியத்தில் ஈடுபாடு உள்ளவர். சிவபெருமானுக்கு உகந்த நட்சத்திரம்.

### 7) புனர்பூசம்

புதன், சந்திரன், குருவுக்குச் சொந்தமானது. இந்த இராசிக்காரர்கள் மனிதவள மேம்பாட்டுத் துறையினராய் இருப்பர். சிங்கப்பூர் தொடர்பு உண்டு. மலையாள மக்களால் இடருண்டு. ஏமாற்றமுள்ளவர். செஸ் விளையாடுவார். பயம், ஏமாற்றம், ஏக்கமுள்ளவர். நாய்–பூனை வளர்ப்பதால் இடருண்டு. சமயத்தில் இவர் உதவி யாருக்கும் போய்ச் சேராது. கடலோரத்து ஊர் தெய்வ அருளுண்டு. ஆசிரியர், ஆலோசகர் போன்று இருப்பார். கம்பெனி செயலாளர் படிப்பு படிப்பார். மத்திய வயதில் வீண் பழியைச் சுமப்பார். விமான வழிப் போக்குவரத்து, பெட்ரோ கெமிக்கல், சிமெண்ட் ஆதாயம் உண்டு. ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் நட்சத்திரம்.

### 8) பூசம்

குள்ள உருவமுள்ளவர். அனைவர் வெறுப்புக்கும் சதிக்கும் ஆளாவார். விற்பனை மற்றும் சந்தையியல் தொடர்பு உண்டு. குடும்பச் சுமை உண்டு. இது பூரண நட்சத்திரம். வாழ்வில் அவ்வப்போது நல்லவை நிகழும். மூர்க்க குணம் உண்டு. கம்பெனி வணிகப் பயணம் சென்று இலாபம் ஈட்டுவார். மனைவிக்குக் கணவரும், கணவருக்கு மனைவியும் தவிர மற்ற யாரும் உதவ மாட்டார்கள். பிறரைக் கேலி பேசுவது, அடக்குவது இவர்கள் குணம். இவரோடு பயணம் செய்பவர்களுக்குத் தொல்லை தருவார். துறவி போன்று இருந்தாலும் பிறர் பொருளை, பிற சொந்தக்காரர்களின் பொருளை உரிமையுடன் அவர்கள் அனுமதியின்றிப் பயன்படுத்துவார். தாயின் அன்பை இழப்பார். அறிஞர் அண்ணா, ஆம்ஸ்ட்ராங், கிருபானந்தவாரியார் ஆகியோர் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்.

**9) ஆயில்யம்**

இதுவும் பூரண நட்சத்திரம். ஆதிசேடன் நட்சத்திரம். 96 வயது ஆயுள் பலம் உள்ளது. ஊழியர் நலத்துறை தொடர்பு உள்ளது. வைப்பு நிதி, மருத்துவக் காப்பீட்டு அலுவலகம், தாலுக்கா அலுவலகம் தொடர்பு உள்ளது. நாகூர் ஆண்டவர் அருள், வேளாங்கன்னி மாதா அருளுண்டு. இந்த நட்சத்திரக்காரர் அடிக்கடி வெளியூர் பயணம், உல்லாசப் பயணம் போவார். தொள, தொள ஆடை அணிவார். மறைமுகமாய் நம்மை நம்முன்னே கேலி பேசுவார். நிதி கொடுக்கல் வாங்கல் தொழிலில் நட்டமுண்டு. பாலாஜி அருள் உண்டு. இவர் வீட்டின் முன் நீர் நிலை இருக்கும். தலைமை ஆசிரியர் பணி அமையும். ஊசி ஆயுதங்கள் மூலம் இடருறுவார்.

**10) மகம்**

மகம் ஜகம் ஆளும் என்பதற்கு இணங்க, இந்த நட்சத்திரக்காரர்கள் பெரும்பதவி பெறுவர். கலப்புமண உறவினர்கள் இருப்பர். ஆங்கில எல் ( L ) வடிவ வீடு அமையும். மருத்துவம் ஆர்வமுண்டு. பதிலடி தருவார். வெந்நீர் குளியல் செய்வார். நண்பர்கள் வீட்டுக்கு அடிக்கடி போவார். சுயநலவாதி போலத் தோன்றினாலும் பிறருக்கு உதவி செய்வார். குற்றவுணர்வு அற்றவர். மூன்று சகோதரிகள் அல்லது பெண்களை உடையவர். நெஞ்சு எரிச்சல் இருக்கும். பிறந்த வீட்டுப் பாசம் அதிகம் உள்ளவர். வேளாங்கன்னி மாதா அருளுள்ளவர். நீதிமன்றத் தொடர்பு உள்ளவர். கருணையும் கண்டிப்பும் உள்ளவர். பிரச்சினைக்கு உரியவர். சூரியன் + கேது அருள் உண்டு.

**11) பூரம்**

மகம், பூரம் இரண்டும் பூரண நட்சத்திரங்கள். இரட்டை நகரம் போன்றவை. இவர்கள் வீட்டில் சித்தப் பிரமை உள்ளவர் இருப்பர். சிறுவயதில் மாமா, சிற்றன்னை வீட்டு வாசம் இருக்கும். வாகனம், துணி வணிகம் செய்வார். சுகாதாரத் துறை அதிகாரியாவார். ஆண்களுக்குக் கையில் ரோமம் இராது. பெண் பூரம் நட்சத்திரக்காரருக்கு ரோமம் உண்டு. சூரியன், சுக்கிரன் அருள் உண்டு. விஷ்ணுவர்த்தன் என்ற பெயர் அனுகூலமாகும். கேந்திரிய வித்யாலயா பள்ளி தொடர்பு உண்டு. இந்தி அறிவு இருக்கும். மணவாழ்வு சுகமிருக்காது. சிறுவீட்டில் குடியிருப்பார். குடிகார உறவினர் உண்டு. அழகர். நிறையப் பேசுவார். பூசம் நட்சத்திரக்காரர் போல் தாயாரால் வெறுக்கப்படுவார். ஹைதராபாத் தொடர்பு உண்டு. இரண்டு பையன்கள் அமையும். இது ஆண்டாள் நட்சத்திரம்.

**12) உத்திரம்**

பயம், தயக்கம் உள்ளவர். இவருக்கு 17, 24, 27, 37 வயதுகள் திருமண வயதாய் அமையும். இரண்டு வீடுகள் உள்ளவர். பூரம் நட்சத்திரக்காரரால் ஈர்க்கப்படுவார். சண்டையிடும் சுபாவம் உண்டு. கல்கத்தா தொடர்பு உண்டு. கடன் உபாதை உண்டு. உடல் ஊனமுற்றவர், நோய் உள்ளவர்களை வெறுப்பார். நகைகள் கடனில் மூழ்கும். குடும்பப் பொறுப்பு ஏற்பார். ஆண்களாயின் உயர் பதவியில் இருந்தாலும் சாதாரணப் பணியாளர்களிடம் கௌரவம் பார்க்காமல் பணியாற்றுவார். சீதா பிராட்டியார் நட்சத்திரம். யாரை வெறுக்கிறாரோ அவரால் காப்பாற்றப்படுவார். வழவழ உடற்கட்டுடன் இருப்பார். கடல்சார் தொழில், கடற்கரைத் துறை நலம் தரும். இவர்களுக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளால் நலமிருக்காது. பிடிவாதமுள்ளவர். ஸ்டீபன் என்பவராலும் அரிசி அரவை ஆலை வைத்திருப்பவராலும் நலம் பெறுவார். இவருக்குப் பொதுப்பணித் துறை தொழில் உண்டு.

### 13) ஹஸ்தம்

பூரண நட்சத்திரம் தேவகணம். பிறர் பேசும் எல்லாவற்றுக்கும் இடம் தருவார். வாத்து, கோழி வளர்ப்பு ஆகியவற்றால் நலம். நாடோடி போன்றவர். 27 நட்சத்திரங்களில் நடுநாயகமான நட்சத்திரம். இந்த நட்சத்திரக்காரர் செங்கல் சூளைத் தொழில் செய்வார். இந்த நட்சத்திரப் பெண் இளம் விதவை ஆவார் அல்லது கணவரால் ஒதுக்கப்படுவாருண்டு. திருமாலின் சக்கரத்தைக் குறிப்பது. மொழி ஆசிரியர் ஆவார். தணிக்கையாளராவார். விழியால் மொழி பேசுவார். பார்வைக் குறைவுக்குக் கண்ணாடி அணிவார். சோம்பலுள்ளவர். முகப்பரு உள்ளவர். வெண்ணெய், நெய் முதலியவற்றை அதிகம் உண்பார். இவர் பாடுவது சகிக்காது. பெரும்பணம் சேரும். கல்யாணி என்பவரால் நலம். கடலூர், பாண்டிச்சேரிக்காரர்களால் நலம் உண்டு. தெரு முகப்பில் வீடு கட்டுவார்.

### 14) சித்திரை

90% இந்த நட்சத்திரக்காரர்கள் மனைவிக்குத் தொல்லை தருவர். கணவருடைய பேச்சை இந்த நட்சத்திரக்காரப் பெண்கள் கேட்க மாட்டார்கள். தூதரகத் தொழில். மத்திய அரசுப்பணி. நாடக நடிகர். சுரங்கத் தொழில் ஆகியன உண்டு. அவசரக்காரர். பிறரால் ஒதுக்கப்பட்டவர். சிறுவயது முதலே திட்டமிடாமல் வாழ்வார். சித்திரை நட்சத்திரத்து இருபாலருக்கும் மணவாழ்வில் கசப்புணர்வு உண்டாகும். மிட்டாய் உண்பார். சர்க்கரை ஆலைப்பணி வரும். வழக்காட மாட்டார். எதற்கும் துணிந்தவர். தேவைகளைக் குறைத்துக் கொள்வார். நிலக்கரி, கனிமவளம், இரயில்வேத் துறைப் பணி அமையும். கணவரும் அத்தொழிலில் வித்தகராவார். சில நேரம் பிறரைக் கௌரவித்துப் பேசுவார். ரவி, சித்ரா போன்ற பெயரினர் இவர்களுக்கு உதவி செய்வர். குஜராத் தொடர்பு உண்டு.

### 15) சுவாதி

சோதி ஒளியென்று பெயர்பெறும் இந்த நட்சத்திரம் ஒரு முழு நட்சத்திரம். இந்த நட்சத்திரக்காரர்கள் இந்தி, உருது போன்ற மொழிகள் படிக்க நேரும். நடுநிலை தவறாதவர். பிரகாசம், சத்தியா போன்ற பெயர்களுடன் அதிகத் தொடர்பு உள்ளது. சுக்கிரன், இராகு அருள் பெற்ற நட்சத்திரம். மகான்கள் இந்த நட்சத்திரத்தில் அவதரிப்பார்கள். நீதிபதி, சரக்கு வண்டி போக்குவரத்து, காய், கனி வியாபாரம் போன்ற தொழில் இவருக்கு உகந்தது. ஆள்மயக்கிகளாய் இருப்பார். கண் கூசுமளவிற்கு உடல் தூய்மைக் குறைவாய்க் காணப்படுவார். எதையும் நிதானமாய்ச் செய்வார். இவர்கள் உதவி பிறருக்குச் சமயத்தில் கிடைக்காது.

### 16) விசாகம்

பொதுவுடைமைக் கொள்கையில் நாட்டமுள்ளவர். ஆளுக்குத் தகுந்தாற்போல் பேசுவார். பள்ளிக்கூடம் நடத்துவார். வங்கி மேலாளராகவும் தலைமை கணக்காயராகவும் இருப்பார். ஆங்கில அறிவு கூடுதலாய்த் தெரியும். இவர் இருக்கும் இடம் வறுமை நிலவுவது போல் தோன்றும். ஆனால், அப்படி இல்லை. உடல் ஊனமுற்றவரிடம் அன்பு காட்டும் இவர் அவர்களையே திருமணம் செய்து கொள்வார். குடும்பத்தை எதிர்ப்பார். யானையைப் போன்ற நடையுடையவர். இவர் மலையாளிகள் மூலம் நலம் பெறுவார். மீனம் இராசிக்காரரிடம் அன்பு காட்டுவார். பழமைவாதி. அதிகம் பேசுவார்.

### 17) அனுஷம்

சாத்வீகமான நட்சத்திரம். ஆனால், இதில் சிலர் வன்கொடுமையாளராய் இருப்பர். பெரும்பாலும் மாநிலத் தலைநகரில் வசிப்பர். மற்ற தம்பதிகளைப் பிரிப்பதில் கைதேர்ந்தவர். இவர்கள் மௌனமாய் இருந்தால் பெரிய ஆபத்து. நாய்க்கடிக்கு ஆளாவார். அகிலா, புவனா போன்ற பூமிப் பெயரினர் இவர்களுக்கு உதவி செய்வர். இந்த நட்சத்திரக்காரர்களால் மற்ற ஆடவர், பெண்டிர் அவர்களது சிறுவயதில் தொல்லைக்கு ஆளாவார்கள். அனுஷ நட்சத்திரப் பெண்களால் மற்ற தம்பதியரிடையே சண்டை உண்டாகும். நீண்ட ஆயுள் 100 ஆண்டுகள் வாழும் யோகம் உள்ளவர். இவர் கார்த்திகை, சித்திரை நட்சத்திரக்காரருக்கு உகந்தவர். மத்தியஸ்தம் பேசுவார். தலைமைப் பதவி ஆன்மிக வழியில் மட்டுமே அமையும்.

### 18) கேட்டை

இவரது விரோதிகளை இவரால் மட்டுமே காப்பாற்ற முடியும். இவர்கள் விஷயத்தில் தலையிட்டால் தலையிட்டவர்களே அடங்கிப் போவர். கணிதம், சிமெண்ட் போன்ற துறை நலம் தரும். முன் பல் உடையும். பிறரைப் பற்றிக் கோள் கூறுவதில் இன்பம் துய்ப்பார். பெண்குரல் உள்ளவர். அன்புள்ளவர்கள் போன்றிருந்தாலும் இவர்கள் சற்று அபாயகரமானவர். தன்னை யாரும் ஏமாற்ற முடியாது என்ற எண்ணம் உள்ளவர். பதவி சுகமுள்ளவர். எழுது மை, பெட்ரோல், பால், டீஸல் போன்ற துறையால் நலமுண்டு. இவர் வரும்போதே ஒரு சமிக்ஞை செய்த வண்ணம் வருவார். சொல்லிக் காட்டும் குணமுள்ளவர். அருகில் உள்ளவர்கள் இவர்களிடம் பயந்தவண்ணம் இருப்பர்.

### 19) மூலம்

ஆயில்யம், மூலம் என்றாலே அலரும் நட்சத்திரங்கள். ஆனால், ஆண்மூலம் அரசாளும் பெண் மூலம் நிர்மூலம் என்பது ஒருவர் தான்பெற்ற ஆண்மகன் மூலம் வீடு கட்டினால் அரசாண்டு இருப்பார். தான்பெற்ற பெண்கள் மூலம் வீடு கட்டினால் அது அந்தப் பெண்ணின் கணவருக்கே சொந்தம் எனவே, நிர்மூலம் என்றால் பெற்றோருக்கு இல்லை என்று பொருள்படும். நதிமூலம், ரிஷிமூலம் என்பது நதியில் கிடைக்கும் பொருட்களையும், ரிஷிகளின் ஆசியைத் தவிர வேறுபொருட்களையும் பயன்படுத்தக் கூடாது என்று பொருள். நதிக்கரையில் கிடைக்கும் பொருட்கள் அமங்கல காரியங்களுக்குப் பயன்பட்டிருக்கலாம்.

இந்த நட்சத்திரக்காரர்கள் கடுகடுவென்று பேசினாலும் நல்லவர்கள், ஏழைகள், குழந்தைகளுக்கு இரக்கப்படுவர். சிறுவயதில் மாமா, சிற்றப்பா வீட்டில், பெற்றோரால் அனுப்பப்பட்டுத் துன்பப்பட்டு இருப்பர். ஹாஸ்டலில் தங்குவார். பயணத்தில் பொருளிழப்பார். யாருடைய உதவியுமின்றித் தன்னிச்சையாய் செயல்பட இயலாதவர். புத்த, ஜைன இனத்தவர் உதவி உண்டு. நடன ஆர்வமுள்ளவர். குழந்தை வளர்ப்பிலும், ஏழைகள் சிரிப்பிலும் இன்புறுவார். ஈறு, பேன் எடுப்பார். பொன் நகைகளை விட கவரிங் பொருட்களை விரும்புவார். இவர் சிரிப்பது பிறருக்கு வெறுப்பை உண்டாக்கும். நாய் வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர். பூனை வளர்ப்பில் தொல்லை உள்ளவர்.

### 20) பூராடம்

இவருக்குக் குஜராத் தொடர்பு உண்டாகும். பரோபகாரிகள். பூராடம் போராடும்; பூராடம் நூலாடாது என்பதெல்லாம் எதுகை மோனையாய் சொல்லப்பட்டவை. அவை உண்மையானதல்ல. பூராடம் நட்சத்திரக்காரர்கள் அதிகம் பேச மாட்டார்கள் என்னும் செய்தியைச் சொல்வதே பூராடம் நுவல் ஆடாது

(வாயாடாது) என்றானது. இராணுவத் தொடர்புள்ளவர். கண்தானம் செய்ய விழைவார். எல்லாரையும் நலம் விசாரிப்பார். பிறரிடம் தயங்காது இரவல் கேட்பார். விமானப் போக்குவரத்து , கிரேன் போன்ற அந்தர வண்டிகள், தொங்கும் வண்டிகள் சம்பந்தமான பணியும், பேராசிரியர் பணியும் பெற்று உய்வார். திருவாதிரை நட்சத்திரக்காரருக்கு உகந்த நண்பர். இருபாலார் ஈர்ப்புள்ளவர். நாட்டுத் தலைநகர் தொடர்பு உள்ளவர்.

**21) உத்திராடம்**

அலுவலக உதவியாளர் முதல் பிரதமர் வரை எல்லாப் பதவியிலும் இவர் இருப்பார். இவர் பயந்த சுபாவம் உள்ளவர். பிரேதத்தைப் பார்க்க மாட்டார். மறுத்துப் பேசுவார். இரண்டடுக்கு வீடு உள்ளவர். அகால உணவு அருந்துவார். வேடிக்கையாய்ப் பேசுவதாய் நினைத்து பிறரிடம் கெட்டபெயர் எடுப்பார். சூரியன், சனி ஆதிக்கமுள்ள நட்சத்திரம். இரசாயனம் இலாபமுண்டு. அழகை இரசிப்பவர். அகில இந்திய வானொலி போன்ற பொதுத்துறை நிறுவனப் பணி கிட்டும். வறுமையிலும் செம்மையானவர். இவர் பெரும்பதவியில் இருக்கும் போது புகழுடன் பழுதறப் பணியாற்ற வல்லவர். நரம்புத் தளர்வுக்கு இடம் தருவார். தன் குடும்ப விரோதிகளுக்கு அனுகூலமாய்ப் பேசுவார். என்றோ ஒரு நாள் நியாயத்துடன் நடந்து கொள்வார்.

**22) திருவோணம்**

திருமாலுடைய நட்சத்திரம். திருவாதிரை போன்று திரு அடைமொழி உடையது. திரைப்படம், கலைத்துறையில் இலாபமுள்ளது. இவர் பெற்றோர் புகழில் குளிர் காய்வார். ஸ்ரீதர் போன்ற பெயருக்கு உகந்தவர். அடிக்கடி இந்த இராசிப் பெண்களுக்குக் குணம் மாறும். ஆண்கள் நிலையான புத்தியுடன் இருப்பர். மருத்துவர் ஆவார் அல்லது மருத்துவரை மணந்து கொள்வார். பெரும்பாலும் உள்ளூரிலேயே பணியாற்றுவார். கோபத்தை வெளிக்காட்டாதவர். எல்லாரையும் பயமுறுத்துவார். காதல், தீவிரவாதம் என்று இவர்களில் சிலர் எளிதில் மாட்டிக் கொள்வர். சிறிதும் பயமற்றவர். இந்நட்சத்திரப் பெண்களின் கணவர்கள் 20% பேர்கள் வாகன விபத்தில் உயிரிழப்பர். இவர்கள் இளம் விதவைகளாவது நியதி.

**23) அவிட்டம்**

வாக்கு தவறாதவர். மாடி வீட்டில் குடியிருப்பார். சாதி வெறி உள்ளவர். தெலுங்கு அறிந்தவர். ஓர் ஊரையே எதிர்க்கும் ஆற்றலுள்ளவர். இந்த நட்சத்திரம் தங்கக்குடம் போன்று இருப்பதால் தவிட்டுப் பானையெல்லாம் தங்கம் என்பர். இது உண்மையல்ல. பால்பண்ணை, கால்நடை மருத்துவமனை

போன்ற இடங்களில் பணியாற்றுவார். புரோகிதம் செய்வார். வேலையும் குறைவு, வருமானமும் குறைவு. ஆனால், மக்களைக் கவருவதில் வல்லவர். மலைசூழ் ஊர்களில் வசிப்பார். இவர்களின் குழந்தைகள் இவரைக் காப்பாற்றமாட்டார்கள் . மனைவிவழி சுகம் அதிகம். குழந்தைகளுக்கும் திருமணம் செய்து வைக்கும் யோகமற்றவர். நோய்கள் ஏதுமின்றி 84 வயது வரை இருப்பார்.

### 24) சதயம்

இராஜ நட்சத்திரம். இது பூரண நட்சத்திரம். இவர் அழகர். சைக்கிள் கடைக்காரர்களால் இடருறுவார். நவீன் என்பவரால் நலம். ஐரோப்பிய (ஃபிரஞ்ச்) மொழி அறிந்தவர். கோவில் கட்டுவார். உயரமான இடத்தில் இருந்து விழுவார். கண்டுபிடிப்பாளர். விழியால் மொழி பேசுவார். கண் கண்ணாடியைத் துடைத்த வண்ணம் இருப்பார். முகநூல் (ஃபேஸ்புக்) மூலம் தொல்லை வரும். கஜலெஷ்மி வழிபாடு நலம் தரும். சாபமிடும் குணம் உள்ளவர். சமையலறையில் பயிலும் குணமுள்ளவர். இவர் அனைவரிடத்தும் ஒதுங்கி இருப்பார். காரணமின்றித் தன்னிலை விளக்கம் தரமாட்டார். சொல்லிக் காட்டுவார். இராஜதந்திரி. விழியால் மிரட்டுவார். குறுகிய நண்பர்கள் குழு உள்ளவர். எவ்வளவு சாதனை படைத்தாலும் வெளியே கூற மாட்டார்.

### 25) பூரட்டாதி

இராஜதந்திரி. இவர் முகத்தில் சலனம் காட்ட மாட்டார். அதட்டுவது போன்ற பேச்சு உள்ளவர். சிரமமில்லாதவர். சாதிவெறி இல்லாதவர். வயதானவர்களைப் பராமரிப்பார். இரட்டைக்குழந்தை யோகமுள்ளவர். ஆழ்ந்த பார்வை வீசுவார். குடும்பப் பற்று சற்றும் மாறாதவர். நீர்நிலைகளில் இடருண்டு. உடன் பிறந்தவர்களின் வீட்டருகில் சொந்த வீடு கட்டுவார். வாழ்வில் மேடு, பள்ளங்கள் காண்பதை விட நெளிவு, சுளிவுகளைக் காண்பார். கணவர் – மனைவி இடையே கட்டுப்பாடுகள் இருந்தாலும் பிரியம் உண்டு. மாமனார், மாமியார், தாய், தந்தையர் அனைவரையும் காப்பாற்றுவார். தமக்கென வாழாதவர். எனினும் பிறரால் சில நேரம் பித்தர் என்னும் பெயரெடுப்பார். ஆலமரம் போன்றவர்.

### 26) உத்திரட்டாதி

எளிதில் ஏமாறுபவர். வெளிப்படையாய்க் கத்தி பேசுவார். தாயாரின் அன்பு கிடைக்காது. தாயார் இவரது பேச்சுக்கு முக்கியத்துவம் தரமாட்டார். கடின உழைப்பு இருந்தாலும் அவசர முடிவுகளால் பிறர் ஏளனத்துக்கு ஆளாவார். இவரது நகைச்சுவையிலும் சோகம் இருக்கும். வேலை முடிந்ததும் இவரைக்

கழற்றி விடுவார்கள். பெண்கள் விஷயத்தில் இவர்களுக்கு ஈர்ப்பு அதிகம். தானே வலிய சென்று உதவி செய்வார். உடலில் ஏதாவது குறைபாடு உண்டாகும். யார் இவரை வெறுக்கிறாரோ அவர் நினைவாய்க் காலம் தள்ளுவார். திடீரென கலைத்துறையில் ஈடுபட்டு பெரும் செல்வம் ஈட்டுவதுடன் இழந்த செல்வாக்கையும் மீட்டுவிடுவார். சிவனருள் உள்ளவர். கவிதை சிந்தனை உள்ளவர். ஒதுக்கவில்லை ஒதுங்குகிறோம் என்னும் கொள்கை உள்ளவர். பிறரைக் கௌவரவித்து இவர் ஏளனத்திற்கு ஆளாவார்.

**27) ரேவதி**

பிறர் உழைப்பில் வாழ வெட்கப்பட மாட்டார். நகைச்சுவையாய்ப் பேசுவார். இவரையும் யாருக்கும் பிடிக்காது. பொறுப்பில்லாமல் இருப்பார். இவருடைய வேலைகளைப் பிறர் செய்யத் தூண்டுவார். உருக்காலைப் பணி உண்டு. மோதிரம் தொலையும். குளம், குட்டைகளில் வழுக்கி விழ நேரும். இவர் கூறும் பொய்கூட உண்மைபோல் தோன்றும். மத்திய வயதில் பேரிழப்பு ஒன்றைச் சந்திப்பார். டென்னிஸ் விளையாடுவார். கவிதை இரசிகர். சிறந்த வேலை இல்லாவிட்டாலும் சற்றுப் பற்றாக்குறையுடன் வாழ்வை நகர்த்துவார். வெறும் பொழுதுபோக்காய்க் காலம் கடத்துவார். மனைவியின் உறவினர் உதவி இல்லாமல் இவரால் செயல்பட முடியாது.

இதுவரை 27 நட்சத்திரங்களில் பிறந்தவர்களின் குணம் மற்றும் பிற விவரங்களைப் பற்றிப் பார்த்தோம். மேற்கண்ட நட்சத்திரப் பலன்கள் 100 க்கு 96 பேர் பெற்றிருப்பர். அவ்வவ்வற்றிற்குரிய நட்சத்திரப் பலன்களின்படியே நடக்கும். ஒன்றிரண்டு பேர் விதிவிலக்காய் மாறி இருப்பது மற்ற கிரக அமைப்பைப் பொறுத்தே நிகழும்.

இனி கிரகங்கள் பற்றிய விவரங்களைக் காண்போம்.

## 2.3 கிரகங்கள்

மொத்தம் 9 கிரகங்கள். அதில் இராகு – கேது விதிவிலக்கு. ஒவ்வொரு கிரகத்துக்கும் அதீத சக்தி உண்டு. இனி கிரகங்கள் பற்றிப் பார்ப்போம்.

**1) சூரியன்**

எல்லாவற்றுக்கும் தலைமையானது. இது நெருப்புக் கிரகம். கல்விக்கிரகம். இது உடல் வெப்பத்தைக் குறிக்கும் கிரகம். தந்தையின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் கிரகம்.

சூரியன் உதிப்பதும் இல்லை; மறைவதும் இல்லை. பூமி சுழல்வதால், இரவு, பகல் உண்டாகின்றன. சூரியனும் சந்திரனும் வக்கிரம் ஆகாது. அதாவது பின்னோக்கிச் செல்லாது. கார்த்திகை, உத்திரம், உத்திராடத்துக்கு உரியது. மேஷத்தில் உச்சமாயும், துலாம் இராசியில் நீச்சமாயும், சிம்மத்தில் ஆட்சியாயும் இருக்கும். புரியுமாறு சொல்ல வேண்டுமானால், சித்திரை மாதம் பிறந்தவருக்குச் சூரியன் உச்சம் பெறும். ஆவணி மாதம் பிறந்தவருக்குச் சூரியன் ஆட்சியுறும். ஐப்பசி மாதம் பிறந்தவருக்குச் சூரியன் நீச்சமுறும்.

ஹோமம் வளர்த்தல், இரயில்வே மற்றும் தார் உருக்குதல், நெருப்பு இஞ்சின் வேலை. தீப்பெட்டி தயாரித்தல். நெருப்பு அடுப்பு வேலை போன்றவைக்கு உரியது. மேஷம், சிம்மம் லக்கினக்காரருக்கு வெவ்வேறு பலன்களைத் தர வல்லது. ஆண்டுக்கு ஒருமுறை ஆட்சியுறும். இது ஒரு மாதக் கோள்.

சூரியன் இராசி மண்டலத்தில் சிம்மம் என்ற ஒரே வீட்டை உடையது. சூரியன் டைபாயிடு, அம்மை நோய்க்கு உரியது. சூரியன் சாம்பல் நிறத்திற்கு உரியது. சூரியன் இருக்கும் இடத்திலிருந்து 7 ஆம் பார்வை உடையது.

**2) சந்திரன்**

இது ஒரு துணைக் கோள். சந்திரனை மூளையுடன் ( மதி ) ஒப்பிடுவர். இது தினக்கோள். ஜாதகத்தில் முக்கிய பங்கு இதற்கு உண்டு. இந்தக் கிரகமும் வக்கிரமடையாது. வளர்பிறை அட்டமச் சந்திரன் நலம் தரும். தேய்பிறை அட்டமச் சந்திரன் மனபீதியைத் தரும்.

கடல், ஆறு, குளம், தண்ணீர், பால், பேக்கரி போன்ற திரவப் பொருள் உற்பத்திக்கு உரியது. வெளிநாட்டுப் பணி, இரவு நேர வேலை அமைய இது காரணம். இது தாயாரின் உடல்நிலையைக் குறிக்கும்.

ரிஷபம் இராசியில் உச்சம், விருச்சிகத்தில் நீச்சம், கடகத்தில் ஆட்சி பெறும். ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் நட்சத்திரங்களுக்கு உரியது. சூரியனைப் போலவே இதுவும் மறைவதும், உதிப்பதும் இல்லை. சூரியனைப் போலவே இதுவும் இராசி மண்டலத்தில் ஒரு வீட்டையே உடையது.

வங்கித் தொழில் சிறக்கும். பெட்ரோல், டீசல் போன்ற தொழில் அமைய உதவும். தொண்டைக்கட்டு, ஜலதோஷம், ஆஸ்த்துமா நோய்க்கு உரியது. சந்திரனுக்கு அறுபது பெயர்கள் உண்டு. வெள்ளை நிறத்துக்கு உரியது. சந்திரன் ஓரிடத்தில், ஒரே இராசியில் நில்லாது நகர்வதால் நிலா என்று பெயர் பெற்றது. சந்திரன் இருக்கும் இடத்திலிருந்து ஏழாம் பார்வை மட்டும் உரியது.

### 3) செவ்வாய்

செவ்வாய் அங்காரகன், குஜன் போன்ற பெயருக்கு உரியது. மின்னியல், இரசாயனம், மருத்தவத் தொழிலமைத்து முன்னேற உதவும். சிவப்பு நிறமானது. பூமி, இரத்தம், பீட்ரூட், தக்காளி, வெங்காயம், செங்கல் போன்ற சிவந்த நிறப்பொருளுக்கும், இராணுவம், பாதுகாப்புத் துறைக்கும் உரியது. சூரியன் சிங்கப்பூரையும், சந்திரன் பர்மாவையும். செவ்வாய் இலங்கை, சீனா, ரஷ்யாவையும் குறிக்கும். இது ஜாதகத்தில் தோஷத்தை ஏற்படுத்தக் கூடியது.

மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரத்துக்கு உரியது. தான் இருக்கும் இடத்தில் இருந்து 4, 7, 8 ஆம் பார்வைகளை உடையது. மேஷம், விருச்சிகம் என்ற இரண்டு வீடுகளில் ஆட்சி பெற்றுள்ளது. கடகத்தில் நீச்சமும், மகரத்தில் உச்சமும் ஆவது. கேது, செவ்வாய் இரண்டும் 7 வருடம் தெசை நடத்தும். சூரியன் 6 வருடமும், சந்திரன் 10 வருடமும் தெசை உண்டு.

உயர் இரத்த அழுத்தம், தாழ்வு இரத்த அழுத்தம் ஆகியவற்றைக் குறிப்பது. சகோதர பலத்தைக் குறிப்பது. ரண அறுவைச் சிகிச்சை, விபத்து போன்றவற்றை எக்கால கட்டத்தில் நடக்கும் எனத் தெரிவிப்பது.

### 4) புதன்

சூரியன், சந்திரனைத் தவிர எல்லா கிரகங்களும் வக்கிரம் அடையும். இதில் புதன் மிதமான கிரகம். சூரியனை ஒட்டி, அதாவது சூரியனுக்குப் பின்னால் அல்லது சூரியனுடன் இணைந்து அல்லது சூரியனுக்கு முன்னால் இயங்கும். இந்த நிகழ்வைப் புதன் ஓட்டம் என்பர்.

புதன் தணிக்கையாளர், கணக்கர் போன்ற தொழிலைக் குறிக்கும். கொரியா. ஆஸ்திரேலியா. தாய்லாந்து. இந்தோனேசியத் தொடர்பு உள்ளது. பால், பேப்பர், முத்து, உப்பு, பருத்தி போன்ற தொழில், அதாவது வெண்மை நிறப் பொருட்களுக்கு உரியது. அலுமினியம், வான்வெளிப் போக்குவரத்து போன்ற தொழிலுக்கும் உரியது.

புதன், கன்னி இராசியில் உச்சம், ஆட்சி என்னும் இருநிலைகளைப் பெறுவது அதனுடைய தனிச்சிறப்பு. மற்ற கிரகங்கள் ஆட்சி, உச்சம், நீச்சமென ஒரேயொரு நிலையில் தான் இருக்கும். புதனைத் தவிர மற்ற கிரகங்கள் சூரியனைவிட்டு இரண்டு மூன்று இராசிகள் ஏன் 12 இராசிகள் விலகிச் செல்லும். ஆயில்யம், கேட்டை, ரேவதி நட்சத்திரத்துக்கு உரியது. புதன் மீனத்தில் நீச்சமுறும்.

**5) குரு**

சாத்வீகம், ஆன்மீகம், சந்நியாசம், பிறருக்கு வழிகாட்டுதல் போன்றவற்றுக்கு உரிய கிரகம். புனர்பூசம், விசாகம், பூரட்டாதி நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு உரியது. இதை வருடக்கோள் என்பார்கள். ஓர் இராசியில் 12 மாதங்கள் மற்றும் 15, 20 நாட்கள் வரை, அதாவது 13 மாதங்களுக்குத் தங்கும். இதற்கு 5, 7, 9 ஆகிய பார்வைகள் உண்டு. குரு இருக்கும் இடத்தில் இருந்து 5, 7, 9 ஆம் பார்வையால் அந்த இடத்திற்குப் பல நலம் செய்யும். குரு பார்த்தால், எதைப் பார்க்கிறதோ அது விருத்தியாகும். குரு பார்ப்பதால் செவ்வாய் தோஷம் நிவர்த்தி என்று உண்மைக்கு மாறான தகவல் நிலவுகிறது. உண்மையில் குரு பார்த்தால் செவ்வாய் தோஷம் இன்னும் வலுவடையும்.

நூலகம் நிர்வாகம், பொன் வாணிபம், மஞ்சள், உளுந்து போன்ற தொழிலுக்கு உகந்தது. உலக வங்கி மற்றும் கிராம வங்கித் தொடர்பு உண்டு. பேராசிரியர் தொழிலுக்கு உகந்தது.

குரு மகரத்தில் நீச்சமும், கடகத்தில் உச்சமும், மீனம், தனுசில் ஆட்சியும் பெறும். இருபது வருடங்களுக்கு ஒருமுறை இது சனியுடன் மீனம், மேஷம், கன்னி, தனுசில் இணையும்.

**6) சனி**

இரும்பு, களவு, கருப்பு நிறம் ஆகியவற்றிற்கு உரியது. நீண்ட ஆயுளைக் குறிப்பது. தடகளப் போட்டி, பொறியியல், கிரேன் ஆப்பரேட்டிங் முதலியவற்றுக்கு உரியது. பேன், மூட்டைப் பூச்சி, கருநாகம் போன்ற பயமுறுத்தும் உயிரினங்களுக்கு உரியது.

மகரம், கும்பம் இராசியில் ஆட்சியும் மேஷத்தில் நீச்சமும், துலாத்தில் உச்சமும் பெறுவது. இதற்குச் சனி தெசை, ஏழரைச் சனி (மங்கு சனி, பொங்கு சனி, மரணச் சனி), அட்டமச் சனி, சனி புக்தி என்பன வெவ்வேறு பொருள் கூறுவன. கிரகங்களில் மிகமெதுவாக அதாவது 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை சூரியனைச் சுற்றிப் பயணம் செய்வது சனி.

சனி தெசை தொடக்கத்தில் சனி வரும் காலத்தை நமக்கு எச்சரிக்கை செய்கிறது. சனியின் 3 ஆம் பார்வை அந்த இடத்தை முற்றிலும் செயலிழக்கச் செய்துவிடும். மரணகால நிலையை உணர்த்துவதும் இதுவே. சனிக்கு 3, 7, 10 ஆம் பார்வைகள் உண்டு.

கேரளா, ஆப்பிரிக்காவைக் குறிக்கும். பெங்களூர், பம்பாய், மஸ்கட், மாஸ்கோ (ரஷ்யா)வைச் சனி குறிக்கும். அதாவது சனி வலுத்தால் அங்கு செல்ல வாய்ப்பு வரும்.

**7) சுக்கிரன்**

மணவாழ்வைக் குறிப்பது. குருவுக்கு பிரகஸ்பதி, வியாழன் என்றும், சனிக்கு மந்தன் என்றும் பெயர் இருப்பது போல், சுக்கிரனுக்குப் பிருகு, வெள்ளி என்ற பெயர் உண்டு. இது கேளிக்கைக்கு உரிய கிரகம். எப்படி சனி பூசம், அனுஷம், உத்திரட்டாதிக்கு உரியதோ, அதேபோல் சுக்கிரன் பரணி, பூரம், பூராடத்துக்கு உரியது. சுக்கிரன் தெசைதான் மிக நீண்ட தெசை, அதாவது 20 வருடம். சிறிய தெசை சூரியனுக்கு 6 வருடம். சுக்கிரன் ரிஷபம், துலாம் இராசிக்கு உரியது.

துணி, நிதி நிர்வாகம், கருங்கல், உரம், திரைப்படம், வாகனம் மற்றும் மளிகைக்கடைக்கு உரியது. சுக்கிரன் கடவுள் நம்பிக்கை, அரசியல், மருத்துவத்துக்கும் உரியது. மணவாழ்வு, எதிர் பால் ஈர்ப்பு ஆகியவற்றுக்கு உகந்தது. உலகைச் சுற்றிப் பார்க்க உதவுவது.

மீனத்தில் நீண்டு உச்சமாவதும், கன்னி இராசியில் குறுகி நீச்சமாவதும் ஆகும். கன்னி, துலாம், விருச்சிகம் இராசியில் வரிசையாய் முறையே சுக்கிரன், சூரியன், சந்திரன் நீச்சமானால் பெரும் யோகமாகும். வாழை மரத்துக்கு உரியது. வழக்காடும் வக்கீல்கள் இந்த இராசியில் பிறந்தவர்கள்.

**8) இராகு**

திருவாதிரை, சுவாதி, சதயத்துக்கு உரியது. இந்த இராசிக்காரர்களை இராகு காலம் ஒன்றும் செய்யாது. அதே போல் இராகு தெசை நடப்பவருக்கும் இராகு காலம் ஒன்றும் செய்யாது. சனியைப் போல் இராகு என்பார்கள். இராகு தெசை நடக்கும் போது அது எந்த வீட்டில் உள்ளதோ அந்தக் கிரக தெசை நடப்பதாய்க் கொள்வதைவிட சனி தெசை நடப்பதாய்க் கொள்வதே உன்னதமாகும். இராகு விருச்சிகத்தில் உச்சமாகும். ரிஷபத்தில் நீச்சமாகும்.

டைபாய்டு, மஞ்சட்காமாலை, வெப்பநோய் போன்றவற்றுக்கு உரியது. புடலங்காய் உண்பதை நீக்கினால் இராகு தோஷம் விலகும். சொல்லப்போனால் இராகு தெசை நடக்கும்போது பெரும் செல்வ நிலையே உண்டாகும். இராகு தெசை வராதவர்களுக்கு ஒவ்வொரு தெசையிலும் இராகு புத்தி பெரிய இடர்ப்பாடு உண்டாக்கும். மிதுனத்தில் இராகு உள்ளவருக்கு இராகுதெசை அமோக செல்வாக்கு, செட்டியார்கள் நடத்திய வங்கி தொழில் அமையும். வீண்கோபம், மனப்பிரமை, குடற்புண் ஆகியவற்றைக் குறிப்பது. தந்தைவழிப் பாட்டன், பாட்டி, அத்தை, சிற்றப்பா உறவுநிலைகளைக் குறிப்பது. மின்சாரம், தொலைபேசித் துறை வேலைக்கு உகந்தது.

**9) கேது**

மருத்துவத் தொழிலுக்கும் மயான காவல் துறைக்கும் உரியது. விநாயகர் அருளை வழங்க வல்லது. கேதுவோ, இராகுவோ கும்பத்தில் உள்ள ஜாதகருக்குக் கேது– இராகு தெசை அமோக இலாபம் தரும். (குடத்துப்பாம்பு கடிக்காது.) அசுபதி, மகம், மூலத்துக்கு உரியது. மாமா, தாய்வழிப் பாட்டன், பாட்டிக்கு உதவுவது. பசு, பயிர் இவற்றிற்கு விஷக்காய்ச்சல் வருவதைக் குறிப்பது. மனபயம், எதிரிகளை வெல்லுதல், குறிப்பறிந்து உதவுதல் போன்ற குணங்களுக்கு உரியது.

ஒருவர் ஜாதகத்தில் கடகம்–மகரத்தில் இராகு கேது தனித்திருப்பது அரிது. அப்படி இருந்தால் சங்கீத வித்துவான் ஆவார். பத்து இலட்சம் பேர்களில் ஒருவருக்கு உரியது அவ்வமைப்பு. 12 இல் கேது இருந்தால் மறு பிறப்பு இல்லை என்பது தவறான கருத்து. அடுத்த பிறப்பு சந்நியாசியாவார் என்பதே ஆகும். கேது ரிஷபத்தில் உச்சமாகும். விருச்சிகத்தில் நீச்சமாகும்.

செவ்வாயைப் போன்றே இக்கிரகம் ஏழாண்டுகள் நடக்கும் தெசை உள்ளது.

## கிரகங்களின் பார்வைகள்:

சனி, இராகு, கேது, செவ்வாய், குரு ஆகிய கிரகங்களுக்கு மூன்று பார்வைகள் உள்ளன.

இராகு – கேதுவுக்கு 3, 7, 12 ஆம் பார்வைகள் உண்டு.

சூரியனுக்கு 7 ஆம் பார்வை உண்டு.

சந்திரனுக்கு 7 ஆம் பார்வை உண்டு.

புதனுக்கு 7 ஆம் பார்வை உண்டு.

சுக்கிரனுக்கு 7 ஆம் பார்வை உண்டு.

செவ்வாய்க்கு 4, 7, 8 ஆம் பார்வைகள் உண்டு.

குருவிற்கு 5, 7, 9 ஆம் பார்வைகள் உண்டு.

சனிக்கு 3, 7, 10 ஆம் பார்வைகள் உண்டு.

எல்லா கிரகங்களும் ஏழாம் வீட்டைப் பார்க்கும் வல்லமை உள்ளவை.

எல்லா கிரகங்களுக்கும் லக்கினம், இராசிக்கு 6, 8, 12 ஆம் வீடுகள் மறைவு ஸ்தானம்.

ஆனால், சுக்கிரனுக்கு மட்டும் 12 ஆம் வீட்டுக்குப் பதிலாக 3 ஆம் வீடு மறைவு ஸ்தானம். அதாவது, இராசி, அல்லது லக்கினத்துக்கு 3 இல் சுக்கிரன் இருந்தால், அந்தக் கிரகம் செயலிழக்கும்.

ஒவ்வொரு கிரகமும் மற்ற கிரகங்களைப் பார்வையால் செயலிழக்கச் செய்யவும், துரிதப்படுத்தவும் உரிமை உள்ளது.

* * * * *

*அலகு II*

# பாடம் 3 – லக்னம், இராசி, நவாம்சம்

ஒரு ஜாதகத்தில் லக்னம், இராசி, நவாம்சம் என்பது, கடிகாரத்தில் உள்ள சின்னமுள், பெரிய முள், நிமிட முள் போன்றன. லக்னம் என்பது உடலையும், இராசி என்பது உயிரையும் குறிப்பன என்பாருமுளர். எனினும், லக்னம் என்பது சோதிடருக்கும், இராசி என்பது அன்றாடப் பணிகளை, கிரக பலன்களை அறிந்து கொள்வதற்கும், நவாம்சம் என்பது வீடு, வாகனம் போன்றவை அமையும் அம்சம் உள்ளதா? என்று பார்ப்பதற்கும் உள்ளன.

லக்னம் என்றால் அழகு. இராசி என்றால் தலை எழுத்து என்று பொருள். லக்னம் ஜாதகர் பிறந்த நேரத்தைப் பொறுத்தும், இராசி பிறந்த நட்சத்திரத்தைப் பொறுத்தும் அமையும். நவாம்சம் என்பது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியது என்றும் பொருள். ஒரு நட்சத்திரத்திற்கு 4 பாதங்கள் உள்ளதால் ஒரு இராசியில் இரண்டே கால் நட்சத்திரங்கள் வீதம் 9 பாதங்கள் அமைகின்றன. இதுவே நவாம்சம் எனப்படுகிறது.

இப்படி ஒருவர் பிறந்து ஓராண்டு கழித்து எழுதப்படும் ஜாதகம்தான் முற்பிறவி நல்வினை தீவினை கணக்கு ஆகும். அதைக் கொண்டுதான் வருங்காலத்தைக் கணித்துச் சொல்ல முடியும். லக்னத்துக்கும் இராசிக்கும் இடையே உள்ள வீடுகளைப் பொறுத்துப் பலன்கள் அமையும். சிலருக்கு லக்னமும் இராசியும் ஒன்றாய் அமையும்.

லக்னம் பலன் என்பதும், இராசி பலன் என்பதும், லக்னம்–இராசி நவாம்சத்தில் அமைந்ததைப் பொறுத்தே சொல்லப்படுகின்றன.

## 3.1. லக்னம் பலன்கள்

### 1. மேஷ லக்னம் பலன்

இவர்கள் பிறரை அனுசரிப்பவர்கள். சுரங்கம், இராணுவம், காவல்துறை, பாதுகாப்புத்துறை போன்றவற்றுடன் தொடர்பு உள்ளவர்கள். பெரும்பாலும் மாமா பெண்ணையே மணக்க நேரும். சிரித்த முகமும் சற்று குள்ளத் தோற்றமும் உள்ளவர்களாக இருப்பர். இரத்தப் பரிசோதனை, பீட்ரூட், தக்காளி, வெங்காயம் போன்ற சிவந்த பொருள் தொடர்பு உடையவர்கள். கூன்முதுகு அமையும். இவர்கள் கட்டாந்தரையிலும், பஞ்சுமெத்தையிலும் படுத்துத் துயில்வர். இலண்டன், சீனா, மத்திய ஐரோப்பா ஆகிய நாடுகளின் தொடர்பில் இருப்பார்கள். மேடைப் பேச்சில் 3 நிமிடங்களுக்கு மேல் பேசமாட்டார்கள். பெண்குழந்தை பாக்கியம் உள்ளவர்கள். 46 வயதிலேயே தலை நரைத்து விடும். மத்திய அரசு (மின்சாரம்), தனியார் துறையில் பணி அமையும். இரசிகர் மன்றம் நடத்தி புகழ் பெறுவார்.

**2. ரிஷப லக்னம்**

இவர்கள் நிர்வாகத் திறமை உள்வர்கள். இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்.), முதுநிலை (தொழில் நிர்வாகம்) (எம்.பி.ஏ.) பயில்வார்கள். பட்டு ஆபரண இலாபமுள்ளவர்கள். நீண்ட மூக்கு. உயர உருவம் உடையவர்கள். இந்த லக்னத்தில் பிறந்தவர்கள் மிகச்சிறந்த மருத்துவராய் இருக்கவும் வாய்ப்புள்ளது. உறவினர் அல்லாத அந்நியத்தில் பெண் அல்லது மாப்பிள்ளை அமையும். ஜப்பான், மங்கோலியா, ரஷ்யா தொடர்பு உண்டாகும். பச்சைக் காய்கறிகளைப் பச்சையாக உண்பர். தலைமையாசிரியர், வங்கி மேலாளர் போன்ற பணிகள் தேடி வரும்; வேலைவாய்ப்பாய் அமையும். மத்திய வயதில் செய்யாத தப்புக்குப் பதவி நீக்கம் செய்யப்படும் வாய்ப்பு அமையும். இராஜ வாழ்வு உண்டு. என்றும் இளமையுடன் காணப்படும் இவர்கள் நீதி மன்றம், நீதிபதி, அஞ்சல் துறையில் பணியாற்ற நேரும்.

**3. மிதுன லக்னம்**

குழப்ப சுபாவம் உள்ளவர்கள். கொரியா, ஜப்பான், பர்மா தொடர்பு உண்டு. பால், தாள், முத்து, உப்பு, பருத்தி (வெண்மை நிற பொருள்) உற்பத்தி தொழில் அமையும். காஸ்டிங், வணிகவியல் போன்ற கல்வி அமையும். வெள்ளை நிற வீடு கட்டுவார். வேகமான நடை, யாரையும் கவனிக்காதது போன்ற தோரணை உள்ளவர்கள். இந்த லக்னக்காரர்கள் பெரும்பாலும் விமானத் துறையில் பணிபுரிய வாய்ப்புள்ளவர்கள். அந்நியத்தில் திருமணம் ஆகும். சிமெண்ட், சர்க்கரை ஆலையில் இவர்கள் பணியாற்றுவர். ஏதோ ஒரு காரணத்தால் பாதியிலேயே பதவி மாறும். பார்ப்பதற்கு ஏமாறுபவர் போன்று தோன்றினாலும் ஏமாறாதவர்கள். பிறரைக் கௌரவப் படுத்த முயல்வர். இருதார யோகம் சிலருக்கு உண்டு. மனிதவள மேம்பாட்டுத்துறை அதிகாரியாகவும் வாய்ப்புடையவர்கள்.

மிதுனம், சிம்மம், தனுசு மற்றும் கும்பம் இராசியில் எந்தக் கிரகமும் உச்சம், நீச்சமாகாது. மற்றொரு விஷயம் மிதுனம் லக்னத்தில் பிறந்தவர்கள் கணக்குத் தணிக்கையாளராய் இருப்பார்கள். செவிலியர், பல்கலைக் கழகப் பணி, காவல் துறையில் பிரகாசிப்பார்கள். கணினி படிப்பு எல்லா நட்சத்திரக்காரர்களும் படிக்கத் தகுந்தது.

**4. கடக லக்னம்**

இவர்கள் தியாக குணம் உடையவர்கள். தொழிலாளர் துறை அதிகாரி பணி அமையும். சட்டநுணுக்கம் அறிந்தவர். இந்த இராசிக்காரர்கள் வீட்டுப்பறவைகள். மன பயம் உள்ளவராய் இருப்பார்கள். கடல் வாணிபம் (நேவி ஷிப்பிங்) தொடர்பு உண்டு. எண்ணெய் வாணிபம், பெட்ரோல், டீசல், எழுத்து மை, பால் போன்ற தொழிலும் அமையும். நல்வினை குறைந்தவர்கள் மதுபானம், சர்பத் கடைகளில் வேலை செய்வர். கடலோர தெய்வங்கள் திருச்செந்தூர் முருகன், அன்னை வேளாங்கன்னி மாதா, மற்றும் நாகூர் ஆண்டவர் அருள் பெற்றவர்கள். பர்மா, மலேயா தொடர்பு உண்டு. மாநிலத் தலைமை கணக்கு அதிகாரி, மாவட்ட ஆட்சியர் போன்ற பெரும் பதவி வகிப்பவர் இந்த இராசியினரே.

சந்திரனில் காலடி வைத்த ஆம்ஸ்டிராங் இந்த இராசிக்காரர் (பூசம்). மீனவர்கள் கப்பல் பொறியாளர். இந்திய மாநில வங்கித் தொடர்பு உண்டு. கொஞ்சம் பொறாமை எண்ணம் உள்ளவர்களாக இருப்பார்கள். பிறரை மட்டம் தட்டிப் பேசுவதில் வல்லவர். பிற சாதி, மதக்காரர்களால் ஈர்க்கப்படுவர். மந்திரி, அரசர், பொது மேலாளர் போன்ற பதவிகள் உண்டு. நீர்க் காய்கறிகளை உண்ணலாம்.

**5. சிம்ம லக்னம்**

முன்கோபமுடையவர்கள். பழி வாங்க மாட்டார்கள். பாடம் கற்பிப்பார்கள். பசியடங்கிய பின்னரே எதுவும் கிடைக்கும். பிறர் அன்புக்கு ஏங்குவர். வெளிநாட்டுக் கனவு உண்டு. சிங்கப்பூர் தொடர்பு உண்டு. சத்தியக் கட்டுப்பாடு உள்ளவர்கள். இவர்களுடைய நகைச்சுவைப் பேச்சிலும் சோகம் இழையோடும். திடீரென்று கலைத்துறையில் பிரவேசித்துப் பெருஞ்செல்வம் சேர்ப்பர். யாகம், ஹோமம் செய்வர். இரயில்வே, குண்டு / வெடி மருந்து, புரோகிதம், கிராம அதிகாரி போன்ற தொழில் உண்டு. அதாவது, சூரியனின் அமைப்பைப் பொறுத்து வேலை மாறும்.

தன்னை விரும்புபவர்களை வெறுப்பார்கள். வெறுப்பவர்களை விரும்புவார்கள். சாதி வெறி உள்ளவர்ளாக இருப்பர். பெற்றோர், உடன் பிறந்தோருடைய ஆதரவு இருந்தாலும் சண்டை உண்டாகும். ஒவ்வொரு நாளும் ஏதாவது கவலையில் ஆழ்ந்த வண்ணம் இருப்பர். இவர் இருக்கும் வீட்டின்

எதிர்ப்புறம் பாழடைந்து காணப்படும். தோல்வியை வெற்றியாக்குவர். இவரைச் சுற்றி இவர் பணத்துக்காகவே ஒரு கும்பல் சுற்றும். கவிதை புனைவதில் வல்லவர்கள். துறவி போன்று இருப்பார்கள்.

**6. கன்னி லக்னம்**

மென்மையானவர்கள். மேன்மையானவர்கள். செங்கல் தொழில் ஆர்வம் உள்ளவர்கள். முதல் வீடு அமையும். பிறரை அணுகத் தயங்குவதால் நல்ல வாய்ப்பை இழப்பர். ஐந்தொகைக் கணக்காயர், வட்டாட்சியர், வருவாய் கோட்ட அதிகாரி போன்ற பதவி வகிப்பர். ஆஸ்திரேலியத் தொடர்பு உண்டு. பிரபஞ்சத் தொடர்பும் உண்டு. வாகன இலாபம் உண்டு. இவர்களால் எந்தப் பிரச்சினையும் இருக்காது. தயவு தயக்கம் உள்ளவர்கள். எங்கும் இரண்டாவது வட்டத்தில் இருப்பர். நூலகராகப் பதவி வகிப்பர். விண் ஆய்வு, விமானப் போக்குவரத்து போன்ற துறையும், பல் மருத்துவப் படிப்பும் அமையும். வெண்ணெய், பால் அருந்துவதால் இவருக்குக் கொழுப்பு அதிகமாகும். பான்பராக் போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையாவர். அனாவசியமாய் யாரிடமும் பேச மாட்டார்கள். வீண்செலவு செய்வர். கம்பீரம், தோரணை, பிறரை விழியால் மிரட்டுவது போன்ற குணம் உள்ளவர்களாக இருப்பர்.. குஜராத், இராஜஸ்தான் தொடர்பும், மேகாலயா தொடர்பும், அஸ்ஸாம் செல்லும் வாய்ப்பும் உண்டு. செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் தொழிலிலும் பெரும் செல்வம் சேர்ப்பர். சிறந்த ஓவியர்கள்.

**7. துலா லக்னம்**

இந்த லக்னக்காரர்கள் எதுவும் நன்மைக்கே என்னும் கொள்கை உடையவர்கள். பிறரை எடைபோடுபவர். பொதுப்பணித்துறை, கடல்சார் தொழில், உப்பளம் வேலை, கணினி தரக் கட்டுப்பாட்டாளர் மற்றும் தொழிலாளர் சங்கத் தலைவர் போன்ற பதவி வகிப்பார்கள். நாட்டுக்கோட்டை செட்டியார்கள் நிறுவனத் தொடர்பு உள்ளவர்கள். சகோதரத்துவம் உள்ளவர்கள். ஆப்பிரிக்கா, க்யூபா மற்றும் தென்கடல் தீவில் வசிக்க நேரும். நீதிமன்றம் போன்ற துறையில் சிறந்து விளங்குவார்கள். போக்குவரத்துத் துறை நலம் தரும். ஏற்றுமதி துறையில் இவர்கள் கொடிகட்டிப் பறப்பார்கள். முதுகலை சமுக அறிவியல், இரசாயன அறிவியல் படிப்பார்கள். அளவான குழந்தை பாக்கியமுள்ளவர்கள். சுத்தமான உடல் உடையவர்கள். சமாதானப்பிரியர்கள். தமிழ்க் கவிதை புனைவர். திரைப்படத் துறை நலம் தரும். விரோதிகளைக் கண்காணிப்பர். மௌனமானவர்கள். சமயத்தில் உதவி செய்வர். வாகனம் ஓட்டுவதால் விபத்துக்கு ஆளாவர். மூலம், பவுத்திர நோய் உண்டாகும். அடிக்கடி மயங்கி விழுவார்கள்.

### 8. விருச்சிக லக்னம்

வெடுக்கென்று பேசுபவர். விஷக்கடியற்றவர். தீவுக்கூட்ட வாசம் உண்டு. நாய், பூனை வளர்ப்பதில் ஆர்வமுள்ளவர். மின்னியல், வேதியியல், மருத்துவத்துறை இலாபமுள்ளவர்கள். குழந்தை வளர்ப்பில் நலமுண்டு. பெரும்பாலும் மனவாழ்வு மகிழ்ச்சியாக இருக்காது. இரத்தப் பரிசோதனை நிலையம் நடத்துவர். நில விற்பனை இலாபம் உண்டு. எளிதில் ஏமாறுவர். சொல்லிக்காட்டுவர். உடல் நல சத்து மருந்து போன்ற திரவப் பொருட்களை உண்பதால் இடருண்டாக வாய்ப்பு உண்டு. திருமண விஷயத்தில் சுயமுடிவு எடுப்பதால் இடரடைவர். இலங்கை, இராமேஸ்வரம் போன்ற ஊர்கள் தொடர்பு உண்டு. பட்டு அணிய விருப்பமற்றவர். மின்சார வாரியம், பஞ்சாயத்து யூனியன் போன்ற இடத்தில் பணி அமையும். இவர்களைப் பிறர் அணுக அஞ்சுவர். ஆரம்பப் பள்ளி ஆசிரியர் ஆவர். சிலருக்கு முதுகலை (இயந்திரவியல்), முதுகலை (ஆய்வியல்) போன்ற படிப்பு அமையும். கணிதம், விஞ்ஞானம் ஆர்வம் இருக்கும். பவழ நகையில் நாட்டமுள்ளவர். அக்கம்பக்கத்துப் பகைமையைச் சம்பாதிப்பவர்களாகவும். பழி வாங்கும் சுபாவம் உள்ளவர்களாகவும் இருப்பர். பயண சுகம் உண்டாகும். இனபேதம் காண்பார்கள்.

### 9. தனுசு லக்னம்

வளைந்து கொடுக்கும் குணமுடையவர்கள். மலையாள மக்களால் நலமுறுவர். பயணத்தில் தூங்கினால் பொருள் தொலையும். தாள் தொழில் நுட்பம், கண் மருத்துவர் போன்ற துறை நலம்தரும். இவர்கள் ஆசிய நாடுகள் தொடர்பு உடையவர்கள். புராணக்கதை சொல்வதில் வல்லவர்கள். பிறர் வளர்ச்சியில் பொறாமை உள்ளவர்கள். கல்வியாளர்கள், முனிவர்கள் போல் இருப்பர். பொன், பொருள் ஆசையை வெளிக்காட்டாதவர்கள். பணப்புழக்கம் இருந்தாலும் கொள்கை அளவுடன் செலவு செய்வார்கள். கிரிக்கெட், கூடைப் பந்து விளையாட்டு இட ஒதுக்கீடு மூலம் வேலை வாய்ப்பு அமையும். ஊர், நகர் பெயரில் உள்ள வங்கியில் பணியாற்ற நேரும். வணிகப் பயணம் போவர். ஏழை எளியவரிடம் அன்புடன் பழகும் இவர்களுக்குச் சகோதரருடைய ஆதரவு இருக்காது. கோவில் கட்டுதல் முதலிய சில விஷயங்களில் அகலக்கால் வைத்து நட்டமடைவர். இருதார மணம் உள்ளவர். முகமதிய நாட்டில் பணியாற்ற விரும்பாதவர்கள். எண்ணெய் சுத்திகரிப்பு, குளிர் பானம் தொழில் முதலியன உண்டு. பெற்றோருக்கு வேண்டிய யாவையும் உடனுக்குடன் செய்து முடிப்பர்.

### 10. மகர லக்னம்

இந்த லக்னக்காரர்கள் கம்பீரமானவர்கள். ஏழை எளியவர்களுக்குப் பலவகைகளில் உதவுவர். மலைக்கோயில்களுக்குப் புனித யாத்திரை செல்வர். பெங்களூரு, சென்னை, பர்மா, அபுதாபி, மெக்ஸிகோ போன்ற நாடுகளுடன் தொடர்பு கொள்வர். கன்னடம், துளுவ மொழிப் புலமை உண்டு. கம்பீரத் தோற்றம் இருந்தாலும் வறுமை சிறிது இருக்கும். கணினித் துறையில் பெரும்பங்கு வகிப்பர். இந்த லக்னக்காரர்கள் காபி, தேயிலை, ஏலக்காய் பயிர்த் தொழில், இராக்கெட் விடுதல் போன்றவற்றில் வல்லவர்கள். மலைபடு பொருள் பயிர்த் தொழில் நிர்வாகிகள். 12 லக்கினங்களில் ரிஷபம், தனுசு, மகரம் ஆகிய மூன்று லக்னங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. இயந்திரவியல் பொறியாளர். எக்ஸ் ரே ஸ்கேன் ஆப்பரேட்டர்கள் இந்த லக்னத்தைச் சேர்நதவர்கள். வீடு, வாகனம், தோட்டம் உள்ளவர்கள். சிலர் நீதி அரசர்களாய் இருப்பர். கூட்டுறவு பண்டக சாலை, கூட்டுறவு வங்கி தொழில் அமையும். கிராமப் பெரிய வீட்டுக்காரர்களாய் இருப்பர். பொய் கூறாதவர். இரயில்வேயில் சக்கரம் தயாரிக்கும் பிரிவில் இருப்பர். அக்ரகார வாசம் உண்டு.

### 11. கும்ப லக்னம்

இந்த லக்னக்காரர்கள் முகராசி அற்றவர்கள். குடும்பத்தினராலும், உறவினராலும் வேலை செய்யும் இடத்தில் ஊழியர்களாலும் வெறுக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும் துரோகம் இழைக்கப்படுவார்கள். அதற்குக் காரணம் அவர்களுடைய அதிகமான பேச்சேயாகும். கிண்டல் பேசுவர். எடுபடாத கடின உழைப்பாளி. சிமெண்ட், ஜிப்சம், பெட்ரோல் துறையில் தன்னை ஓர் அதிகாரியாய், தன்னை ஒரு முக்கிய பிரமுகராய் நினைத்துப் பணியாற்றுவர். நகைச்சுவைக்கு இலக்காவார். புகையிலை, மூக்குப்பொடி போடும் பழக்கமுள்ளவர். ஆங்கில அறிவு உள்ளவர். பிறர் புண்படுமாறுப் பேசுவர். எடுத்த காரியத்தைப் பிடிவாதமாய் செய்து முடிப்பர். காரியச் செவிடர். வேலை வாங்குவதில் வல்லவர்கள். சுயநலமுள்ளவர்கள். தனது பெண் பிள்ளைகள் ஊதியத்தை அவர்கள் அனுமதியின்றிப் பயன்படுத்துவார்கள். பம்பாய், கல்கத்தா, பர்மா, டெக்ஸாஸ், அரேபியத் தொடர்பு உள்ளவர்கள். சிறந்த தட்டச்சர்களாகவும், வருவாய் கோட்ட அதிகாரி, துணை வருவாய் அதிகாரிகளாக பணியாற்ற வல்லவர். வாகனம், வீடு, மணவாழ்வு இம் மூன்றும் சற்றுச் சுமாராய் அமையும். மனைவி ஒருவர் மட்டுமே ஆதரவளிப்பார். மனைவியை இவர்கள் மதிக்க மாட்டார்கள்.

### 12. மீன லக்னம்

விட்டுக் கொடுத்து ஏமாறுபவர்கள். வாகனம் ஓட்டுவார்கள். மெதுவாய் சாப்பிடுவார்கள். இவர்கள் வாழ்வே பிறருக்குப் பாடமாய் அமையும். அரசுப் பேருந்து ஓட்டுநர். வக்கீல், பொன் வணிகர், மீன் வளர்ப்புத் துறை அதிகாரி, கடலாய்வு, இயற்பியல் துறை இலாபமுள்ளவர். ஐரிஸ், மதுரை, கனடா, ஜெர்மன், பிரான்ஸ் தொடர்பு உண்டு. மளிகைக் கடை வைத்து ஏமாறுவர். நெருப்பு, மின்சாரத்தில் சிறு விபத்து உண்டு. உலகம் சுற்றுவர். தோட்டக்கலை வல்லுநர். கடுகடுப்பான பேச்சு உள்ளவர்கள். ஏஜென்ஸி, பன்னாட்டு வணிகம் ஆகியவற்றில் இலாபம் அடைவர். புரோகிதர், புத்தக வித்தகர். பிறருக்கு நல்லுரை சொல்லும் அறிவுரையாளர். பேராசிரியர் போன்ற துறையில் பிரகாசிப்பர். கடகம், விருச்சிகம், மீனம் இராசிக்காரர்கள் கிராமம், நகரம், மாநகரத்தில் வசிக்கும் ஆர்வம் உள்ளவர்கள். எல்லாத் துறைகளிலும் வெற்றி உண்டு. கோவில் அருகிலுள்ள தெருவில் குடியிருப்பர். ஏற்றுமதி செய்வர். பாத்திரத்துக்குத் தகுந்தாற்போல் உருவெடுக்கும் நீர்போல் இடத்துக்குத் தகுந்தபடி நடந்து கொள்வர். வாகனங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சல், தோட்டக்கலை, கோவில் நந்தவனம், சமையல் துறையில் வல்லவர்களாக இருப்பர்.

OOOOO

## 3.2. இராசி பலன்கள் (நட்சத்திரப் பலன்கள்)

மேற்சொன்ன 12 லக்னங்களுக்கு உண்டான பலன்களே சந்திரன் நின்ற இராசிகளுக்கும் உரிய பலன்கள் ஆகும்.

எனினும், ஒவ்வொரு இராசியிலும் இரண்டே கால் நட்சத்திரங்கள் இருப்பதால், நட்சத்திரங்களைப் பொறுத்து சிறிது பலன்கள் மாறும். ஒரு சோதிடர் லக்கினத்துக்கு உண்டான பலன்களைச் சொல்லிவிட்டு, இராசி பலன் சொல்லும்போது, ஜாதகரின் நட்சத்திரத்தைப் பார்த்துப் பலன் சொல்ல வேண்டும். இராசி என்றால் தலை எழுத்து என்று பொருள். முதலில் ஜாதகத்தில் லக்கினத்தையும், இராசியையும், நட்சத்திரத்தையும், அம்சத்தில் நட்சத்திரம் நின்ற பாதத்தையும் அறிந்தே பலன் சொல்ல வேண்டும்.

### நட்சத்திரங்களும், இராசிகளும்

மொத்தமுள்ள 27 நட்சத்திரங்களும் அவற்றிற்குரிய இராசிகளில் இருக்கும் அமைப்பைப் பொறுத்து நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

அவை: (1) கால் (1/4), நட்சத்திரங்கள் (2) அரை (1/2) நட்சத்திரங்கள் , (3) முக்கால் (3/4) நட்சத்திரங்கள், (4) முழு ( பூரண) நட்சத்திரங்கள்.

**1) கால் (1/4) நட்சத்திரங்கள்:** கார்த்திகை, உத்திரம், உத்திராடம் இந்த மூன்றும் முதல் கால் பாகம் மேஷம், சிம்மம், தனுசு இராசியில் இருந்து, மீதி முக்கால் பாகம் ரிஷபம், கன்னி, மகரம் இராசியில் இருப்பதால் கால் நட்சத்திரங்கள் ( கால் உடல் ) என்று அழைக்கப்படுகின்றன.

**2) அரை நட்சத்திரங்கள்:** மிருக சீரிஷம், சித்திரை, அவிட்டம் இந்த மூன்றும் முறையே ரிஷபத்தில் பாதி பாகமும், கன்னியில் பாதி பாகமும், மகரத்தில் பாதி பாகமும் மீதி இரண்டு பாகங்கள் முறையே மிதுனம், துலாம், கும்பம் இராசியில் இருப்பதால் அரை நட்சத்திரங்கள் ( அரை உடல் ) என்று அழைக்கப்படுகின்றன.

**3) முக்கால் நட்சத்திரங்கள்:** புனர்பூசம், விசாகம், பூரட்டாதி இம்மூன்றும் முறையே முக்கால் பாகம் மிதுனம், துலாம், கும்பத்திலும், மீதி கால் பாகம் (நான்காம் பாதம்) கடகம், விருச்சிகம், மீனத்திலும் இருப்பதால் இவை முக்கால் நட்சத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**4) முழு (பூரண) நட்சத்திரங்கள்:** அசுபதி, மகம், மூலம், பரணி, பூரம், பூராடம், ரோகிணி, ஹஸ்தம், திருவோணம், திருவாதிரை, சுவாதி, சதயம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி, ஆயில்யம், கேட்டை, ரேவதி ஆகியவை எல்லாம் அவற்றிற்குரிய ஒரே இராசியில் முழுமையாக (நான்கு பாதங்களும்) இருப்பதால் அவை பூரண நட்சத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

எல்லா நட்சத்திரங்களும் ஆங்காங்கு அமர்ந்து ஒன்று மற்றொன்றைக் கட்டுப்படுத்தாமல் சுதந்திரமாய் அந்தந்த நட்சத்திற்குரிய பணிகளைச் செய்யும். ஆனால், கிரகங்கள் அப்படிப்பட்டவையல்ல. ஒரு கிரகத்திற்கு மற்றொரு கிரகத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உள்ளது. அதாவது நட்சத்திரங்கள் ஒன்றையொன்று கட்டுப்படுத்தாது. ஆனால், கிரகங்கள் மற்ற கிரகத்தை ஒன்றையொன்று கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டவை.

இதன்படி பார்க்கையில் எல்லா இராசியிலும் பூரண நட்சத்திரங்கள் ஒன்றுக்கு மேற்பட்டு இருக்கின்றன. மற்றொரு விஷயம், நட்சத்திரங்களில் சுப நட்சத்திரம், அசுப நட்சத்திரம் என்று சிலர் பாகுபாடு செய்வர். கிரகங்கள், நட்சத்திரங்கள் எல்லாமே நல்லவைகளே. அவை இருக்கும் இடத்தைப் பொறுத்துப் பலன் தரும். எனவே, சுபம் – அசுபம் நட்சத்திரங்கள் என்று பிரிக்கத் தேவையில்லை என்பதைச் சோதிடர்கள் மனத்தில் கொள்ள வேண்டும்.

இனி இராசியுடன் நட்சத்திரப் பலன்களை அறிந்து கொள்வோம்.

## இராசி – நட்சத்திரப் பலன்கள்

### 1. மேஷ இராசி (அசுபதி, பரணி, கார்த்திகை-1)

**அசுபதி**

கவிஞர். ஓவியர். பிறர் எதிரில் நண்பர்களைக் கேலி செய்பவர்களாக இருப்பர். கூன்முதுகர். கையிடுக்கில் கைப் பை அல்லது கையில் சூட்கேசுடன் நடைபயில்வர். சிரித்த முகம் உள்ளவர். சுரங்கத் தொழிலில் இலாபமுள்ளவர். இந்த நட்சத்திரத்தில் பிறந்த கணவர் / மனைவி இருபாலரும் ஒருவரை ஒருவர் சண்டையிடும் சுபாவமுள்ளவர்.

**பரணி**

நடுத்தரவயதில் குண்டான உடலமைப்பு பெறுவர். சதுரமுகம் உள்ளவர். கொசுவலை தயாரித்தல், ஊர் சுற்றி வியாபாரம் செய்தல், ஆயத்த உடை துணி விற்றல் ஆகிய தொழில்கள் செய்வார். மீன இராசிக்காரர்களால் வெறுக்கப்படும் இவர்கள் செட்டியார்களால் காப்பாற்றப்படுவர். இவர்கள் திருநங்கைகளுக்கு உதவுவர். இந்தியன் வங்கி தொடர்பு உள்ளவர். குடுகுடுப்பைக்காரர் போல் பேசுவர்.

**கார்த்திகை-1**

இவர்கள் நிதி ஏலச்சீட்டில் முதலீடு செய்து நஷ்டமடைவர். இரயில்வே தண்டவாளங்களின் அருகில் நடக்கும் வாய்ப்புடையவர். அதனால் இடர் அடைவர். நாடகங்களில் நடிப்பர்.

### 2. ரிஷப இராசி (கார்த்திகை-2, 3, 4, ரோகிணி, மிருகசீரிஷம்-1, 2)

**கார்த்திகை-2, 3, 4**

ஆலமரம் போன்று குடும்பத்தைக் காப்பாற்றுவர். கடலோர ஊர்களில் மூன்று வீடுகள் வைத்திருப்பர். இவர்கள் இவரது வாழ்க்கைத்துணைக்கு அடங்கியிருப்பர். குடும்பத்தை நாடகம் போல் நடத்துவர். மனைவி / கணவர் வழியில் கலப்புத் திருமணம் நடந்திருக்கும். முகம்மதிய மதத்திற்கு மாறிய இந்து மதத்தவரால் நலம் பெறுவர்.

**ரோகிணி**

கோவிலுக்கு வசூல் செய்வர். நகைச்சுவையாகப் பேசுவதாக நினைத்துப் பிறர் மனம் நோகச் செய்வர். இதில் பெண்கள் தந்திரசாலிகளாகவும், ஆண் ரோகிணி நட்சத்திரக்காரர்கள் ஏமாறுபவர் களாகவும் இருப்பார்கள். சதுரங்கம், கேரம் போர்டு விளையாட்டு விற்பன்னர் ஆவர்.

**மிருகசீரிஷம்-1, 2**

உடன் பிறந்தவர் சொத்தில் சரிபாதி பங்கு கேட்பர். ஆண் மிருகசீரிஷம் நட்சத்திரக்காரர்கள் காரணமின்றி சண்டையிடுவர். பிறர் தவறுகளைச் சுட்டிக்காட்டுவர்.

**3. மிதுன இராசி (மிருகசீரிஷம்-3, 4, திருவாதிரை, புனர்பூசம்-1, 2, 3)**

**மிருகசீரிஷம்-3, 4**

குழப்புவர், குழம்புவர். ஆண் பெண் இருபாலாரும் கணவர் மனைவி எதிரிலேயே சிவந்த நிறமுள்ளவர் அழகை இரசிப்பவர்களாக இருப்பர். திருத்திக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பல உண்டு.

**திருவாதிரை**

கோபமுள்ளவர்கள். மனம் புண்படப் பேசக்கூடியவர்கள். இவர்கள் கோபப்படக்கூடியவர்களாக இருப்பர். பின்னர் பாதிக்கப்பட்டவரை வெகு எளிதில் சமாதானப்படுத்தி விடுவர். தனக்கு விருப்பமானதையே பிறர் செய்ய வேண்டும் என நினைப்பர். எதிர்பார்ப்பர். மன்னிப்புக் கேட்கும் வரை விட மாட்டார்கள்.

**புனர்பூசம்-1, 2, 3**

பூட்டிய அறையில் பூனை புலியாகும் என்பதற்கு இணங்கக் கோபப்படக்கூடியவர்களாக இருப்பர். பார்வையால் எரிப்பார்கள். கண்ணாடி அணிந்தவர்களாக இருப்பர். கண், மூக்கு அழகால் பிறரை வசீகரம் செய்வார்கள். காமாலை போன்ற கொடிய நோய்களுக்கு மந்திரிப்பார்கள்.

**4. கடக இராசி (புனர்பூசம்-4, பூசம், ஆயில்யம்)**

**புனர்பூசம்-4**

ஆசிரியர். குள்ள வடிவம் உள்ளவர்களாக இருப்பர். குடும்பப் பொறுப்பு வேலைகளைச் சாமர்த்தியமாகத் தவிர்ப்பர். இந்த நட்சத்திரத்தைச் சேர்ந்த ஆண்கள் செவிலியர் மற்றும் விதவைகளால் ஏமாற்றப்படுவர். மலையாளிகளால் இடர் உறுவர்.

**பூசம்**

கல்நெஞ்சக்காரர். சுயநலவாதிகள். தற்பெருமையாளர்கள் என்று பெயரெடுப்பார். ஆண், பெண் இருபாலரும் ஆணவக்காரராய் இருப்பார்கள். மறுத்துப் பேசுதல், பிறர் பணத்தைக் கையாளுதல் போன்ற பழக்கம் உள்ளவர்கள். வணிகப் பிரதிநிதி வேலையை விருப்பமுடன் செய்வர்.

**ஆயில்யம்**

இவர்கள் பூச நட்சத்திரக்காரர்களுக்கு இளைத்தவர் அல்லர். இவர்களால் சில நேரம் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். இலையில் சாப்பிட உட்கார்ந்தவரை எழுப்பி வேறு இலையில் உட்கார வைப்பர். நல்லவர் போல் தோன்றினாலும் கேலி பேசுவர். தொழிலாளர் நல அதிகாரி, வைப்பு நல அதிகாரி, கருவூல இளநிலை அதிகாரி பதவிகளுக்கு வாய்ப்பு உடையவர்களாக இருப்பர்.

**5. சிம்ம இராசி (மகம், பூரம், உத்திரம்-1)**

**மகம்**

தந்திரசாலிகள். சந்தர்ப்பவாதிகள். நெஞ்சு, கண் ரோகம் உள்ளவர்கள். வேளாங்கன்னி மாதா அருள் உள்ளவர்கள். வழக்கறிஞர்களிடம் பணியாற்றுவர். கோபத்தைக் காட்டும் விதம் பழிவாங்கலாய் அமையும்.

**பூரம்**

மகம் நட்சத்திரக்காரர்கள் போன்று இவர்களும் அதே குணங்களைக் கொண்டிருப்பார்கள். ஆனால், கெட்டவர்கள் என்று காட்டிக்கொள்வார்கள். வாங்குதல், விற்றல் கொள்கை உள்ளவர்கள்.

**உத்திரம்-1**

சண்டையிடும் சுபாவமும், மறைமுகமாய் நகைச்சுவையாய்ச் சொல்லிக்காட்டும் குணம் உள்ளவர்களாகவும் இருப்பர். பூவன் வாழைப்பழத்தை உரித்தது போல் நிறமுள்ளவர்கள். ரோகிணி நட்சத்திரத்துக்கு உகந்தவர்கள். ஆண் குழந்தை பாக்கியம் உண்டு.

**6. கன்னி இராசி (உத்திரம்-2, 3, 4, ஹஸ்தம், சித்திரை-1, 2)**

**உத்திரம்-2, 3, 4**

சண்டைப் பிரியர்கள். அன்புக்கு ஏங்குவர். இவர்களுக்கு விருப்பம் இருக்கும்போது தான் வீட்டைச் சுத்தம் செய்வர். பிறந்த வீட்டுக்குக் கணவருடைய அனுமதியின்றி சில உதவிகள் செய்பவர்களாக இருப்பர். இரண்டடுக்கு வீடு உண்டு. வானொலி, தொலைக்காட்சித் துறை இலாபம் தரும்.

**ஹஸ்தம்**

கல்யாணி என்பவரால் இலாபம் அடைவர். புரிந்துகொள்ள முடியாதவர்கள். கணவர் மனைவிக்குப் பின்னணி வகிப்பர். மொழி ஆர்வம் உண்டு. செயலாளர் படிப்பு படிப்பர். வானியல், கடல் போன்ற ஆய்வில் ஈடுபடுவர்.

**சித்திரை-1, 2**

அவசரக்காரர்கள். யார் எது சொன்னாலும் நம்புவார்கள். கணவர் மனைவி உறவில் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்க மாட்டார்கள்.

**7. துலா இராசி (சித்திரை-3, 4, சுவாதி, விசாகம்-1, 2, 3)**

**சித்திரை-3, 4**

டெல்லி தொடர்பு உண்டு. இலண்டன் போவார்கள். ஆனந்த், சந்தோஷ் என்பவர்களால் நலம் உண்டாகும். வழக்கு வெல்லும். பாதுகாப்புத் துறை இலாபம் தரும்.

**சுவாதி**

துறவி போன்றவர்கள். எதிலும் ஆர்வம், ஆசை இல்லாதவர்கள். எனினும் இவர்களது பேச்சு சிலருக்கு இடர் தரும். மற்றவர்களுக்குச் சமயத்தில் உதவுவார்கள்.

**விசாகம்-1, 2, 3**

மன அடக்கமற்றவர்கள். சாலையில் நடுவில் நடப்பார்கள். தலைமைப் பதவி. கல்விப் பணி அமையும்.

**8. விருச்சிக இராசி (விசாகம்-4, அனுஷம், கேட்டை)**

**விசாகம்-4**

வசந்த், மாறன், மதன் போன்ற பெயரினரால் நலன் தரும். பெண்களைக் கவரும் அழகர்களாக இருப்பார்கள். ஆரிய இன மக்களை வெறுப்பார்கள்.

**அனுஷம்**

குடும்பத்தை விட்டுத் தனியே குடியிருப்பார்கள். கணவர் மனைவியை மேடம் என்றும், மனைவி கணவரை சார் என்றும் அழைப்பர். பிறருக்கு அறிவுரை சொல்வார்கள். ஆனால், அதன்படி இவர்கள் பின்பற்ற மாட்டார்கள்.

**கேட்டை**

திட்டமிட்டு அதன்படி நடப்பார்கள். மறைவில் தன்விரோதிகளுக்கு இடர் செய்வார்கள். இந்த நட்சத்திரப் பெண்கள் சொல்லிக்காட்டும் குணம் உள்ளவர்கள். விழியோரப் பார்வை வீசுவார்கள்.

**9. தனுசு இராசி (மூலம், பூராடம், உத்திராடம்-1)**

**மூலம்**

நாய், பூனை வளர்ப்பார்கள். பிறர் பொருளுக்கு ஆசைப்படுவார்கள். பவுனைவிட ஒரு ரூபாய் அணிகலன்களில் ஆசையுண்டு. புடவை ஆசையுண்டு. பொறாமை அதிகம் உண்டு, இவர்கள் சிரித்தால் எல்லாருக்கும் எரிச்சல் உண்டாகும்.

**பூராடம்**

திரைப் படம் எடுப்பார்கள். சமய சஞ்சீவி. பாதுகாவலர்.

**உத்திராடம்-1**

சர்வாதிகாரி. எளியவரைத் துன்புறுத்தத் தயங்க மாட்டார்கள். பணபலமற்றவர்கள். நடுத்தரக் குடும்பத்தவர் போன்று தோற்றமுடையவர்கள். கடனுபாதை உண்டு.

**10. மகர இராசி (உத்திராடம்-2, 3, 4, திருவோணம், அவிட்டம்- 1, 2)**

**உத்திராடம் -2, 3, 4**

மன உறுதி, கற்பனை வளம், எல்லாம் தெரிந்தது போல் காட்டிக்கொள்ளுதல் முதலிய குணங்கள் உள்ளவர்கள். தைரியமாய் எதிர்ப்பார்கள். நன்றாகச் சாப்பிடுவார்கள். கொள்கையற்றவர்கள்.

**திருவோணம்**

இவர்களை நம்பி ஏதும் செய்ய இயலாது. எவ்வளவு முறை இவர்களை ஒருவர் புறக்கணிக்கிறாரோ அவ்வளவு முறையும் இவர்கள் புறக்கணிப்பார்கள். பழிக்குப் பழி, இரத்தத்துக்கு இரத்தம் என்ற கொள்கை உள்ளவர்.கள். வசனம் பேசுவர். இசைப்பிரியர்.

**அவிட்டம்-1, 2**

வாக்குத் தவறாதவர்கள். புரோகிதம், பால் பண்ணை, பசு பராமரிப்பு உண்டு.

## 11. கும்ப இராசி

### அவிட்டம்

கண்ணாடி அணிவார்கள். புனர்பூசம் நட்சத்திரக்காரர் போன்று இவர் காமாலை போன்ற கொடிய நோய்களுக்கு மந்திரிக்கும் திறன் உடையவர்களாக இருப்பார்கள்.

### சதயம்

பம்பாய், இந்தோனேசியா, இலங்கை, சிங்கப்பூர் தொடர்பு உள்ளவர்கள். மலையாள மக்கள் தொடர்பு உண்டு. இயற்பியல் அறிந்தவர்களாக இருப்பர். விஞ்ஞானி. பரத், அசோக் போன்ற பெயரினரால் நலம் பெறுவர்.

### பூரட்டாதி-1, 2, 3

குடும்ப விரோதிகள் இவர்களுக்கு நட்பாவர். சாதிவெறியற்றவர். கணவர் / மனைவி இரு குடும்பத்தையும் காப்பாற்றுவர். நீச்சல் அடிப்பதால் இடருண்டு. அதட்டுவது போன்று பேசுவர். நம் எதிரிலேயே நமது பொருளை எடுத்துக் குப்பையில் வீசும் சிறுகுணம் படைத்தவர்கள்.

## 12. மீன இராசி (பூரட்டாதி-4, உத்திரட்டாதி, ரேவதி)

### பூரட்டாதி-4

பெரும்பதவி உண்டு. லாரி வாகனம் உண்டு. இவர்களுக்குக் குஜராத் தொடர்பு உண்டு.

### உத்திரட்டாதி

அன்றோடு முடியும் செயல்களை மட்டுமே செய்வார்கள். தொடர்ந்து ஒரு வேலையைச் செய்யமாட்டார்கள். இவர்கள் வரும்போது வந்தவிட்டார்களே என்று அனைவரும் அருவருப்பும் கலக்கமும் அடைவர். போகும் போது அடடா போகிறார்களே என்று வருந்துவர். இவர்கள் எந்த உதவி செய்தாலும் எடுபடாது. ஒரு கேள்வி கேட்டால். அரை மணி நேரம் பேசுவார்கள். பலர் இவர்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பர்.

### ரேவதி

மௌன சாமியார்கள். இராஜதந்திரி. சுயநலவாதிகள். மெதுவான நடை உள்ளவர்கள்.

OOOOO

## 3.3 நவாம்சம் பலன்கள் (சந்திரன் நிலை அம்சத்தில்)

பன்னிரு இராசிகளைப் போன்றே பன்னிரு நவாம்ச பலன்கள் உண்டு. ஜாதகம் கணிக்கும் போது நவாம்சத்தில் நட்சத்திரப் பாதங்களுக்குத் தகுந்த வண்ணம் நவாம்சம் அமையும். எடுத்துக்காட்டாக, ஒருவர் அசுபதி நட்சத்திரம் 3 ஆம் பாதத்தில் பிறந்தார் என்றால் ஜாதகத்தில் இராசிக் கட்டத்தில் சந்திரன் மேஷம் இராசியிலும், நவாம்சக் கட்டத்தில் சந்திரன் மிதுனம் இராசியிலும் ( 3 ஆம் பாதம் என்பதால்) குறிக்கப்பட்டிருக்கும். சந்திரன் நவாம்சத்தில் இருக்கும் நிலையைப் பொறுத்து பலன்கள் மாறுபடும்.

**1. மேஷ நவாம்சம்**

மெதுவாய்ச் செயல்படுவர். பிறருக்குப் பயப்பட மாட்டார்கள். இயந்திர வாழ்வு. அசுபதி, மகம், மூலம், ரோகிணி, ஹஸ்தம், திருவோணம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் மேஷம் நவாம்சம் பெறுவர். அசுபதி 1 இல் பிறந்தவர் சந்திர வர்கோத்தமம் பெற்று உன்னத நிலையில் இருப்பர். மருத்துவர். பொறியாளர் ஆவர். சிகரம் ஏறுதல், அதலட்டிக் ( பளுதூக்கல்) போன்ற பணி செய்வார்கள். சாசக வீரர்கள். புளி வியாபாரம் செய்வார்கள்.

**2. ரிஷப நவாம்சம்**

அசுபதி, மகம், மூலம், ரோகிணி, ஹஸ்தம், திருவோணம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி 2 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் ரிஷபம் நவாம்சக்காரர்கள். மருத்துவ நிர்வாகம், நீச்சல் வீரர், பக்தர், குளம் வெட்டுபவர்கள், பிசியோதெரபி செய்பவர் இந்த அம்சத்தினர். ரோகிணி நட்சத்திரம் வர்கோத்தமமாகும்.

**3. மிதுன நவாம்சம்**

பல் மருத்துவர். பச்சை குத்துபவர்கள். கொரியா தொடர்பு உள்ளவர்கள். சர்க்கரை, ஆலைத்துறையினர், பாதுகாவலர்கள் இந்த நவாம்சத்தில் பிறந்தவர்கள். அசுபதி, மகம், மூலம், ரோகிணி, ஹஸ்தம், திருவோணம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி நட்சத்திரம் – 3 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள். மிதுனம் நவாம்சத்தினர். பால், வாணிபம் செய்வர். குழப்ப சுபாவம் உள்ளவர். புனர்பூசம் 3 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் வர்கோத்தம நிலை பெறும்.

**4. கடக நவாம்சம்**

வங்கி செயலாளர், சர்க்கஸ் வேலை, கடலை வாணிபம், ஏற்றுமதி, பெட்ரோல் வாணிபம், ஆசிரியப் பணி, நாய் – கோழிப்பண்ணை வைத்தல், குழாய் தயாரித்தல், திரைப்படம் எடுத்தல், கட்சிப்பணி, பள்ளி

நிர்வாகம், நிலக்கரி சுரங்கத் தொழில் அமையும். கண்ணால் மயக்குவார். அசுபதி, மகம், மூலம், ரோகிணி, ஹஸ்தம், திருவோணம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி 4 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் கடக நவாம்சத்தினர். புனர்பூசம் 4 ஆம் பாதம் கடகம் வர்கோத்தமம் பெறும். மிதுனம், கடகம் என்ற இரண்டு இராசிகளில் வர்கோத்தமம் ஆகும் சிறப்பு புனர்பூசத்துக்கு உண்டு.

### 5. சிம்ம நவாம்சம்

பரணி, பூரம், பூராடம், மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் ஏதேனும் ஒன்றில் 1 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் சிம்மம் நவாம்சத்தினர். சிம்மம் (லியோ) வேறு, சிங்கம் (லயன்) என்பது வேறு. இவர்கள் வணங்காமுடிகள். இவர்களைத் தேடி பதவிகள் வரும். கம்பீரத் தோற்றமுள்ளவர். இரசாயன ஆய்வு, வெடிமருந்து தொழில் ஆகியவை உண்டு. கிராம வங்கிப்பணி, கிராம அதிகாரி, ஏற்றம் இறைத்தல் போன்ற துறையில் சிலர் இருப்பர். இரயில் இஞ்சின் ஓட்டுநர், தீயணைப்புத் துறை தொழில் அமையும். கார்பன் மோனாக்ஸைடு தொழில் செய்வாருமுளர். அதளபாதாளம் வெட்டுதல், ஹோமம் செய்தல், வேதம் ஓதுதல், விற்பனையாளர் பலரை வைத்து வேலை வாங்குதல், வீட்டு வாடகை வசூலித்தல் போன்ற தொழிலும் உண்டு. பூரம் 1 ஆம் பாதம் வர்கோத்தமம் நிலை பெறும்.

### 6. கன்னி நவாம்சம்

பரணி, பூரம், பூராடம், மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் 2 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் கன்னி நவாம்சம் பெற்றவர்கள். இவர்கள் கவிதை புனையும் புலவர்கள், வித்வான்கள். குறைந்த வட்டிக்குப் பணம், லேவாதேவி செய்தல், கிராம வழி சிற்றுந்து ஓட்டுதல், குறும்படம் எடுத்தல், மருந்தகம் வைத்தல், உர வாணிபம் செய்தல், புல்வெட்டுதல் (நெல்மணி), தட்டச்சு அடித்தல், சொற்பொழிவாளர், ஜோதிடம் பார்த்தல் ஆகிய தொழில் செய்வர். சிறுதடை, தாமதம் வந்தாலும் அழுதுவிடுவர். மனம் தொய்ந்து விடுவர். சண்டைப்பிரியர்கள். சிறிது கோள் சொல்லும் பழக்கமுடையவர். பிறரைக் கௌரவித்து அவமானப்படுவார்கள். தங்களுக்கு முக்கியத்துவம் இல்லை என்று ஏங்குபவர். சித்திரை 2 ஆம் பாதம் வர்கோத்தமம் நிலை பெறும்.

### 7. துலா நவாம்சம்

பரணி, பூரம், பூராடம், மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி ஆகிய 9 நட்சத்திரங்களுள் ஒன்றில் 3 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் துலாம் நவாம்சத்தினர். வழக்கறிஞர்,

காய்கறி வாணிபம், டைம் ஆபிஸ் பணி, துணிமணி தரக்கட்டுப்பாடு, செம்மண், கரிசல்மண், பாசனம், மொத்த வாணிபம், மருந்துக்கடை, கூரியர் சேவை, ஹோட்டல், மெஸ், சாதி ரீதியான உணவகம் நடத்துபவர்கள். இவர்களால் யாருக்கும் தொல்லை இராது. சித்திரை 3 ஆம் பாதம் வர்கோத்தமம் நிலை பெறும். கன்னி, துலாம் இராசிகளிரண்டில் வர்கோத்தமம் ஆவது சித்திரை நட்சத்திரத்துக்கு உண்டு.

**8. விருச்சிக நவாம்சம்**

பரணி, பூரம், பூராடம், மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம், பூசம், அனுஷம், உத்திரட்டாதியில் 4 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் விருச்சிகம் நவாம்சத்தினர். மின்னியல், சிக்னல், துணிமணி (அடாசு) தொழில், பிளீச்சிங் பவுடர், சோப்பு வாணிபம், தீப்பெட்டி வாணிபம், காப்பி, தேநீர் கடை, வெந்நீர் தொழில், போட்டி பந்தயங்களில் கலந்து தொழில் செய்தல், சும்மா இருத்தல் ஆகியன செய்வர். அனுஷம் 4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்குச் சந்திரன் விருச்சிகத்தில் வர்கோத்தமமாவதால் சந்திரன் நீச்சபலன் அடையாது.

**9. தனுசு நவாம்சம்**

கார்த்திகை, உத்திரம், உத்திராடம், திருவாதிரை, சுவாதி, சதயம், ஆயில்யம், கேட்டை, ரேவதி ஆகிய நட்சத்திரங்களுள் ஒன்றில் முதல் பாதத்தில் பிறந்தவர்களுக்கு தனுசு நவாம்சம் வரும். குடும்பப் பாரம் சுமப்பார். எல்லாருக்காகவும் ஊர்சுற்றி அலைவார்கள். இவர்களது தியாகம் எடுபடாது. சொல்லிக் காட்டுவர். பொறாமை உள்ளவர். எரிபொருள், மின்விளக்கு சமயலறைத்தொழில், அரசியல், பாதுகாப்பு அதிகாரி. பஜனைப்பாடல், குதிரை ஏற்றம், லேவாதேவி, சிமெண்ட் வாணிபம், கணக்காயர் போன்ற தொழில் அமையும். உத்திராடம் ஒன்றாம் பாதம் வர்கோத்தமம் நிலை பெறும். பிஜிதீவு, இலட்சத்தீவு தொடர்பு உள்ளவர்கள்.

**10. மகர நவாம்சம்**

கார்த்திகை, உத்திரம், உத்திராடம், திருவாதிரை, சுவாதி, சதயம், ஆயில்யம், கேட்டை, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் ஒன்றில் 2-ஆம் பாதத்தைச் சேர்ந்தவர்கள் மகரம் நவாம்சம் பெறுவர். இதில் உத்திராடம் 2 ஆம் பாதம் வர்கோத்தமம் நிலை பெறும். உத்திராடம் இரண்டு இராசிகளில் வர்கோத்தமம் நிலை பெறும். ஊட்டி, கொடைக்கானல், மலைவாழ் வாசம், மேடைப்பேச்சு, செய்முறை விளக்க அலுவலர், விமர்சனம் எழுதுதல், முதியோர் காப்பகம் வைத்தல், பஜனை மடம் கட்டுதல், இயற்பியல்

ஆய்வு, கோவில் வழிபாடு, பேக் ஆபிஸ் நடத்துதல், பேப்பர் போடுதல் ஆகிய தொழில் உண்டு. இவ்வாறு வர்கோத்தமம் ஆகும் நட்சத்திரம் இரு மடங்கு பலன் தரவல்லன.

### 11. கும்ப நவாம்சம்

இவர்கள் உட்கார்ந்த இடத்தில் இருந்துகொண்டே மேலாண்மைத் தொழில் மட்டும் செய்வார்கள். அலுங்காமல் கையெழுத்திடும் வேலை மட்டும் அமையும், இவர்கள் எது செய்தாலும் எடுபடாது. சதயம் 3 ஆம் பாதம் வர்கோத்தமம் நிலை பெறும். இந்த இராசியில் வர்கோத்தம பலன் பெறும். கார்த்திகை, உத்திரம், உத்திராடம். திருவாதிரை, சுவாதி, சதயம், ஆயில்யம், கேட்டை, ரேவதி இதில் 3 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் கும்பம் நவாம்சத்தினர். கிளிக்கூண்டு தயாரித்தல், கோலப்போட்டி நடத்துதல், நெருப்பு வளையம் தாண்டுதல், பாம்பாட்டுத் தொழில், சுவாமி அலங்காரம் செய்தல், களிமண் பாண்டம் செய்தல், வடிகால்வாரியத் தொழில், கரும்புச்சாறு பிழிதல் தொழில், பண்டசாலை, கிடங்கு பராமரிப்பு, பஞ்சுத்தொழில் அமையும்.

### 12. மீன நவாம்சம்

கார்த்திகை, உத்திரம், உத்திராடம். திருவாதிரை, சுவாதி, சதயம், ஆயில்யம், கேட்டை, ரேவதி ஆகிய 9 நட்சத்திரங்களில் 4 ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் மீனம் நவாம்சத்தினர். இதில் ரேவதி 4 ஆம் பாதத்தினர் வர்கோத்தம பலனுறுவர். 1 ஆம் பாதத்தில் பிறந்தவரும் கத்தரி வர்க்கோத்தம பலனுறுவர். ஏர்லைன்ஸ், கப்பல் சாகசம் செய்தல், வெள்ளி வியாபாரம், பல் வலி மருந்து தயாரித்தல், சோடா தயாரித்தல், தீக்காய மருந்து, மாந்திரிகம், கால்நடை மருத்துவம், தங்கம் உருக்குதல், இசாயன வாயு ஆய்வு, தணிக்கையாளர், பொருட்காட்சி, மீன் பக்குவப்படுத்துதல், இரத்தம் உறைதலைத் தடுத்தல், ஆகிய தொழில்களில் ஈடுபடுவர்.

* * * * *

## அலகு III

# பாடம் 4 – கிரகங்களின் ஆட்சி, உச்சம், நீச்சம், வர்கோத்தமம், பரிவர்த்தனை

இதுவரை நாம் கிரகங்கள் மற்றும் அவற்றின் அமைப்புகளைப் பற்றி பார்த்தது போல் கிரகங்கள் எந்தெந்த இடத்தில் எந்தெந்தப் பலன்கள், நிலையைப் பெறுகின்றன என்று அறிந்து கொள்வோம்.

மொத்தம் இராசி சக்கரத்தில் 12 வீடுகள் உண்டு. அவற்றை வீடுகள் என்றும் கட்டம் என்றும் இராசி மண்டலம் என்றும் கூறுவர். 12 கட்டங்களில் இடக் கை மேல் ஓரத்து வீட்டுக்கு அடுத்த வீடு ( (இரண்டாம் வீடு முதல் ஆரம்பித்து) கடிகார முள் வரிசையில் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்று பெயரிட்டு அழைப்பர். அதன் விவரம் பின்னால் பிறந்த நேரத்தைக் கொண்டு லக்கினம் அமைக்கப்படுகிறது. பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டு (பாதத்தையும் அனுசரித்து) இராசியும் நவாம்சமும் அமைக்கப்படுகின்றன. இதை ஜாதகக் கணிதத்தில் விரிவாகப் பார்க்கலாம். 12 கட்டங்களும் இராசி, லக்னம், நவாம்சத்துக்குப் பொதுவானதே.

<table>
<tr><td>மீனம் 12</td><td>மேஷம் 1</td><td>ரிஷபம் 2</td><td>மிதுனம் 3</td></tr>
<tr><td>கும்பம் 11</td><td colspan="2" rowspan="2">12 வீடுகள்</td><td>கடகம் 4</td></tr>
<tr><td>மகரம் 10</td><td>சிம்மம் 5</td></tr>
<tr><td>தனுசு 9</td><td>விருச்சிகம் 8</td><td>துலாம் 7</td><td>கன்னி 6</td></tr>
</table>

முதல் வீடு மேஷம், 2 ஆம் வீடு ரிஷபம் என்று வரிசையாக மீனம் வரை 12 வீடுகள். இதுவே 12 கட்டங்கள் ஆகும். இவற்றில் கிரகங்களுக்குரிய ஆட்சி வீடுகளைப் பார்ப்போம்:

### 4.1. ஆட்சி வீடுகள்

சூரியன், சந்திரனுக்கு முறையே ஒவ்வொரு (1) வீடும், மற்ற கிரகங்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு வீடுகளும் ஆட்சி வீடுகளாகும்.

| | ஆட்சி வீடு | |
|---|---|---|
| 1) சூரியன் | சிம்மம் | (5 ஆவது இராசி) |
| 2) சந்திரன் | கடகம் | (4 ஆவது இராசி) |
| 3) புதன் | மிதுனம், கன்னி | (3, 6 ஆவது இராசிகள்) |
| 4) சுக்கிரன் | ரிஷபம், துலாம் | (2, 7 ஆவது இராசிகள்) |
| 5) செவ்வாய் | மேஷம், விருச்சிகம் | (1, 8 ஆவது இராசிகள்) |

6) குரு தனுசு, மீனம் (9, 12 ஆவது இராசிகள்)

7) சனி மகரம், கும்பம் (10, 11 ஆவது இராசிகள்) ஆட்சி வீடுகளாகும்.

| | | | |
|---|---|---|---|
| குரு | செவ்வாய் | சுக்கிரன் | புதன் |
| சனி | ஆட்சி வீடுகள் | | சந்திரன் |
| சனி | | | சூரியன் |
| குரு | செவ்வாய் | சுக்கிரன் | புதன் |

இராகு, கேதுகளுக்கு அவையமைந்த வீட்டின் அதிபதி குணங்களே அமையும் என்றும், இராகு எந்தக் கிரக வீட்டில் உள்ளதோ அந்தக் கிரகப் பலனையேத் தரும் என்றும் கூறுவர். எனினும், அசுபதி நட்சத்திரம் கேதுவுடைய நட்சத்திரம். கேதுவைப் போல் செவ்வாய் என்பதால், கேதுவுக்கு மேஷம் ஆட்சி வீடு என்று குறிப்பிடலாம், சுவாதி இராகுவுடைய நட்சத்திரம். இராகுவைப் போல சனி என்பதற்கிணங்க இராகுக்குத் துலாம் ஆட்சி வீடு என்று குறிப்பிடலாம்,

8) இராகு துலாம் ஆட்சி வீடு

9) கேது மேஷம் ஆட்சி வீடு

## 4.2. கிரகங்களின் உச்சம், நீச்சம் வீடுகள்

எல்லாக் கிரகங்களும் எந்த வீட்டில் நீச்சமாகின்றதோ அதற்கு 7 ஆம் வீட்டில் உச்சமாகும். இதை மனத்தில் கொண்டால் கணக்கிடுவது சுலபம். அதன்படி:

| | உச்சம் வீடு | நீச்சம் வீடு |
|---|---|---|
| 1) சூரியன் | மேஷம் | துலாம் |
| 2) சந்திரன் | ரிஷபம் | விருச்சிகம் |
| 3) செவ்வாய் | மகரம் | கடகம் |
| 4) புதன் | கன்னி | மீனம் |
| 5) குரு | கடகம் | மகரம் |
| 6) சுக்கிரன் | மீனம் | கன்னி |
| 7) சனி | துலாம் | மேஷம் |
| 8) இராகு | விருச்சிகம் | ரிஷபம் |
| 9) கேது | ரிஷபம் | விருச்சிகம் |

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | சூரியன் | சந், கேது | – |
| – | உச்சம் வீடுகள் | | குரு |
| செவ் | | | |
| – | இராகு | சனி | புதன் |

| | | | |
|---|---|---|---|
| புதன் | சனி | இராகு | – |
| – | நீச்சம் வீடுகள் | | செவ் |
| குரு | | | – |
| – | சந்,கேது | சூரியன் | சுக்கிரன் |

மேஷம் – துலாம், ரிஷபம் – விருச்சிகம், மகரம் – கடகம், கன்னி – மீனம் ஆகிய இராசிகள் 7ஆவது இராசிகளாவது காண்க. மிதுனம், சிம்மம், தனுசு, கும்பம் ஆகிய நான்கு வீடுகளில் உச்சம், நீச்சம் இல்லை. புதனுக்கு மட்டும் கன்னி இராசியில் உச்சம், ஆட்சி நிலை உண்டு.

### 4.3. **வர்கோத்தமம்**

:

| | | | |
|---|---|---|---|
| சூரி புத | செவ் | குரு | கேது |
| சனி | இராசி | | |
| சுக் | | | சந் |
| இராகு | | | |

| | | | |
|---|---|---|---|
| சூரி புத | செவ் | குரு | கேது |
| சனி | நவாம்சம் | | – |
| சுக் | | | சந் |
| இராகு | – | – | – |

எந்த ஒரு கிரகம் இராசியிலும் அம்சத்திலும் ஒரே இராசியில் இடம் பெறுவது வர்கோத்தமம் நிலை ஆகும்.

எடுத்துக்காட்டாக, செவ்வாய் இராசியிலும் நவாம்சத்திலும் மேஷத்தில் இருந்தால், செவ்வாய் வர்கோத்தமம் நிலை பெறும். இதுபோல் குரு ரிஷபத்தில் இராசியிலும் நவாம்சத்திலும் இருந்தால் குரு வர்கோத்தமம் நிலை பெறும். மேற்கண்ட அமைப்புகள் எடுத்துக்காட்டுகளே. எந்தக் கிரகம் வேண்டுமானாலும் எந்த இடத்திலும் மாறலாம். இராசியில் கும்பத்தில் செவ்வாய் இருந்தால், அம்சத்திலும் கும்பத்தில் இருக்க வேண்டும். அப்போதுதான் வர்கோத்தமம். இதுபோல் எல்லாக் கிரகங்களுக்கும் பொருந்தும்.

உச்சக் கிரகங்கள் வர்கோத்தமமானால் நீச்சப் பலனைத் தரும். நீச்சக் கிரகங்கள் வர்கோத்தமம் ஆனால் உச்சப் பலனைத் தரும். ஆட்சிக் கிரகங்கள் வர்கோத்தமமானால் பெருஞ்செல்வத்தைத் தரும்..

**கத்தரி வர்கோத்தமம்**

| | | | |
|---|---|---|---|
| குரு | செவ் | | |
| | இராசி | | |
| சனி | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சனி | நவாம்சம் | | |
| | | | |
| குரு | செவ் | | |

செவ்வாய் இராசியில் மேஷத்தில் இருந்து அம்சத்தில் விருச்சிகத்தில் இருந்தால் செவ்வாய் கத்திரி வர்கோத்தமம் ஆகும். அதே போல் இராசி, அம்சத்தில் புதன் இராசியில் கன்னியிலும், அம்சத்தில் மிதுனத்திலும் இருந்தால் கத்தரி வர்கோத்தமம், குரு இராசியில் மீனத்திலும் அம்சத்தில் தனுசில் இருந்தாலும் கத்திரி வர்கோத்தமம். ஒரு ஜாதகத்தில் ஒன்று இரண்டுக்கு மேற்பட்ட கிரகங்கள் வர்கோத்தமம் ஆவதுண்டு. அது சிறப்பு.

கத்தரி வர்க்கோத்தமம் எல்லாக் கிரகங்களுக்கும் உண்டாகும். எடுத்துக்காட்டாக, சூரியன் இராசியில் கும்பத்திலும், அம்சத்தில் மகரத்திலும் இருப்பதும் கத்தரி வரகோத்தமம் தான்.

**4.4. பரிவர்த்தனை**

| | | | |
|---|---|---|---|
| சுக் | | குரு | |
| | ஓரடுக்குப் பரிவர்த்தனை | | |
| | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| சனி | | | சந்திரன் |
| குரு | ஈரடுக்குப் பரிவர்த்தனை | | புதன் |
| | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| சந் | சூரியன் | புதன் | சுக் |
| | மூவடுக்குப் பரிவர்த்தனை | | குரு |
| | | | செவ் |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| செவ் | குரு | சூரியன் | சனி |
| | மூன்றடுக்குப் பரிவர்த்தனை | | |
| புதன் | | | சுக் |
| | | | |

சூரியன் வீட்டில் செவ்வாய், செவ்வாய் வீட்டில் சூரியன் இருப்பது பரிவர்த்தனையாகும். அதேபோல், சந்திரன் வீட்டில் புதன், புதன் வீட்டில் சந்திரன் என்று அமைவது பரிவர்த்தனை. இந்த யோகம் ஒரு ஜாதகத்தில் மூவிரு கிரகங்கள் பரிவர்த்தனையாகவும் வாய்ப்புள்ளது.

ஓரடுக்கு, ஈரடுக்கு, மூவடுக்குப் பரிவர்த்தனைகளுக்கான எடுத்துக்காட்டுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. சுக்கிரன் – குரு ஓரடுக்குப் பரவர்த்தனை. சனி – குரு, சந்திரன் – புதன் ஈரடுக்குப் பரிவர்த்தனை. சந்திரன் – குரு, சூரியன் – செவ்வாய், புதன் – சுக்கிரன் மூவடுக்குப் பரிவர்த்தனைகள்.

ஓர் அடுக்குப் பரிவர்த்தனை வங்கி ஊழியத்தையும், ஈரடுக்குப் பரிவர்த்தனை பொதுத்தறை வேலைவாய்ப்பையும், மூவடுக்குப் பரிவர்த்தனை அரசியல் தொடர்பு, ஒப்பந்தத் தொழிலையும் தரும். கிரகங்களைப் பொறுத்து பரிவர்த்தனைக்குண்டான பலன்கள் மிக நீண்டவை. அவற்றைப் பின்னர் தனி அலகில் பார்ப்போம்.

**குறிப்பு-1 (வர்கோத்தமம்):**

1) ஒரு ஜாதகத்தில் இராசி, லக்கினம் இரண்டும் வர்கோத்தமம் ஆவது சிறப்பு.

2) கூட்டு கிரகங்கள் வர்கோத்தமம் ஆவது சிறப்பு.

3) எல்லா கிரகங்களும் ஆட்சி, உச்சம், நீச்சம், வர்கோத்தமம் அடையும் பண்பு பெற்றவை.

**குறிப்பு-2**

1) லக்னமும் இராசியும் ஒரே கிரகக் காலில் (பாதத்தில்) வருவது தன்னம்பிக்கையைத் தரும்.

2) லக்னமும் சந்திரனும் அம்சத்தில் ஒரே இராசியில் இருந்தால் நீண்ட ஆயுள் உண்டாகும்.

3) **சுய விரோதிகள்:** லக்னம் உத்திரக் காலிலும் இராசிச் சந்திரன் விசாகக் காலிலும், லக்னம் பரணி காலிலும் சந்திரன் அவிட்டக் காலிலும் இருந்தால், சுய விரோதிகள் ஆவர். பகை யோனி நட்சத்திரக் கால்களில் லக்னம், சந்திரன் அமையப் பெற்றவர்கள் சுய விரோதிகள் ஆவர்.

* * * * *

## *அலகு III* – பாடம் 5 – காரகத்துவமும் ஆதிபத்தியமும்

பஞ்சபூதங்களைப் போன்றே 9 கிரகங்களுக்கும் அதிகாரங்கள் இறைவனால் வழங்கப்பட்டுள்ளன. காரகத்துவம் என்பது குறிப்பிட்ட கோள்களின் உரிமையை, அதிகாரத்தைக் குறிக்கும். காரகத்துவம் என்பது கிரகத்துவம் என்ற வார்த்தையில் இருந்து வந்தது. கிருத்திகை – கார்த்திகை என்று மாறியது போல் காரகத்துவம் வந்தது. ஆதிபத்தியம் என்பது பிறந்த லக்னத்தைப் பொறுத்து மாறுபடும். காரகத்துவம் எல்லா இராசிகளுக்கும் பொதுவானவை.

### 5.1. காரகத்துவம்

**1) சூரியன்: பிதுர்காரகன், அரசியல் காரகன்**

ஜாதகருடைய தந்தையின் நிலையையும் ஜாதகரின் அரசாங்க வேலையையும் நிர்ணயம் செய்யும் அதிகாரம் சூரியனுக்கு உண்டு. அதாவது, சூரியன் உச்சமானால் ஜாதகருக்கு க்வாசி அரசு வேலை, ஆட்சியானால் மாநில அரசு வேலை, நீச்சமானால் மத்திய அரசு, தனியார் தொழிலக வேலை அமையும். சூரியன் உச்சமானால் தந்தை மரணமடைவார். நீச்சமானால் தந்தை அதிக நாள் உயிரோடு இருப்பார். ஆட்சியானால் தந்தை பெரும்பதவியில் இருப்பார்.

**2) சந்திரன்: மாதுர்காரகன், மனக்காரகன்**

ஜாதகரின் தாயாருடைய ஆயுள் உடல்நிலையைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், ஜாதகரின் மனநிலையைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் உதவும். சந்திரன் உச்சமானால் தாயாருக்கு நலமும், நீச்சமானால் மனபயம் உண்டாகுதலும் (அம்னீஷியா) மறதி நிலை உண்டாகுதலும், ஆட்சியானால் சந்திர ஆய்வு, கடலாய்வு நிலையும், தாயார் அன்பு இல்லாமையும் உண்டாகும்.

**3) செவ்வாய்: சகோதரகாரகன், பூமிகாரகன்**

ஒருவருடைய மூத்த இளைய சகோதரர், சகோதரிகள் பற்றிய விவரங்களும், சொந்த வீடு, வாடகை வீடு அல்லது கூரை வீட்டு வாசம், அக்ரகார வாழ்வு, அடுக்கு மாடி வீட்டு வாசம், வீடு, பூமி வாங்கல் விற்றல் இலாப / நட்ட விவரம் ஆகியவற்றை அறிய உதவும். செவ்வாய் ஆட்சியானால் நிலச் சொத்து நிலைத்து இருக்கும். சகோதர உறவுப் பலப்படும். உச்சமானால் மூன்றுக்கு மேல் வீடுகள், நிலங்கள்

அமையும். சகோதர மணவாழ்வு பற்றிக் கூறும். நீச்சமானால் பூமி இழப்பு, சகோதர இழப்பு மனவருத்தம் பற்றிக் கூறும்.

**4) புதன்: வித்யாகாரகன், மாதுலகாரகன் (தாய் வழி மாமா)**

தாய் மாமா, சித்தி, பெரியம்மா பற்றிய விவரம், பால் கொள்முதல் வாணிபம், படிப்பு பற்றிய விவரம் அறியலாம். எந்த லக்னமானாலும் 6, 8, 12 இல் மறையும். புதன் அதற்குரிய பலனையே தரும். மறைந்த புதன் நிறைந்த வித்தை தரும் என்னும் வழக்கு உண்மைக்குப் புறம்பானது. புதன் நடுக்கோள் என்பதால் உச்சம், நீச்சம், ஆட்சி பலன்கள் கிடையாது.

**5) குரு: புத்திரகாரகன், பொன்காரகன்**

ஒருவருடைய புத்திர பாக்கியம், பொன் சேர்க்கை பற்றிய விவரங்கள் குரு அமைப்பைப் பொறுத்து அறியலாம். குரு நீச்சமானால் உடலுபாதை உள்ள குழந்தைகள் பிறக்கும். உச்சமானால் உன்னதக் குழந்தைகள் பிறக்கும். ஆட்சியானால் சொன்ன பேச்சைக் கேட்காத குழந்தைகள் பிறக்கும். பிற கிரகங்களின் பார்வை ஸ்தானங்களைப் பொறுத்து பலன்கள் மாறும். பொன் இழத்தல், சேர்த்தல், பதுக்கல் இவற்றைப் பற்றிப் பின்னர் காண்போம். குரு உச்சமானால் பொன் சேரும். நீச்சமானால் பொன் அடமானத்தில் இருக்கும். குரு ஆட்சியானால் பொன்னாசை இருக்காது.

**6) சனி: ஆயுள்காரகன்**

ஒருவருடைய நோய், ஆயுள், விபத்துக்கள் பற்றிக் கூறுவது சனி. சனி ஆட்சியானால், நீண்ட ஆயுள். உச்சமானால், 90 வயது ஆயுள். நீச்சமானால், லக்னத்திலிருந்து இருக்கும் இடத்தைப் பொறுத்து மரணநிகழ்வு பற்றித் தெரிந்து கொள்ளலாம். சனி நல்லவன். சனிக்கு நமஸ்காரம் செய்தால் முதுகில் ஏறி அமர்ந்து விடுவார் என்பது தவறான கருத்து. ஐந்து பேர் ஈஸ்வரப் பட்டம் வாங்கியவர்கள். (1) விக்னேஸ்வரர், (2) சண்டிகேஸ்வரர், (3) நந்திகேஸ்வரர், (4) சனிஸ்வரர், (5) ராவணேஸ்வரன் என்பதிலிருந்து சனி நல்லவர் என்று அறியலாம்.

**7) சுக்கிரன்: களத்திர காரகன் (மண வாழ்வு), கர்ம காரகன்**

ஒருவருடைய கணவர் / மனைவி நிறம், குணம், தொழில் நல்லது கெட்டது இவற்றை நிர்ணயம் செய்வது சுக்கிரனின் வேலை. ஒருவருடைய தொழில் என்னவென்பது பற்றியும் தெரியப்படுத்துவது சுக்கிரனின் தொழில். எனவே, இவருக்குத் தொழிற்காரகன் என்ற பெயரும் உண்டு. மேலும், தாய்

தந்தையின் இறப்பு எந்த நிலையில், என்று நிகழும் எனத் தெரியப்படுத்துவதும் சுக்கிரனே. இதனால் சுக்கிரன் கர்மகாரகன் ஆகிறான்.

**8) இராகு: பிதாமகர் காரகன், நோய்க்காரகன், இசைக்காரகன்:**

தந்தை வழிப் பாட்டன், பாட்டி பற்றிய விவரம் தெரிவிப்பார். நோய்க் காரணத்தைத் தெரியப்படுத்துவார். கர்நாடகச் சங்கீதம் பற்றிய அறிவு அளிப்பார்.

**9) கேது: மாதாமகர் காரகன், மருத்துவக் காரகன், இசைக்காரகன்:**

ஒருவர் மருத்துவர், அறுவை சிகிச்சை வல்லுநர், மருத்தவ ஆய்வாளர், மருத்துவப் பேராசிரியர் ஆவதற்கும், இசை வல்லுநராய் இருப்பதற்கும் கேதுவின் அனுக்கிரகம் தேவை. தாய் வழித் தாத்தா, பாட்டி விவரம், இசை ஞானம், வேதம் கற்றல் முதலியவற்றுக்கு உதவுவதால், இவரை ஞானகாரகன் என்பாரும் உள்.

ஒருவருடைய ஜாதகத்தில் கேது தனித்து பத்தில் உச்சமானால் மயானம் காப்பார். கடகம்–மகரம் இராசிகளில் இராகு– கேது தனித்திருந்தால் இசை வல்லுநர், ஞானியாவார். சிம்மம்–கும்பம் இராசியில் இருந்தால் கர்நாடக சங்கீத வித்துவான் ஆவார். கர்ணம் = காது, ஆடகம் = தோடு. காது தோடாட இரசித்துக் கேட்பதால் கர்நாடக சங்கீதம் ஆயிற்று. இராகு – கேது – தனித்திருப்பது 10 இலட்சம் நபர்களில் ஒருவருக்கு அமையும்.

## 5.2. ஆதிபத்தியம்

இதுகாறும் காரகத்துவத்தைப் பற்றி அறிந்து கொண்ட நாம் இனி ஆதிபத்தியத்தைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

ஆதிபத்தியம் என்பது லக்கினத்தைப் பொறுத்து 12 வீடு அதிபதிகளைக் குறிக்கும். எந்த லக்கினமாய் இருந்தாலும் சரி, லக்கினம் உள்ள வீட்டுக்கு அதிபதி லக்கினாதிபதி ஆவார்.

எடுத்துக்காட்டாக, மேஷம் லக்கினம் என்றால், ஒன்றாம் வீடு லக்கினாதிபதி செவ்வாய்.
இரண்டாம் வீட்டு அதிபதி சுக்கிரன் வாக்கு ஸ்தானாதிபதி / குடும்பாதிபதியாவார்.
மூன்றாம் வீட்டு அதிபதி புதன், சகோதர ஸ்தானாதிபதி.
நான்காம் வீட்டு அதிபதி சந்திரன், மாதுர் ஸ்தானாதிபதி.
5 ஆம் வீட்டு அதிபதி சூரியன் பூர்வ புண்ணியாதிபதி. 6 ஆம் வீட்டு அதிபதி புதன் ருண–ரோகாதிபதி.

7 ஆம் வீட்டு அதிபதி சுக்கிரன் களத்திராதிபதி. 8 ஆம் வீட்டு அதிபதி செவ்வாய், ஆயுள் அதிபதி.

9 ஆம் வீட்டு அதிபதி குரு பிதுர்ஸ்தானாதிபதி. 10 ஆம் வீட்டு அதிபதி சனி கர்மாதிபதி.

11 ஆம் வீட்டு அதிபதி சனி இலாபாதிபதி. 12 ஆம் வீட்டு அதிபதி குரு விரையாதிபதி, அயன சயனாதிபதி என்று கொண்டு, கிரகங்களின் குணங்களுக்கு ஒப்பப் பலன் சொல்ல வேண்டும்.

இதைப் போல் ரிஷபம் முதல் மீனம் வரை உள்ள லக்கினத்தின் அடிப்படையில் கிரகங்களின் ஆதிபத்தியம் மாறும். பலன்கள் கவனமுடன் சொல்ல வேண்டும்.

### 5.2.1. பன்னிரண்டு வீடுகள் ஆதிபத்தியம்

1. லக்கினம்: லக்கினாதிபதி, 2 ஆவது வீடு: குடும்பம், வாக்கு,

3 ஆவது வீடு, சகோதரம், 4 ஆவது வீடு மாதுர் ஸ்தானம்,

5 ஆவது வீடு பூர்வ புண்ணிய ஸ்தானம். 6 ஆவது வீடு ருண ரோக ஸ்தானம்,

7 ஆவது வீடு களத்திர ஸ்தானம், 8 ஆவது வீடு ஆயுள் ஸ்தானம்,

9 ஆவது வீடு பாக்கிய, பிதுர் ஸ்தானம், 10 ஆவது வீடு கர்ம ஸ்தானம்,

11 ஆவது வீடு இலாப ஸ்தானம், 12 ஆவது வீடு விரைய ஸ்தானம், அயன சயன ஸ்தானம் (இல்லற சுகம்).

இதை மனதிற் கொண்டு சோதிடர்கள் பலனைச் சொல்ல வேண்டும்.

காரகாதிபதிகள் ஆதிபத்தியங்கள் வேறுபட்டாலும் ஒரு சிலருக்குக் காரகாதிபதிகளே ஆதிபத்தியாதிபதிகள் ஆவர்.

எடுத்துக்காட்டாக, லக்கினாதிபதியைப் பற்றிக் கவலை இல்லை. மேஷம் லக்னத்துக்கு குடும்பாதிபதி களத்திரகாரகன், களத்திர ஸ்தானாதிபதி இருவருமே சுக்கிரனாவார். மாத்துர்ஸ்தானாதிபதி, மாத்துருகாரகன் இருவருமே சந்திரனாவார்.

தனுசு லக்கினத்துக்குச் சூரியனே பிதுர் ஸ்தானாதிபதி, பிதுர் காரகன் ஆவார்.

ரிஷபம் லக்கினத்துக்கு புதனே வித்யாகாரகன், வித்யாஸ்தானாதிபதி ஆவார்.

சிம்மம் லக்கினத்துக்குக் குருவே புத்திரகாரகன், புத்திரஸ்தானாதிபதி ஆவார்.

கடகம் லக்கினத்துக்குச் சனியே ஆயுள் காரகன், ஆயுள் ஸ்தானாதிபதி ஆவார்.

## 5.3. ஆதிபத்தியமும், காரகத்துவமும் ஒன்றாய் இருக்கும் லக்கினங்கள்

1. தனுசு லக்கினத்துக்குச் சூரியன் பிதுர்காரகன், பிதுர்ஸ்தானாதிபதி.

2. மேஷம் லக்கினத்துக்குச் சந்திரன் மாதுர்காரகன், மாதுர்ஸ்தானாதிபதி .

3. கும்பம் – கன்னி லக்கினங்களுக்கு செவ்வாய் சகோதர காரகன். சகோதர ஸ்தானாதிபதி.

4. கும்பம் – ரிஷபம் லக்னங்களுக்குப் புதன் வித்யாகாரகன் வித்யாதிபதி.

5. சிம்மம் – விருச்சிகம் லக்னங்களுக்குக் குரு புத்திரக்காரகன், புத்திர ஸ்தானாதிபதி.

6. மேஷம் – விருச்சிகம் லக்னத்தில் பிறந்தவருக்குச் சுக்கிரன் களத்திர காரகன், களத்திர ஸ்தானதிபதி.

7. மிதுனம் – கடகம் லக்னங்களுக்குச் சனி ஆயுள் காரகன், ஆயுள் ஸ்தானாதிபதி.

இப்படி அமைவது சிறப்பு குறைவானது.

ஆதிபத்தியம் வேறு, காரகத்துவம் வேறாக அமைவதே உத்தமம், சிறப்பு.

மேற்கண்ட கிரகங்கள் நீச்சம், பகை வீடுகளில் இருந்தால் சுமாரான பலன்களே உண்டாகும்.

துலாம், மகரம், மீனம் லக்னத்தினர்களுக்கு மட்டும் ஒரே அதிபதி காரகர் அமைவதில்லை. இதுவே அந்த மூன்று லக்கினங்களுக்கு உண்டான சிறப்பு.

## 5.4. பன்னிரண்டு வீடுகளின் உட்பொருள்

இனி 12 வீடுகளின் உட்பொருள் காண்போம்.

1. லக்னம்: வாழ்வு, தாயாரின் தொழில்.

2 ஆம் வீடு: குடும்பம், நண்பர்களின் உறைவிடம், தொழில், தந்தை கடன்.

3 ஆம் வீடு: சகோதரம், மாமனார்.

4 ஆம் வீடு: தாயார் நிலை

5 ஆம் வீடு: கல்வி

6 ஆம் வீடு: நோய், ருணம், தந்தையின் தொழில், தாய்க்கடன் அடைதல்.

7 ஆம் வீடு: கணவர் மனைவி (மணவாழ்வு)

8 ஆம் வீடு: ஆயுள்.

9 ஆம் வீடு : தந்தை, பாக்கியம், மைத்துனர்.

10 ஆம் வீடு : தொழில், மாமியார், பிள்ளையின் கல்விநிலை

11 ஆம் வீடு: சகோதரரின் தொழில், இலாபம்.

12 ஆம் வீடு: நட்டம்.

இவ்விதம் அனுபவம் வர வர, பெற பெற, பக்குவம் உண்டாகி பலன்கள் கூறலாம்.

காரகாதிபதியும் அதற்குரிய அதிபதிகளும் ஒன்றிணைந்தால்  நற்பலன்கள் குறைந்து காணப்படும்.

எடுத்துக்காட்டாக, விருச்சிக லக்னத்திற்குச் சந்திரன் பிதுர் ஸ்தானதிபதி; சூரியன் பிதுர்காரகன்; இவை இரண்டும் எதோ ஒரு வீட்டில் ஒன்றிணைந்தால், சுமாரான பலனையே கொடுக்கும். துலாம் இராசியில் (சூரியன் நீச்சமாவதால்) சூரியனும் சந்திரனும் இணைந்து இருந்தால் தந்தைக்கு மரணமுண்டாகும். விருச்சிகத்தில் நீச்ச சந்திரனுடன் சூரியன் இணைந்தால் தந்தைக்கு நோய் உண்டாகும். இதே போல் மற்ற கிரகங்களுக்கும் பொருந்தும்.

இராகு – கேதுகள் சேரும் இராசியாதிபதி சற்றுச் சக்தியை இழப்பார்.

காரகத்துவம் ஆதிபத்தியம் இரண்டுமே ஆட்சியுற்றால் நல்லது. ஒன்று நீச்சம் ஒன்று உச்சமானால்,  எடுத்துக்காட்டாக, பிதுர்காரகன் உச்சமாகி பிதுர் ஸ்தானதிபதி  நீச்சமானால் தந்தைக்கு இறக்கம் உண்டு.  மாறியிருந்தால் உயர்வு உண்டு.

இராசியில் 10 ஆம் அதிபதி, தொழிலதிபதி  உச்சமாகி அம்சத்தில் நீச்சமானால் தொழில் நட்டத்தில் முடியும். அதே நேரத்தில் 10 ஆம் அதிபதி  இராசியில் நீச்சமாகி அமசத்தில் உச்சமானால் பல கோடியளவு இலாபம் வரும்.

* * * * *

# அலகு III - பாடம் 6 – பரஸ்பர பார்வை

கிரகங்கள் ஒன்றுக்கொன்று 7 ஆம் வீட்டில் இருக்கும்போது பரஸ்பர பார்வை வீசும். செவ்வாய்க்கு 4 இல் சனி இருந்தால் பரஸ்பர பார்வை வீசும்.

1. **சூரியன்:** சூரியன், சந்திரன் ஒன்றுக்கொன்று 7 இல் இருந்தால் பவுர்ணமி யோகம். கெட்ட சிந்தனையற்றவர். வெளிப்படையான பேச்சுள்ளவர்.

சூரியன், செவ்வாய் ஏழுக்கு ஏழில் இருந்தால், பவர்ஸ்டேஷன் அதிகாரியாவார். மணவாழ்வு சுகம்தராது. வேடுவர்கள் காகத்தை உண்பார்கள்.

சூரியன், புதன் பரஸ்பர பார்வை பெறாது. புதன் சூரியனுக்கு முன்னும், பின்னும், சூரியனுடனுமே பயணம் செய்யும்.

சூரியன், குரு பரஸ்பர பார்வை இருந்தால் வேளாண்மைத் துறை அலுவலகராவார். நூலகராவார்.

சூரியன், சுக்கிரன் பரஸ்பர பார்வை: பணமுதலை, லஞ்சம் வாங்குவார்.

சூரியன், சனி பரஸ்பர பார்வை: பக்தி நெறியாளர். சிலர் கள்வராய் இருப்பர்.

சூரியனுக்கு ஏழில் இராகு: (அல்லது) கேது: ஆட்டோ, வாடகை வண்டி ஓட்டுதல், டயர் வல்கனைசிங், பிளிச்சிங் பவுடர் வாணிபம்.

2. **சந்திரன்:** சந்திரன், செவ்வாய் பரஸ்பரபார்வை பெறின்: சந்திர மங்கள யோகம். கால்வாய் வெட்டுதல், தந்தை வீட்டில் வாடகை வசூல் செய்வார்.

சந்திரன், புதன் பரஸ்பரபார்வை: குழல் விளக்கு தயாரித்தல், ப ால் வாணிகம்.

சந்திரன், குரு: குருச்சந்திர யோகம்.

சந்திரன், சுக்கிரன்: குடிகாரர், தீயோர் சேர்க்கை.

சந்திரன், சனி: திட்ட அதிகாரி, மொழியதிகாரி.

சந்திரன், இராகு: இரவு நேரக் காவலர். கருவூலக் காவலர்.

சந்திரன், கேது: மயானக் காவலர்.

3. **செவ்வாய்:** செவ்வாய், புதன் பரஸ்பர பார்வை: பறவை வளர்த்தல் பொருளாதாரத் துறை வல்லுநர்.

செவ்வாய், குரு: குருமங்கள யோகம்

செவ்வாய், சுக்கிரன்: பெண்மகவு தவறான வழியில் சென்றுவிடும்.

செவ்வாய், சனி: தீ விபத்தை உண்டாக்கும்.

செவ்வாய், இராகு (அ) கேது: நிலக்கரி, வைரச் சுரங்கப் பணி.

4. **புதன்:** புதன், குரு பரஸ்பர பார்வை: தீர்ப்பு மன்ற (ட்ரீபுனல்) அதிகாரி, டவாலிப் பணி, சர்பத் கடை வைத்திருப்பார்.

புதன், சுக்கிரன் ஏழாம் வீடு பார்வை: தோட்டக்கலை வல்லுநர்.

புதன், சனி: செய்தி தொடர்பாளர், தூதரகப்பணி,

புதன், இராகு : பணமுடை உள்ளவர்.

புதன், கேது: கோவிலில் சமையல்காரர், குருக்களாவார்.,

5. **குரு:** குருவும் சுக்கிரனும் ஏழுவீடு தள்ளியிருந்தால் டீம்டு கலெக்டர், டெபுடி கலெக்டர்.

குரு, சனி பரஸ்பர பார்வை:: உறவினருள் யாராவது தொலைந்திருப்பார்.

குரு+சனி ஓர் இராசியில் இருபது ஆண்டுகளுக்கு ஒரு முறை சேரும். 25 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏழு வீடுகள் கணக்கில் பரஸ்பர பார்வை பெறும்.

குரு, இராகு (அல்லது) கேது: மாமா, சிற்றப்பாவழி இலாபம்.

6 **சுக்கிரன்**+இராகு, கேது : மாமா, சிற்றப்பா வீட்டு செல்வம் சேரும்.

7. **சனி:** சனி, இராகு (அ) கேது பரஸ்பர பார்வை: பணமுடை

8. **இராகு–கேது** எப்போதும் ஏழு வீட்டில் அமையும்.

* * * * *

## பாடம் 7 – பிறந்த எண் மற்றும் நவரத்தினங்கள்

நவகிரகம், நவதானியம், நவரத்தினம், நவ எண்கள், நவராத்திரி என ஒன்பது வகை குழுமநிலை இயக்கங்களால் ஆனது உலகம். பஞ்சபூதங்களால் ஆனது பிரபஞ்சம். இதில் எண்களாலும் நவரத்தினங்கள் அணிவதாலும் பலன்கள் உண்டாகும் என்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர்.

இறைவனை, *எண்ணாகி, எழுத்தாகி* என்று போற்றிப் பாடினர் முன்னோர். காரணம் மொழி அறிந்தவருக்கு எழுத்தின் பொருள் புரியும். படிப்பறிவு இல்லாதவருக்கு எழுத்து வரி வடிவமாய்த் தெரியும். இதைத் தான் எழுத்தாகி என்று இறைவனைப் போற்றிப் பாடினர். உலகத்திலேயே சிறிய எண் 0. ஆனால், அது வேறு எண்களுக்குப் பின் வந்தால் மதிப்புப் பெருகச் செய்கிறது. அதே போல் உலகின் மிகப் பெரிய எண் எது? நம்மால் எவ்வளவு பெரிய எண்ணை நினைக்கமுடியுமோ அதைவிடப் பெரியது அது. இதைத்தான் இறைவனை எண்ணாகி என்றனர். அந்த ஒன்பது எண்களுக்கும் உரிய பலன்களைப் பார்ப்போம்.

எண்களில் உயிர் எண், உடல் எண் என்று இருவகை உண்டு. ஒருவர் பிறந்த நாளைச் சொல்லும்போது தேதியை மட்டும் சொன்னால் பிறந்த தேதி உயிர் எண் ஆகும். தேதி, மாதம், வருடங்களின் கூட்டுத்தொகை உடல் எண் எனப்படும்.

எடுத்துக்காட்டாக, 21-01-1961 என்பதில் 21 எண் என்பது உயிர்எண் (விதி எண்). தேதி, மாதம், வருடங்களின் கூட்டுத்தொகை 2 + 1 + 1 + 1 + 9 + 6 + 1 = 21 = 2 + 1 = 3. அதாவது உடல் எண் 3.

பிறந்த தேதியும் தேதி, மாதம், வருடம் கூட்டுத்தொகையும் ஒன்றானால் ஜாதகர் அமோக பலன் பெறுவர். 21-1-1961 இல் பிறந்த தேதி கூட்டுத்தொகை 3. தேதி, மாதம், வருடம் முதலியவற்றைக் கூட்டினாலும் 3. இது உயர்வானது.

அஃதன்றி உயிர் எண் வேறு; உடல் எண் வேறு என்று இருந்தால், பலன்கள் சற்று மாறும். எடுத்துக்காட்டாக, பிறந்த தேதி எண் 4. மொத்தக் கூட்டுத்தொகை 5 என்றால் பலன்கள் சற்று மாறும். தற்போது எண் கணிதத்துக்கு அதிக முக்கியத்துவம் வந்துள்ளது.

தற்காலத்தில் எண்ணியல் வல்லுநர், கல்லியல் வல்லுநர் என்று பட்டம் வைத்துக் கொள்கின்றனர். எண்ணியல் நவமணியியல் என்று சொல்லுமளவுக்கு இவை விரிவான பின்னணி உள்ளவையல்ல. 9 வகையான பிரிவே உண்டு. சிலர் பக்கம் பக்கமாய் ஒவ்வொரு எண்ணுக்கும் பலன் எழுதுவர். அது அவசியமில்லை. அதே போல் 9 கற்களுக்கும் ஏழு அல்லது எட்டு வரிகள் அளவே செய்திகள் உள்ளன. இதன்மூலம் எண்ணியல் வல்லுநர்களையும், கல்லியல் வல்லுநர்களையும் புண்படுத்தி விட்டதாய் நினைக்க வேண்டாம். இது ஒரு செய்தி அவ்வளவே.

நவரத்தினங்களில் மேஷம் – விருச்சிகம் என்றால் பவழம், மிதுனம் – கன்னி என்றால் மரகதம் என்று மேம்போக்காய் சொல்லக் கூடாது. ஒருவேளை மேஷம் இராசிக்காரருக்குச் செவ்வாய் நீச்சமாய் அல்லது பகை வீட்டில் இருந்தால், புதனும் இவ்விதமே இருந்தால், பவழம், மரகதம் அணிவதால் மாறுபட்ட பலன்களே உண்டாகும். ஜாதகத்தில் எந்தக் கிரகம் வலுவாய் உள்ளதோ அதற்குரிய இரத்தினக்கல்லையே அணிய வேண்டும்.

நவரத்தினம் அணியாமல் இருந்தாலும் பாதகமில்லை. நவரத்தினம் அணிந்தால் அதில் ஒரு பிரச்சினை உள்ளது. அவை: ஒரு கிரகம் நீச்சமாகி மற்ற ஒரு கிரகம் உச்சமானால் பயன்தராது. மோதிரம் அணிபவருக்கு நடக்காத தெசைக்கான மோதிரத்தை (எடுத்துக்காட்டாக, சூரிய தெசை நடக்காதபோது மாணிக்கம் அணிந்தால்) நல்ல பலன் வராது. இதையும் ஒரு ஜோதிடர் மனத்துள் கொள்ள வேண்டும். இனி எண் பலன்களைப் பார்ப்போம்.

## 7.1. எண் பலன்கள்

### எண்: 1

1 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் சூரியன் ஆதிக்கம் பெற்றவர்கள். இவர்கள் தன்மையான பேச்சுள்ளவர்கள். ஆங்கிலம் அல்லது பிறமொழி நாட்காட்டியின்படி 1, 10, 19, 28 தேதிகளில் பிறந்தவர்கள் ஒன்றாம் எண்ணிற்கு உரியவர்கள். இவர் பிடிவாத குணமுள்ளவர். ஓவியர். எதிலும் முன்னணி வகிப்பார். சண்டையிடுவார். பெரும்போராட்டங்களுக்குத் தலைமை தாங்குவார். தலைமைப் பதவி வகிப்பார். கண்வழியே கண்டிப்பைத் தெரிவிப்பார்.

### எண்: 2

இவர்கள் சந்திரன் ஆதிக்கம் பெற்றவர்கள். கற்பனை வளம் மிகுந்தவர். இளம் பொறியாளர். திட்டமிடுதல், இயந்திர வடிவமைத்தல் இவற்றில் ஆர்வமுள்ளவர். குளிர்ந்த மணமுள்ளவர். உலகைச்

சுற்றிப் பார்க்கும் அளவுக்குத் தொழில் பலம் உள்ளவர். அதிக அளவில் நண்பர்கள் பெற்றிருப்பார். 2, 11, 20, 29 தேதிகளில் பிறந்த இவர்கள் கடுமையான பேச்சுள்ளவர்.

**எண்: 3**

குருவின் ஆதிக்கமுள்ள இவர் மக்களைக் கவரும் ஆற்றல் மற்றும் உருவத் தோற்றம் உள்ளவர். துறவற எண்ணம் உள்ளவர். பழிவாங்க மாட்டார். பாடம் கற்பிப்பார். இவர் வாழ்வே பிறருக்குப் பாடமாய் அமையும். வேலைகளைக் குவித்துக் கொண்டு ஒவ்வொன்றாய்ச் செய்வார். சொன்னதையே மீண்டும் சொல்வார். அழகை இரசிப்பவர். ஆன்மிகப் புலமை உள்ளவர். 3, 12, 21, 30 தேதிகளில் பிறந்த இவர்கள் சில நேரங்களில் கடுமையாக நடந்து கொள்வர்.

**எண்: 4**

இவர்கள் இராகுவின் ஆதிக்கம் பெற்றவர்கள். அதிகம் பேசாமல் செயல்களில் கண்ணாய் இருப்பர். செய்திப் போக்குவரவுத் துறையில் கொடிகட்டிப் பறப்பார். லிப்ட், கன்வேயர் பெல்ட் பராமரிப்பு தொழில் அமையும். 4, 13, 22, 31 தேதிகளில் பிறந்த இவர்கள் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலை, கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவர்.

**எண்: 5**

இவர்கள் புதன் ஆதிக்கம் உள்ளவர்கள். 5, 14, 23 ஆம் தேதிகளில் பிறந்த இவர் சாமானியர் அல்லர். பதிலடி கொடுப்பார். தனிமை விரும்பி. இராஜநாகம் போன்ற கொடிய நச்சுவார்த்தைகளைப் பேசுவார். பஞ்சுமெத்தையில் துயில்வார்.

**எண்: 6**

சுக்கிரன் ஆதிக்கம் உள்ள இவர் அழகர். செல்வர். எதிரிகளை வீழ்த்துவார். 6, 15, 24 தேதிகளில் பிறந்த இவர்கள் ஓர் அரசரைப் போன்ற வாழ்வைப் பெறுவர். நற்குணம் உள்ளவர்.

**எண்: 7**

கேதுவின் ஆதிக்கம் உள்ள இவர் பொறியாளர். மனித வள மேம்பாட்டு துறையில் புகழ்பெறுவார். பட்டயப் படிப்பு படித்தாலும் தலைமைப் பொறியாளராய் இருப்பார். 7, 16, 25 தேதிகளுக்கு உரிய இவர்கள் பிறரை ஏமாற்றுவார்கள்.

சனியின் ஆதிக்கம் உள்ளவர்கள். 8, 17, 26 தேதிகளில் பிறந்தவர்கள் கோபமுள்ளவர்கள். சர்வாதிகாரிகள். சிவந்த விழி உள்ளவர். செல்வத்தின் அதிபதி லட்சுமியின் வகைகள் 8. ஆங்கில மொழி எழுத்துக்கள் 26 அதாவது, 2 + 6 = 8. விநாயகர் உருவம் எட்டு என்ற எண்ணின் வடிவம். எனவே, எட்டு என்ற எண்ணைக் கண்டு பயம் வேண்டாம். சற்று கவனமுடன் செயலாற்ற வேண்டும்.

**எண்: 9**

செவ்வாய் ஆதிக்கம் உள்ள இவர் அனைவருடைய மரியாதைக்கு உரியவர்.. பெரிய போராட்டங்களை உண்டு பண்ணவும் தவிர்க்கவும் அறிந்தவர். பேரறிவாளர். 9, 18, 27 தேதிகளில் பிறந்த இவர்கள் அனைவரையும் கவர்வார்கள்.

எண்கணிதம் என்பது பரந்து விரிந்தது போல் இருந்தாலும் மேற்கண்ட 3 அல்லது 4 குணங்களைக் கொண்டதேயாகும். ஜாதகம் பார்ப்பது நம் இந்தியக் கலாச்சாரப்படி சந்திரன் அடிப்படையில். அந்த வகையில் பலன்கள் சொல்லப்படுகின்றன. மேல்நாடுகளில் சூரியன் அடிப்படையில் எண் கணிதம் பார்க்கப்படுகிறது. அவ்வளவுதான். ஒரு சோதிடர் இந்த அளவு தெரிந்து கொண்டாலே போதுமானது.

## 7.2. நவக்கிரகங்களும் நவரத்தினங்களும்

ஆதிகாலத்தில் இருந்தே மனிதன் நவரத்தினங்களின் மகிமையை அறிந்திருந்தான். நல்வாழ்வளிக்கும் நவரத்தினங்களை அணிவதால் எந்தெந்தப் பலன்கள் நடக்கும், பெற முடியும் என்றும் அறிந்திருந்தான். வைரம் போன்ற கற்கள் அவரவர் வசதி வாய்ப்பைக் காட்டும் விதத்தில் பயன்பட்டாலும் அதற்குரிய பலன்களை நல்குவதாய் இருக்கின்றன. நவரத்தினங்கள் ஒவ்வொன்றின் பலன்களையும் பயன்களையும், அவற்றை அணிவதால் ஏற்படும் நன்மைகளையும், யார் யார் அணியலாம், யார் யார் அணியக் கூடாது என்ற விவரங்களையும் கீழே காணலாம்.

### 1) பவழம்

சிவந்த நிறம் கொண்ட இக்கல் இரத்த அழுத்த நோயைப் போக்க வல்லது. செங் குட்ட நோயை நீக்கவல்லது. வெங்காயம், செங்கல், ஓடு, வாணிபம் செய்பவர்கள், பட்டிமன்றம் நடத்துபவர்கள். தரைப்படையில் வேலை பார்ப்பவர்கள், இரத்தப் பரிசோதனையாளர்கள் பவழத்தை அணியலாம். மேலும், ஜாதகத்தில் மகரம், மேஷம், விருச்சிகத்தில் செவ்வாய் அமையப்பெற்றவர்கள், செவ்வாய் வர்கோத்தமமான ஜாதகத்தினர் அணியலாம். ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்களும் அணியலாம்.

மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரக்காரர்கள் அணியக் கூடாது. அதேபோல் செவ்வாய் இராசியில் நீச்சமாகி, அம்சத்தில் உச்சமானவர்கள் அணியலாம். செவ்வாய் லக்னத்தில் இருந்து 6-8-12 இல் மறைந்த அமைப்புள்ள ஜாதகரும் அணியக் கூடாது. தக்காளி, பீட்ரூட் பயிர் செய்யும் விவசாயிகள் அணியலாம். மண்ணியல் கல்வி பயில்வார். கனிமச் சுரங்கத்தில் பணி பார்ப்பவர்கள் இக்கல்லை அணியலாம். பவழம் அணிவதால் தமிழறிவு உண்டாகும்.

## 2) வைரம்

மேஷம் இராசி என்றால் பவழம், ரிஷப இராசி என்றால் வைரம் என்று அணியக் கூடாது. கிரகங்களின் இடஅமைப்பைப் பொறுத்தே கல் அணிய வேண்டும். வைரம் பலபேருக்கும் ஒவ்வாததாய் இருக்கும். காதில் வைரத்தோடு இருக்கலாம். மனத்தில் வைரத்தோடு இருக்கக் கூடாது என்பது பழமொழி. வைரம் என்றால் நகையை மட்டுமின்றிப் பகையையும் குறிக்கும். புகழ்பெற்ற கோகினூர் வைரத்தால் எவ்வளவு கஷ்டம் வந்தது பார்த்தீர்களா? வைரம் பயன்படுத்தும்போது கவனமுடன் இருக்க வேண்டும். பொதுவாய் உடை, வங்கித் தொழில், நாடகத் தொழில் (ஃபைன் ஆரிட்ஸ்) நடத்துபவர்கள் வைரம் அணியலாம். நிர்வாகப் படிப்பு படிப்பவர்கள் அணியலாம். நல்ல வெற்றி உண்டாகும். இதை அணிவதால் பட்டு, பீதாம்பரம் போன்ற செல்வங்களைப் பெற முடியும்.

பரணி நட்சத்திரக்காரர்கள் அணியலாம். வைரம் அணிவதால் சீனா, ஜெர்மன் மொழிப் புலமையும், தெலுங்கு மொழிப் புலமையும் உண்டாகும். உரவியாபாரிகள், விவசாயிகள், வாழை வாணிகர்கள் அணியலாம். மீனத்தில் சுக்கிரன் இருக்கப்பட்டவர்கள் அணியலாம். கன்னி இராசியில் சுக்கிரன் இருக்கப்பட்ட ஜாதகர்கள் அணியக்கூடாது. இதை அணிவதால் தொண்டைக் கட்டு குணமாகும். சிம்ம இராசிக்காரர்கள் இதை அணியக் கூடாது. மாமிசம், விறகு வியாபாரிகள் அணியக்கூடாது. வண்டி வாகனம், சினிமாத் தொழில் குறிப்பாய் வில்லன் நடிகர்கள் அணியலாம். ஜாதகத்தில் சுக்கிரனுடன், இராகு அல்லது கேது சேர்ந்திருந்தால் அணியக் கூடாது. சுக்கிரன், செவ்வாய் ஜாதகத்தில் சேர்ந்திருந்தால் வைரம் அணியலாம்.

## 3) மரகதம்

பசுமையான வாழ்வையும் கற்பனை வளத்தையும் தரும் இக்கல்லை அணிவதால் வீண் மன பயம் ஒழியும். பேய், பிசாசுகள் பயம், பிணத்தைக் கண்டால் உண்டாகும் பயம் முதலியன நீங்கும். மனவளர்ச்சி குன்றியவர்கள் இதை அணிவதால் நோயின் தீவிரம் குறையும். கரும்பு, வாழை, தென்னை

விவசாயம் செய்பவர்கள், காவல்துறையினர்கள் இக்கல்லை அணிவதால் செழிப்புறுவர். காவல்துறையினர்கள் இதை அணிவதால் தைரியம் பெருகும். அதனால் பெரும்பதவி கிட்டும். இக்கல் குழப்பத்தை அடியோடு நீக்கும். பால், பேப்பர், முத்து, உப்பு, பருத்தி, அரிசி, ஜிப்ஸம், முட்டை போன்ற வெண்மை நிறப் பொருள் கொள்முதல் செய்பவர்கள் இதை அணியலாம். மிதுன இராசியில் புதன் அமையப் பெற்றவர்கள் இக்கல்லை அணியலாம். மீனத்தில் புதன் இருக்கப் பிறந்தவர்கள் புதன் நீச்சமாவதால் இதை அணியக் கூடாது. தனுசு இராசிக்காரர்கள் அணியக் கூடாது. குறுக்கெழுத்தாளர்கள் இதை அணிந்திடின் வெற்றியான காரியதரிசிகளாய் விளங்குவர். பத்திரிக்கை ஆசிரியர்கள், நிரூபர்கள், துப்பறிவாளர்கள், பத்திரிக்கையாளர்கள் இதை அணிவதால் நலமுறுவர். பெரும் வெற்றியாளர்களாவர். இக்கல் காதுவலி, நரம்புத் தளர்ச்சியைப் போக்கும். இராசியில் புதன் நீச்சமாகி, அம்சத்தில் புதன் உச்சமான ஜாதகத்தினர் இந்தக்கல்லை அணியலாம்.

### 4) முத்து

வெண்மை நிறமான இக்கல்லை அணிவதால் தீர்க்க தரிசனம் உண்டாகும். நாகூர் ஆண்டவர், அன்னை வேளாங்கன்னி, திருச்செந்தூர் முருகன் அருளுண்டாகும். மண்ணெண்ணெய், பெட்ரோல், அமிலம், எழுது மை, வாணிபம் செய்பவர்கள் இதை அணிந்தால் இலாபமுண்டாகும். மீனவரும் மாலுமிகளும் மற்றும் கப்பற்படைத் தளபதிகளும் இக்கல்லை அணியலாம். இதை அணிவதால் கெட்ட கனவு வராது. பூசம் நட்சத்திரக்காரர்கள் இக்கல்லை அணியலாம். அனுஷம் நட்சத்திரக்கார்கள் அணியக் கூடாது. மேடை நாடகம் நடத்துபவர்களும், பொதுப்பணித்துறை ஊழியர்களும், அழகு அலங்காரம் கடை நடத்துபவர்களும் அணியலாம். இக்கல்லை அணிவதால் அனல் பறக்கும் மனத்தில் அமைதி நிலவும். பளிங்கு வீடு கட்டும் யோகம் உண்டாகும். முகப்பொலிவு உண்டாகும். பர்மா, ஜப்பான் தேசத் தொடர்பு உண்டாகும். செய்தொழில் வெற்றிபெறும். நெஞ்சுவலி வராது. அலகு குத்தும் தொழில் செய்வோர் அணியக் கூடாது. ஏற்றுமதி செய்பவர், வர்ணம் பெயிண்ட், மதுபானக்கடை வைத்திருப்பவர்கள் அணியலாம். காளி கோயில் பூசாரிகள் அணிவதால் பொலிவு முகம் உண்டாகும். கருவூலம், கணினி துறையினர் அணியலாம்.

### 5) மாணிக்கம்

சிவனடியார்களுக்கு உண்டான கல். இக்கல்லைக் குறிப்பிட்ட அதுவும் மிகமிகக் குறிப்பிட்ட சிலரே அணிய வேண்டும். காரணம் இக்கல் ஆன்மீக வழிக்கு மட்டுமே பயன்படும். மோட்சத்தையும் பக்தியையும் நல்கும். இக்கல் சொற்பொழிவு செய்பவர்களும் பாகவதம் மற்றும் புனிதநூல்

போதிப்பவர்களும் அணிய பயன்தரும். ஆங்கில அறிவைத் தரும் இக்கல் இரயில்வேயில் பணியாற்றுபவர் அணிவதால் நல்ல பயன்தரும். பதவி உயர்வு தரும். உணவகம், பயணிகள் தங்கும் விடுதி நடத்துபவர்கள், கல்லூரி விடுதி பராமரிப்பவர்கள் அணிவதால் மாணவர்களையும் வாடிக்கையாளர்களையும் கட்டுக்குள் வைத்திருக்கும் ஆற்றல் பெறுவர். விஷக்கடியைக் குறைக்கும் பலமுள்ள இக்கல் வசதியான வாழ்வைத் தரும். கிரானைட் கல் வெட்டுவோர், குரங்காட்டிகள், கிரிக்கட் வீரர்கள் அணிவதால் நல்ல திருப்பங்கள் பெறுவர். இக்கல் கண் ரோகத்தை நீக்கவல்லது. சிம்மத்தில் சூரியன் இருக்கப் பிறந்தவர்கள் (ஆவணி மாதம் பிறந்தவர்கள்) இக்கல்லை அணியலாம். இரயில் இஞ்சின் ஓட்டுநர்கள், அனல்மின்நிலையத்தார்கள் அத்துறையினர் அனைவரும், தீயணைப்புத் துறையினர்கள் அணியலாம். ஐப்பசி மாதம் பிறந்தவர்கள் அணியக் கூடாது. சித்திரை மாதம் பிறந்தவர்கள் அணியலாம். ஏனெனில் சித்திரை மாதம் சூரியன் உச்சமாகும். ஐப்பசி மாதம் சூரியன் நீச்சமாகும்.

### 6) கோமேதகம்

இக்கல்லை அணிபவர்கள் நீதிமான்களாய் இருப்பர். நீதி மன்றம் மற்றும் நியாய விலைக்கடைகளில் வேலை செய்பவர்கள் இக்கல்லை அணியலாம். தணிக்கையாளர்களும், விமானப்படைத் தளபதிகளும் அலுமினியம் மற்றும் வெல்லமண்டி, சர்க்கரை ஆலையில் பணியாற்றுபவர்களும், அதன் முதலாளிகளும் இக்கல்லை அணியலாம். இக்கல்லை அணிபவர்கள் வடமொழிப் புலமை பெறுவர். மீனத்தில் சுக்கிரன் இருக்கப் பிறந்தவர்களும், அரசியல்வாதிகளும் இதை அணியலாம். இறை வழிபாடு செய்பவர்கள் அணியலாம். தரை விரிப்பு தயாரிப்பாளர்கள், நாதஸ்வர வித்வான்கள் மற்றும் இந்து அறநிலையத்துறை, கோயில் கணக்கு எழுதுபவர்கள் அணியலாம். அபாயம் இல்லாத இக்கல்லை யார்வேண்டுமானாலும் அணியலாம். இக்கல் சிறுநீரக இடர்ப்பாடுகளை நீக்கவல்லது. பெட்டிக்கடை வைத்திருப்பவர், இரும்பு வியாபாரம் செய்பவர்கள் அணியலாம். அழகுப் பொருட்கள் விற்பவர்கள் அணிவதால் நல்ல இலாபமுண்டாகும்.

### 7) வைடூரியம்

மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்கள், தொலைபேசித் துறையினர், இரசாயனம், மருத்துவம் எக்ஸ்ரே, திரைப்படத் தயாரிப்பாளர்கள் இதை அணியலாம். கனிமவளத்தைப் பெருக்கும் இக்கல்லை அணிவதால் தொழிலக வளர்ச்சி அதிகாரி ஆகலாம். சீரான இரத்த ஓட்டம் மற்றும் மூளை வலிமைக்கும் இக்கல் அதிகம் உதவுகிறது. மகரத்தில் செவ்வாய் உச்சமாக ஜாதகத்தில் இருக்கப் பெற்றவர்கள்

அணியலாம். துப்பாக்கிச் சுடு கலை அறிந்தவர்கள், மல்யுத்தக் கலைஞர்களுக்கு ஏற்ற கல் இது. இலங்கை, மலேசியா, பினாங்கு போன்ற தீவு ஊர்களின் தொடர்பை இக்கல்லை அணிபவர்கள் பெறுவர். சிங்களம் மற்றும் ஐரோப்பிய மொழிகளை அறியும் புலமை வல்லமை இக்கல்லை அணிவதால் உண்டாகும். இக்கல்லை வரலாற்றுத்துறை மாணவர்களும் அகழ்வாராய்ச்சித்துறை மாணவர்களும் அணிந்தால் ஆராய்ச்சி வெற்றி பெறும். அஞ்சலகத் துறையினர், கூரியர் சர்வீஸ்காரர்கள், கணினி துறையினர் அணிவதால் வெற்றி காண்பர். விளையாட்டுத்துறையினர், நீச்சல் வீரர்கள் இதை அணியலாம். ரிஷபக் கேது உள்ள ஜாதகர்கள் இக்கல்லை அணியக் கூடாது. கார்பன், நிலக்கரித் தொழிலாளர்களும் தட்டச்சர்களும் அணிவதால் நல்ல பெயர் எடுக்கலாம். கடகச் செவ்வாய் உள்ள ஜாதகர்கள் செவ்வாய் நீச்சமாவதால் அணியக்கூடாது.

**8) நீலம்**

எழுத்தாளர்களும் கவிஞர்களும் அணிவதால் நீங்காத புகழைப் பெறுவர். இக்கல் காளியம்மன் அருளைத்தரும். சிமெண்ட், சிராமிக் தொழிலாளர்கள், அச்சுத் தொழிலாளர்கள், இக்கல்லை அணியலாம். மேஷத்தில் சனி நீச்சமாக இருக்கப்பட்ட ஜாதகத்தினர் இக்கல்லை அணியக்கூடாது. இக்கல்லை அணிபவர் கன்னடம் மற்றும் தெலுங்கு அறிவைப் பெறுவர். பளுதூக்கி இயந்திரங்களை இயக்குபவர்கள், எரிபொருள் துறையினர் அணியலாம். மலைவாழ்மக்கள், இழுவை வண்டிகள் ஓட்டுபவர்கள் இக்கல்லை அணியலாம். மகர இராசிக்காரர்கள் இக்கல்லை அணியலாம். இக்கல்லுக்கு முழங்கால் வலியைப் போக்கும் ஆற்றல் உண்டு. பளு தூக்கும் தொழிலாளிகள், பீடி சுற்றும் தொழிலாளர்கள் இக்கல்லை அணிவதால் நல்ல வருமானம் பெறுவர். கிராம தெய்வ வழிபாடு செய்பவர்கள் இக்கல்லை அணிலாம். சாயப் பட்டறைகளில் வேலை பார்ப்பவரும், அரிசி அரவையாலையில் பணியாற்றுபவர்களும் அணியக்கூடாது. குளிர்கண் கண்ணாடி தயாரிப்பாளர்கள், கார் உதிரி பாகம் தயாரிப்பவர்கள், டயரைப் புதுப்பிக்கும் பொருள் செய்பவர்கள் அணியக் கூடாது. பயணக் கட்டுரை எழுதுவோர், விமரிசகர்கள் அணியக் கூடாது. துலாம் இராசிக்காரர்கள், துலாமில் சனி உள்ளவர்கள் அணியலாம்.

**9) புஷ்பராகம்**

இக்கல்லை அணிபவர் மலையாள மொழிப் புலமை பெற்றுத் திகழ்வார். பூ வியாபாரிகள், குருக்கள் மற்றும் வானொலி, தொலைக்காட்சி துறையில் வேலை பார்ப்பவர்கள் இதை அணியலாம். விண்வெளி ஆராய்ச்சியாளர்களும் அணியலாம். மகரத்தில் குரு இருக்கப் பெற்ற ஜாதகர்கள் அணியக்

கூடாது. கடகத்தில் குரு இருக்கப்பெற்ற ஜாதகர்கள் அணியலாம். மகரம் இராசியில் குரு நீச்சம் என்பதால் அணியக்கூடாது. கடகத்தில் குரு உச்சம் என்பதால் அணியலாம். ஜாதகத்தில் குரு + கேது இணைந்து, லக்கினம், இராசிக்கு 12 இல், அமையப் பெற்ற ஜாதகரும் அணியலாம். பொன் உருக்கும் தொழில் செய்வோர், அடகுக்கடை தொழில் செய்பவர்கள் அணியலாம். இக்கல் கணுக்கால் வலியைப் போக்கும் சக்தி கொண்டது. உளவுத் துறையில் வேலை பார்ப்போர் இக்கல்லை அணியலாம். சகல வித மறைவுகளையும் கண்டுபிடிப்பார். இக்கல்லை அணிபவர்கள் தாம் விரும்பும் பெண்ணைக் கண்டிப்பாய் அடைவர். காது கேளாதவர்கள் இக்கல்லை அணிவதால் ஓரளவு நல்ல பலன் உண்டாகும். இக்கல் இலங்கை, சிங்கப்பூர் போன்ற தீவுகளில் வாணிபம் செய்யும் வாய்ப்பை வழங்கும். இக்கல்லை அணிவதால் உடல் வலிமை உண்டாகும். மேம்படும். இக்கல் வற்றாத செல்வம் தரும்.

இது காறும் நவரத்தினங்கள் அணிவதால் உண்டான பலன்களைப் பார்த்தோம். ஒருவர் ஜாதகத்தில் ஒரு கிரகம் நீச்சமாகி, ஒரு கிரகம் உச்சமாய் இருந்தால் நவரத்தின மோதிரம் அணியக் கூடாது. உச்சம், நீச்சம் அற்ற ஜாதகர்கள் தாராளமாய் நவரத்தினம் அணியலாம்.

ஞாயிற்றுக்கிழமை பிறந்தவர்கள் மாணிக்க மோதிரத்தையும், திங்கட்கிழமை பிறந்தவர்கள் முத்து மோதிரத்தையும் செவ்வாய்க் கிழமை பிறந்தவர்கள் பவழ மோதிரத்தையும், புதன் கிழமை பிறந்தவர்கள் மரகத மோதிரத்தையும், வியாழக்கிழமை பிறந்தவர்கள் புஷ்பராக மோதிரத்தையும், வெள்ளிக் கிழமை பிறந்தவர்கள் வைர மோதிரத்தையும் அணியலாம். சுக்கிரன் + செவ்வாய் சேர்ந்த ஜாதகர்களும் அணியலாம். ஆனால், சுக்கிரன், செவ்வாய் கடகம் அல்லது கன்னியில் இருக்கப் பெற்ற ஜாதகர்கள் வைரம் அணியக்கூடாது. சனிக் கிழமை பிறந்தவர்கள் நீலத்தை அணியலாம். இராகு வலுப்பெற்ற ஜாதகர் கோமேதகத்தையும், கேது வலுப்பெற்ற ஜாதகர் வைடூரித்தையும் அணியலாம்.

மேற்கண்ட கிழமைகளில் பிறந்தவர்களை அவரவர் ஜாதக அமைப்பில் அந்தந்தக் கிரகம் நீச்சமானால் பாதிக்காது. ஒரு ஜாதகத்தில சூரியன் + புதன் + சுக்கிரன் இணைந்தால் தடைபட்ட படிப்பு உண்டாகும். இதைத் தவிர்க்க மாணிக்கம் + மரகத மோதிரம் அணிந்தால் கல்வித் தடை உண்டாகாது.

மாணிக்கத்தையும் முத்தையும் வெள்ளியோடு இணைந்து அணியக் கூடாது. மரகதத்தையும் வைரத்தையும் தங்கத்தோடு இணைத்து அணியக் கூடாது. மரகதம், நீலம், கோமேதகம், வைடூரியத்தை வெள்ளியோடு அணியலாம்.

எதையுமே அணியாமல் இருப்பதும் நல்லது. ஆண்கள் எதையும் அணியாமல் இருந்தால் தவறில்லை. பெண்கள் தங்கம் அல்லது வெள்ளியிலான ஆபரணங்களில் ஒன்றாவது அணிவதே அவர்களுடைய ஆயுள் மற்றும் ஆரோக்கியத்துக்கு நல்லது. இதைத் திறமை வாய்ந்த ஜோதிடர்கள் நன்கு கற்றுணர்ந்த அனுபவத்தால் சொல்லலாம். மேம்போக்காய் மேஷத்துக்கு பவழம், சிம்ம இராசிக்கு மாணிக்கம் என்று சொல்லக்கூடாது. கிரகம் உச்சம், நீச்சம், ஆட்சி நிலை அறிந்து கூறல் வேண்டும்.

கிரகங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப (1–சூரியன், 2– சந்திரன், 3– குரு) என்று அணியலாம். அவை அந்தந்தத் தெசை முடிவடைந்ததும் வலு இழந்து விடும். எனவே, ஒருவருக்கு வாழ்நாள் இறுதி வரை பயன்தரக் கூடிய நிரந்தரமானக் கல்லைத் தேர்வு செய்து தரவேண்டும். சனியின் 3 ஆம் பார்வை படும் ஒருவருக்கு 3 ஆம் பார்வை பெறும் கிரகத்துக்கு உண்டான கல்லை தேர்வு செய்து தரக்கூடாது. எடுத்துக்காட்டாக, சூரியனைச் சனி மூன்றாம் பார்வையில் பார்த்தால் மாணிக்கம் தேர்வு செய்து தரக்கூடாது. குரு பார்க்கும் கிரகக் கல்லை பரிந்துரை செய்யலாம்.

இராசியில் ஒரு கிரகம், எடுத்துக்காட்டாக, சூரியன் உச்சமாகி அம்சத்தில் நீச்சமானால் மாணிக்கம் அணியக்கூடாது. அதேபோல் சந்திரன் இராசியில் உச்சமாகி, அம்சத்தில் நீச்சமானால் முத்து அணியக்கூடாது. இப்படி செவ்வாய், புதன் முறையே பவழம், மரகதம் அணியக்கூடாது. அதே நேரத்தில் இராசியில் ஒரு கிரகம், அதாவது சூரியன் நீச்சமாகி அம்சத்தில உச்சமானால் மாணிக்கம் அணியலாம். இப்படியே ஒவ்வொரு கிரகத்தையும் பார்த்துத் தேர்வு செய்ய வேண்டும்.

சூரியன், சுக்கிரன் அல்லது சனியுடன் சேர்ந்திருந்தால் அல்லது மூன்றும் ஒருவர் ஜாதகத்தில் சேர்ந்திருந்தால் மாணிக்கம், வைரம், நீலம் அணியக்கூடாது.

சந்திரன் சுக்கிரனுடனோ, சனியுடனோ சேர்ந்திருந்தாலோ கூடியிருந்தாலோ, முத்து, வைரம் நீலம் அணியக் கூடாது.

செவ்வாய் புதனால் பார்க்கப்பட்டாலோ சேர்ந்திருந்தாலோ பவழம், மரகதம் அணியக்கூடாது.

புதன் சந்திரனுடன் இருந்தால் முத்து, மரகதம் தவிர்க்கப்பட வேண்டும் அல்லது புதன் சந்திரனைப் பார்த்தாலும் அணியக்கூடாது.

குரு, புதன் அல்லது சுக்கிரனுடன் இணைந்து இருந்தால் அல்லது ஒன்றுக்கொன்று பார்த்தால் புஷ்பராகம், மரகதம், வைரம் அணியக்கூடாது. மீறி அணிந்தால் வழக்கு உண்டாகும்.

சுக்கிரனைச் சந்திரன் அல்லது சூரியன் பார்த்தால் வைரம் அணியக்கூடாது. சனியைச் சூரியன், சந்திரன், செவ்வாய் பார்த்தால், நீலம் அணியக்கூடாது. இராகு கேதுகளுடன் சூரியன், செவ்வாய் சேர்ந்தால் கோமேதகம், வைடூரியம் அணியக் கூடாது.

எல்லாவற்றையும் மீறி நெளி மோதிரமோ, நீள் வட்ட மோதிரமோ அணிவது நல்லது. தவிர்க்க முடியாதபடி ஒரு கல்லை அணிய நேர்ந்தால் இஷ்ட தெய்வத்தின் முதல் எழுத்தையோ அல்லது தனது இன்ஷியலையோ பொருத்தி அணிவதால் நல்லது உண்டாகும்.

ஜாதகத்தில் ஏதாவது ஒரு கட்டத்திலோ, அல்லது 3, 6, 12 வீடுகளிலோ நான்கு கிரகங்கள் இருந்தால் எந்த மோதிரமும் அணியக்கூடாது. அவிட்டம், பூரட்டாதி நட்சத்திரக்காரர்கள் யானை முடி மோதிரம் அணியக்கூடாது. கேட்டை, அனுஷம் நட்சத்திரக்காரர்கள் நாய்ப் பல் மோதிரம் அணியக்கூடாது. மூலம், திருவாதிரை நட்சத்திரக்காரர்கள் மான் தோல் அணியக்கூடாது. ஐந்து விரல்களிலும் மோதிரம் அணிவது அழிவைக் குறிக்கும். அப்படி அணிபவர்கள் பிறருடைய ஏளனத்துக்கு ஆளாகி, ஓரிரு ஆண்டுகளில் வீழ்ச்சி அடைவார். மோதிரத்தில் ஓம் என்று எழுதக்கூடாது. காரணம் உணவு உண்ணும் போது உமிழ் நீர் அதில் படலாம். எனவே அலட்சியமாய் இராமல் கவனமுடன் அடிஅடியாய் ஆராய்ந்து தக்க கல்லை அணிந்து வெற்றி பெறலாம்.

சூரியன், செவ்வாய், சுக்கிரன் சேர்ந்த ஜாதகர் மாணிக்கம் அணிவதாலும், சந்திரன், புதன், சூரியன் இணைந்த ஜாதகர் முத்து மோதிரம் அணிவதாலும், செவ்வாய், சூரியன், சந்திரன், குரு சேர்க்கை உள்ளவர் (குரு + செவ்வாய்) பவழம் அணிவதாலும், புதன், சனி, சுக்கிரன் இணைந்த ஜாதகர் நீலம் அணிவதாலும் பெரும் புகழ் பெறுவர்.

* * * * *

# பாடம் 8 – யோகங்கள்

கிரகங்களிலே உயர்ந்த கிரகம் தெய்வ அனுக்கிரகம். தோஷங்களிலே நல்ல தோஷம் சந்தோஷம். யோகங்களில் நல்லயோகம் உத்தியோகம். இது நகைச்சுவை வாக்கியமல்ல. உண்மையான வாக்கு. ஒருவர் ஜாதகத்தில் கிரக அமைப்புக்களைப் பொறுத்து தோஷம், யோகங்கள் கணிக்கப்படுகின்றன. அதில் சில தோஷ கிரகம் வர்கோத்தம நிலை அடைந்தால் தோஷ நிவர்த்தியுறும்.

**வர்கோத்தம நிலை**

அசுபதி 1 ஆம் பாதம், ரோகிணி 2 ஆம் பாதம், புனர்பூசம் 3, 4 ஆம் பாதம், பூரம் 1 ஆம் பாதம், சித்திரை 2, 3 ஆம் பாதம் அனுஷம் 4 ஆம் பாதம், உத்திராடம் 1, 2 ஆம் பாதம், சதயம் 3 ஆம் பாதம், ரேவதி 4 ஆம் பாதம் ஆகியவற்றில் கிரகங்கள் சஞ்சரிக்கும் போது மட்டும் வர்கோத்தம நிலையை அடைகின்றன. இவ்விதம் வர்கோத்தம நிலை அடையும் கிரகங்கள் சக்தி வாய்ந்தவைகளாக, நீச்சம், உச்சம், பகை நிலைகளுக்கு அப்பால் செயல் ஆற்றும். இராகு, கேது இரண்டும் ஒரே நேரத்தில் வர்கோத்தமம் ஆகும்.

**10.1. யோகங்கள்**

சுமார் 60 க்கும் மேற்பட்ட யோகங்கள் அவரவர் ஜாதக கிரக நிலைகளைப் பொறுத்து நிர்ணயம் செய்யப்படுகின்றன. கூட்டுக்கிரகங்களால் அமையப்பெற்ற இந்த யோகங்கள் அந்தந்தக் கிரகத்துக்கு உண்டான தெசை நடக்கும் போது நல்ல பலனைத் தரும். அதவற்றைக் கீழே காணலாம்.

**1) அமாவாசை யோகம்:**

சூரியனும் சந்திரனும் ஒரே இராசியில் ஒரே நட்சத்திரக் காலில் இருக்கும் போது ஏற்படுவது இந்த யோகம். அமாவாசை யோகத்தில் பிறந்தவர்கள் திருடப்பட்டு மறைத்து வைக்கப்பட்ட பொருளைக் கண்டுபிடிப்பவராக இருப்பர். அனுமார் சீதையைக் கண்டு பிடித்தது போல் கண்டுபிடிப்பார்கள். துப்பறியும் நிபுணர்கள், காவல்துறை மேலதிகாரிகள் இந்த யோகம் உள்ளவர்களாய் இருப்பர்.

ஆனால், அமாவாசையில் பிறந்தவர்கள் திருட்டுக் குணம் படைத்தவர் என்ற தவறான கருத்து நிலவுகிறது. இவ்விதம் பிறந்தவர்கள் கருப்பு நிறத்தில் இருப்பார் என்பதும் தவறு. அமாவாசையில் பிறந்தவர்கள் எத்தனையோ பேர் சிவந்த நிறமுடையவராவர். எனவே, அமாவாசையில் பிறந்தால் அஞ்ச

வேண்டாம். இது தோஷமல்ல; யோகம். அமாவாசை அசுபதி , ரோகிணி, புனர்பூசம், பூரம், சித்திரை, அனுஷம், மூலம், திருவோணம், உத்திரட்டாதி நட்சத்திரங்களை ஒட்டியே வரும்.

**2) பூர்ணிமா யோகம்**

ஒருவர் பௌர்ணமியன்று பிறந்தால் இந்த யோகம் உண்டாகும். இவர்கள் அனைவராலும் விரும்பப்படுபவர்களாக விளங்குவர். வெளிப்படையான பேச்சு உள்ளவராக இருக்க நேரும். பரணி, கார்த்திகை, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், ஸ்வாதி, அனுஷம், பூராடம், திருவோணம், அவிட்டம், ரேவதி நட்சத்திரங்களை ஒட்டியே பௌர்ணமி வரும். பௌர்ணமி பிறப்பு மற்றும் உத்தராயன மரணம் இரண்டும் புண்ணியமானது. தட்சிணாயன மரணம், அமாவாசை பிறப்பு இரண்டும் மத்திமமானது.

**3) சூரியன் + செவ்வாய்: விதவை யோகம்**

ஒருவர் ஜாதகத்தில் சூரியன் செவ்வாயுடன் இணைந்திருந்தால் அது விதவை யோகமாகும்.

இப்படிப் பார்க்கையில் சூரியன்+செவ்வாய் ஒரு ஜாதகத்தில் லக்கினத்தில் இணைந்தால் முதல் கணவனை ஓரிரு வருடத்தில் இழந்து மறுமணம் பூணுவார். 7 இல் இருந்தால், விவாகரத்தாகும். இரண்டில் இருந்தால், உடல் ஊனமுற்று கணவர் செயலிழந்து இருப்பார். 12 இல் இருந்தால், கணவன் உயிருடன் இருந்தும் நகைகள் அணியாதிருப்பார். 6, 8, 12 இல் இருந்தால், கணவர் / மனைவி பிறருடன் கள்ளத் தொடர்பு கொள்ள விதவை நிலை எய்துவர் என்பது விதி.

சூரியன், செவ்வாய் இரண்டில் ஒன்று நீச்சமுற்றால் கணவர் / மனைவி பைத்தியம் பிடித்து அலைவார். செவ்வாய் அல்லது சூரியன் உச்சமானால் இரண்டு திருமணம் புரிவார். சூரியன், செவ்வாய் இணையும் போது ஒரு கிரகம் தான் உச்சமாகும் அல்லது நீச்சமாகும். இரண்டும் ஆகாது. பிறன் மனை பேணல், பைத்தியம் பிடித்தலும் விதவாநிலைக்குச் சமம்.

சூரியன், செவ்வாய் பரஸ்பர பார்வை பார்த்தால் விதவை நிலை உண்டு. ஆனால், வர்கோத்தமமானால் (ஒன்றோ அல்லது இரண்டுமோ) விதவை யோகம் கிடையாது. புதன் பார்வை செவ்வாய் மீது பட்டால் வெள்ளுடை தரிப்பார். துறவிபோல் இருப்பார்.

**4) புதாத்திய யோகம்**

இந்த யோகம் 100 க்கு 92 பேருக்கு அமையும். புதனும் சூரியனும் இணைந்தால் இந்த யோகம். இந்த யோகமுள்ளவர் நிர்வாகத் திறமை உள்ளவர். மாவட்ட ஆட்சியர், நிர்வாக அதிகாரி,

தணிக்கையாளர் போன்ற பதவி வகிப்பார். சூரியன் உச்சமாகி (சித்திரை மாதம் பிறந்தவர்கள்) புதன் இணைந்தால் டென்னிஸ் வீரர். சூரியன் நீச்சமாகி புதன் இணைந்தால் (ஐப்பசியில் பிறந்தவர்) வெடி மருந்து கம்பெனி நிர்வாகி, வக்கீல் அலுவலக எழுத்தர் போன்ற பதவி வகிப்பார்.

புதன் நீச்சமாகி சூரியனுடன் இருந்தால் பல் மருத்துவர். புதன் உச்சமாகி சூரியனுடன் இருந்தால் தணிக்கையாளர். இவை முறையே பங்குனி, புரட்டாசியில் பிறந்தவருக்கே அமையும். இது நல்ல யோகம் தான். எனினும், இது பரவலாய் இருப்பதால் இது சிறப்பான யோகமல்ல. மீனத்தில் புதன், சூரியன் சேர்ந்திருந்தால் 50% புதாத்திய யோகமே பலன் தரும்.

### 5) குரு சந்திர யோகம்

குருவும் சந்திரனும் இணைந்து எந்த வீட்டில் இருந்தாலும் குரு சந்திர யோகம் வரும். குருவும் சந்திரனும் ஒன்றுக்கொன்று 7 இல் இருந்தாலும் குரு சந்திர யோகமே. அல்லது குருவும் சந்திரனும் கேந்திரத்தில் (4, 7, 10 இல்) இருந்தாலும் குரு சந்திர யோகமாகும். இது அவ்வளவாய் நல்ல யோகமல்ல. பிறருக்காகக் கட்டாயத் தியாகம் செய்ய நேரும், வீடு, ஊர் இழப்புகள் நேரும். கடகம், விருச்சிகம் மற்றும் மகரத்தில் இந்த யோகம் இருந்தால் துரதிஷ்டம். வாழ்வு முழுவதும் இந்த யோகமுள்ளவர்கள் ஏதாவது இன்னலைச் சந்திப்பார்.

### 6) சந்திர மங்கள யோகம்

ஏதாவது ஒரு கட்டத்தில் செவ்வாயும் சந்திரனும் இணைந்திருந்தால் சந்திர மங்கள யோகமாகும் அல்லது சந்திரனும் செவ்வாயும் ஒன்றுக்கொன்று பார்க்கவிருந்தாலோ, கேந்திரத்தில் இருந்தாலோ சந்திர மங்கள யோகம். இந்த யோகம் உன்னதமானது. இந்த யோகம் உள்ளவர்கள் திருமண மண்டபம், திரையரங்கு கட்டும் யோகம் உள்ளவர். பெரும் செல்வந்தர் ஆவார். கடகத்திலோ மகரத்திலோ செவ்வாய் சந்திரனுடன் இணைந்தால் இரட்டைக் குழந்தைகள் உண்டு. இவ்விடங்களில் 50 % பலனைத் தரும்.

### 7) அம்ச யோகம்

ஒருவரது ஜாதகத்தில் 12 கட்டங்களில் ஏதாவது ஒன்றில் சந்திரன், புதன் இணைந்திருந்தால் அம்ச யோகமாகும். இவர்கள் செல்வம் பெறுவர். லக்கினத்துக்கு 7 இல் இந்த அமைப்பில் உள்ளவர்கள் கன்னியாஸ்திரிகளாகவும், செவிலியர்களாகவும் இருப்பார்கள். இந்த அமைப்பு மீனத்தில் இருந்தால் திருநங்கைகளாவர். ஆண்மைக் குறைவு உண்டாகும். கன்னியில் இருந்தால் பெண்மை குறைந்து காணப்படும்.

**8) ஸத்ரீ லோல யோகம்**

ஜாதகத்தில் 7, 5 இல் சந்திரன் சுக்கிரனுடன் இணைந்தால் அல்லது கன்னி, மீனத்தில் இணைந்தால் ஆண், பெண் இருவருக்கும் எதிர் பால் ஈர்ப்பு அதிகமாக இருக்கும். இது துரதிர்ஷ்டமானது. கணவர், மனைவி அல்லாத மற்ற பெண்ணுடனும், மனைவி, கணவர் அல்லாத மற்ற ஆடவருடனும் தொடர்பு வைத்திருப்பார்.

**9) கிரகண யோகம், சாயா யோகம்**

ஜாதகத்தில் சூரியன் + இராகு அல்லது கேது, சந்திரன் + இராகு அல்லது கேது எங்கிருந்தாலும் கிரகண யோகம். மாந்த்ரீகம், கள்ளக் கடத்தலைப் பிடித்தல் போன்ற பணி அமையும்.

செவ்வாய் இராகு அல்லது கேது உடன் இணைந்திருந்தால் சாயா யோகம். கார்பன், நிலக்கரி, சினிமா, எக்ஸ்ரே, ஸ்கேன், கணினி தொழில், மருந்தியல் தொழில் அமையும்.

**10) பத்ம யோகம்**

லக்னத்துக்கு 10 இல் செவ்வாய் + புதன் இருந்தாலோ, செவ்வாய் மட்டும் இருந்தாலோ பத்ம யோகம் உண்டு. இந்த யோகம் செல்வங்களைத் தரும் நல்ல யோகம். லக்கினத்திற்கு 10 இல் செவ்வாய் இருந்தால் அவருக்கு அறுவை சிகிச்சையில் குழந்தை பிறக்கும். 10 இல் செவ்வாய் இருக்கப் பிறந்த குழந்தை அறுவை சிகிச்சையில் பிறந்த குழந்தையாக அமையும்.

**11) நீச்ச பங்க இராஜ யோகம்**

இராசியில் ஒரு கிரகம் உச்சமாகி, அம்சத்தில் அதே கிரகம் நீச்சம் அல்லது ஆட்சி ஆனாலோ, நீச்ச பங்க இராஜ யோகமாகும். இராசியில் நீச்சமுற்ற ஒரு கிரகம், அம்சத்தில் உச்சம் அல்லது ஆட்சி பெற்றால் நீச்ச பங்க இராஜ யோகமாகும். இது சற்று அபாயகரமானது. இராசியில் உச்சமான கிரகம் அம்சத்தில் நீச்சமானால் தோல்வி, நட்டம் உண்டாகும். அதே கிரகம் இராசியில் நீச்சமாகி அம்சத்தில் உச்சமானால் அமோக இலாபம் உண்டு.

**12) விபரீத இராஜ யோகம்**

குரு, சுக்கிரன் சேர்ந்திருந்தாலோ, 7 ஆம் பார்வை பார்த்தாலோ விபரீத இராஜ யோகமாகும். இதில் குருவோ சுக்கிரனோ நீச்சமானால் தோல்வி உண்டு. குருவோ சுக்கிரனோ உச்சமானால் வெற்றி உண்டு.

**13) சிவ யோகம், விஷ்ணு யோகம்**

திருவாதிரை நட்சத்திரத்தைக் குரு 7 ஆம் பார்வை பார்த்தால் சிவ யோகமாகும். இவர் சிவ பக்தராக இருப்பார். திருவோணம் நட்சத்திரத்தைக் குரு 7 ஆம் பார்வை பார்த்தால் விஷ்ணு யோகமாகும். இவர் விஷ்ணு பக்தராக இருப்பார்.

**14) தோரண யோகம்**

இராசிக் கட்டத்தில் ஏதாவது ஒரு வரிசையில் இரண்டு இராசிகளில் ஒவ்வொன்றிலும் மூன்று மூன்று கிரகங்கள் இருந்தால் தோரண யோகமாகும். இந்த யோகக்காரர்கள் அனைவருக்கும் நன்மை செய்பவர்களாக இருப்பார்கள். நேர்மறை எண்ணங்களுடன் வெற்றி பெறுவர். எல்லா நன்மைகளும் உண்டாகும்.

**15) அனபா யோகம்**

இராசி கட்டத்தில் ஒரு வீடு விட்டு ஒரு வீட்டில் கிரகங்கள் அடுக்கி அமைந்தால் அனபா யோகம். இது ஆண்டுக்கு ஒரு முறை குல தெய்வ வழிபாடு செய்ய அனுமதிக்கும் யோகமாகும்.

**16) கிரக மாலிகா யோகம்**

இராசியில் எல்லா கிரகங்களும் ஒரு வீடு விடாமல் வரிசையாய் அமைந்திருப்பது கிரகமாலிகா யோகமாகும். இந்த யோகம் மிக மிக சிறப்பானது. இந்த யோகம் உள்ளவர்கள மண்டலாதிபதிகள், மண்டல பொறியாளர்கள். குடியரசுத் தலைவரிடம் பரிசு பெறுவார். மாவட்ட ஆட்சியரிடம் பாராட்டுகளைப் பெறும் யோகமுள்ளவர்கள்.

**17) கால சர்ப்ப யோகம்**

இது பார்ப்பதற்குக் கிரக மாலிகா யோகம் போலத் தோன்றினாலும், இராகு கேதுகளுக்கு இடையே எல்லா கிரகங்களும் அமையப் பெறுவது. இது வலம் புரியாய் இருந்தால் யோகம் என்றும், இடம் புரியாய் இருந்தால் தோஷம் என்றும் கொள்ள வேண்டும். இரண்டுமே ஜாதகருக்கு 30 வயது கடந்த பின்னரே நல்ல நிலைக்குக் கொண்டு வரும். இது சிறப்பான யோகம் அல்ல.

**18) சகட யோகம்**

6, 8, 12 ஆம் வீட்டு கிரகங்கள் ஒரு இராசியில் குழுமியிருப்பது சகட யோகம் ஆகும். திடீர் அதிர்ஷ்டம் உண்டு. இதுவும் சிறப்பான யோகம் அல்ல. திடீர் உயர்வு அல்லது திடீர் வீழ்ச்சியை உண்டாக்கும்.

**19) மாளவி யோகம்**

சூரியன் மற்றும் செவ்வாய்க்கு நடுவே புதன் அமையப் பெற்ற ஜாதகம். மாளவியோகம் கல்வி கேள்விகளில் சிறப்பு உண்டாகும்.

**20) பத்ர யோகம்**

ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் நட்சத்திரத்தில் சுக்கிரன் இருந்தால் பத்ர யோகம். இறையருளுண்டாகும்.

**21) தர்ம கர்மாதிபதி யோகம்**

லக்னத்தில் இருந்து 9 மற்றும் 10 க்கு உரிய கிரகங்கள் பரிவர்த்தனை ஆவது தர்மகர்மாதிபதி யோகம். இந்த யோகமுள்ளவர் கோவில் கட்டி ஆலய உழவாரப் பணி செய்வார். தேசிய வங்கியில் பெரும் பதவி வகிப்பார்.

**22) சனி யோகம்**

சனியும் சந்திரனும் இணைந்திருப்பது சனியோகம். இவர் கட்டிடக்கலை வல்லுநராக இருப்பார். சர்க்கரை ஆலை மேலாளராவார்.

**23) தன யோகம்**

சந்திரனுக்கு 2 இல் சனி இடம்பெறின் இது தன யோகம். இந்த யோகமுள்ளவர் சனி அல்லது சந்திரன் தெசையில் செல்வந்தராவார்.

**24) கோடீஸ்வர யோகம்**

குருவும் கேதுவும் இணைந்து லக்னத்திற்கோ இராசிக்கோ 12 இல் இருப்பது கோடீஸ்வர யோகம். இவர் செல்வம் மிகுந்திருப்பார். பங்கு தரகில் கோடிஸ்வரராவார்.

**25) கஜகேசரி யோகம்**

குருவுக்கு 4 இல் செவ்வாய் அல்லது குருவுக்கு 7 இல் செவ்வாய், சந்திரனுக்கு 4 இல் செவ்வாய் இருப்பது இந்த யோகம். இவர்கள் தனது நிலத்தைக் குத்தகைக்கு விட்டு அதனைப் பிற சாதியினரிடம் பறிகொடுத்து அல்லலுறுவர்.

## 26) காரியோகம்

குருவும் சனியும் இணைந்திருப்பது காரியோகம். வீட்டில் இருந்தவண்ணம் பெருஞ்செல்வம் சேர்ப்பர். வாகனம் சர்வீஸ். வாகனப் பழுது பார்த்தல். கடிகாரம் பழுது பார்த்தல் தொழிலுண்டு. பணிமனை நடத்துவர். குருவும் சனியும் 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேஷம். கன்னி. தனுசில் கூடும்.

## 27) குரு சண்டாள யோகம்

குருவும் இராகுவும் ஒரு ஜாதகத்தில் இணைவது குருசண்டாள யோகம். இந்த யோகமுள்ளவர் தொழிற்சங்கத் தலைவராவார். துலாம் லக்கினக்காரராயின் மஸ்த்தூர் யூனியன் தலைவராவார்.

## யோகச் சக்கர விளக்கம்

### 1. அமாவாசை யோகம்

| | | | |
|---|---|---|---|
| சூரி சந் | | | |
| | இராசி | | |
| | | | |
| | | | |

### 2. பூர்ணிமா யோகம்

| | | | |
|---|---|---|---|
| சூரி | | | |
| | இராசி | | |
| | | | |
| | | | சந் |

### 3. விதவை யோகம்

முதல் வகை (லக்கின சூரியன்+செவ்வாய்)
(மறுமணம்)

| | | | |
|---|---|---|---|
| ல / சூரி செவ் | | | |
| | இராசி | | |
| | | | |
| | | | |

2 ஆம் வகை (7 இல் சூரியன்+செவ்வாய்)
(கணவர், மனைவி பிரிவு)

| | | | |
|---|---|---|---|
| ல / | | | |
| | இராசி | | |
| | | | |
| | | | சூரி செவ் |

3 ஆம் வகை ( 2 இல் சூரியன்+செவ்வாய்)
(விவாக இரத்து)


| | | | |
|---|---|---|---|
| ல / | சூரி செவ் | | |
| | இராசி | | |
| | | | |
| | | | |

4 ஆம் வகை ( 12 இல் சூரியன்+செவ்வாய்)
(பிறர் மனைத் தொடர்பு)


| | | | |
|---|---|---|---|
| ல / | | | |
| சூரி செவ் | இராசி | | |
| | | | |
| | | | |

இவை எடுத்துக்காட்டுக் கட்டங்களே. இதே லக்னம் என்று கொள்ள வேண்டாம். எந்த லக்னமானாலும் அங்கிருந்து கணக்கில் கொள்ள வேண்டும். எந்த லக்னமானாலும் அங்கிருந்து 1, 2, 7, 12 இல் சூரியன் + செவ்வாய் சேரின் வைதவ்யயோகம்.


5 ஆம் வகை (6 இல் சூரி + செவ்)
(கணவர் தலை மறைவு)





6 ஆம் வகை (8 இல் சூரி + செவ்)
(மனைவி அணிகலன் நீக்கியருப்பார்)





7 ஆம் வகை (பரஸ்பர பார்வை)
(தினமும் சண்டை வரும்)





8 ஆம் வகை (நீச்ச செவ் + சூரி)
(குழந்தைகளுடன் கணவர் பிரிவு)




9 ஆம் வகை (நீச்ச சூரி + செவ்)
(ஒரே வீட்டில் பிரிந்திருப்பர்)





10 ஆம் வகை (உச்ச சூரி + செவ்)
(இருவரும் இரண்டு திருமணம் செய்வர்)





மேற்கண்ட 10 வகைகளில் நெருப்பு, மின்சாரம் மட்டுமின்றி லக்கினத்துக்குத் தக்கபடி மணவாழ்வில் இடருண்டாகும். இதைப் பற்றிப் பின்னர் காணலாம்.

4) **புதாத்திய யோகம்.**





நீச்ச புதாத்திய யோகம்





இது உச்ச புதாத்திய யோகம்


ஆட்சி புதாத்திய யோகம்





மறைந்த புதாத்திய யோகம்




வர்கோத்தம புதாத்திய யோகம்




**புதாத்திய யோகங்களின் வகைகள்**

மேற்கண்டபடி புதாத்திய யோகங்கள் பலவகையில் பிரிக்கப்படுகின்றன. இதில் ஆட்சி புதாத்திய யோகம் என்பது மிதுன லக்னத்தில் புதன், சூரியன் அல்லது சிம்மத்தில் சூரியன், புதன் இருப்பது. இந்த யோகம் முழுப் பலன் தரும்.

உச்ச புதாத்திய யோகம் என்பது கன்னி, மேஷ இராசியில் புதனும் சூரியனும் சேருவது. இந்த யோகமும் 100% பூரண பலன் தரும். குரங்காட்டிகள், சாலைப் பணியாளர்கள், குழாய் புதைப்பவர்கள் இந்த யோகம் பெற்றவர்களாவர்.

நீச்ச புதாத்திய யோகம் என்பது துலாம் அல்லது மீனத்தில் சூரியன், புதன் சேர இருப்பது. இது 60% பலன் தரும். இப்படி அமையப் பெற்றவர்கள் அலாஸ்கா, ரஷ்ய நாடுகளில் பனி படர்ந்த இடத்தில் வசிப்பர். வெண்குஷ்ட ரோகம் அல்லது பல் உபாதை பெற்றவராவர்.

வர்கோத்தம புதாத்திய யோகம் என்பது இராசியிலும், அம்சத்திலும் ஒரே இராசியில் சூரியன், புதன் சேர்ந்து இருப்பது. (மேஷம் என்றால் இராசியில் மேஷத்திலும் அம்சத்தில் மேஷத்திலும் இப்படிக் கொள்க.) இவர்கள் முப்படைத் தளபதிகளாக இருப்பர். 100 % பலன் தரும்.

புதன் சூரியன் நட்பு வீடுகளில் இணைவது நட்பு புதாத்திய யோகமாகும். பகைவீட்டில் இணைவது பகை புதாத்திய யோகமாகும். நீச்சம், பகை வீட்டில் புதன், சூரியன் இணைவது கல்வித்தடையை உண்டாக்கும்.

இப்படி புதனும் சூரியனும் புனர்பூச நட்சத்திரத்தில் இணையுமானால் வெண்சங்கு யோகம் பெறுவர். ஆழ்வார்கள் போல் இறைநிலை பக்தி பெறுவர். திருவாதிரையில் புதன், சூரியன் இணைந்தால் சிவ பக்தியில் சிறந்து இருப்பர்.

மீனத்தில் புதாத்திய யோகம் பெற்று அம்சத்தில் வர்கோத்தம நிலை அடையும் யோகர்கள் பல் மருத்துவர் ஆவர். கன்னியில் புதன், சூரியன் அமைய அம்சத்திலும் கன்னியில் புதன், சூரியன் இணைந்தால் கொழுப்பு நோய் உண்டாகும். இங்கு அம்சம் என்றாலும் நவாம்சம் என்றாலும் ஒரே பொருளைத்தான் குறிக்கும்.

5) விபரீத இராஜ யோகம்

| | | | |
|---|---|---|---|
| குரு சுக் | | | |
| | | | |
| | | | |
| | | | |

6) அம்ச யோகம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் புத | | | |
| | | | |
| | | | |

7) சந்திர மங்கள யோகம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் செவ் | | | |
| | | | |
| | | | |

8) குருச் சந்திர யோகம்

| | | | |
|---|---|---|---|
| குரு சந் | | | |
| | | | |
| | | | |
| | | | |

9) குரு மங்கள யோகம்

| | | | |
|---|---|---|---|
| குரு செவ் | | | |
| | | | |
| | | | |
| | | | |

10) பத்ம யோகம்

| | | | |
|---|---|---|---|
| ல/ | | | |
| | | | |
| | | | |
| செவ் புத | | | |

11) நீச்ச பங்க இராஜ யோகம்

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | |
| | இராசி | | |
| | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | நவாம்சம் | | |
| | | | |
| | | | சுக் |

புதாத்திய யோகத்தில் கொடுக்கப்பட்டுள்ள உச்ச நீச்ச ஆட்சி பகை வர்கோத்தம நிலையைப் போன்றே மேற்கண்ட கிரகங்களின் நிலை அறிந்து பதில் சொல்ல வேண்டும்.

12) சிவ யோகம்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி | | |
| | | | |
| குரு | | | |

13) விஷ்ணு யோகம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி | | குரு |
| சந் | | | |
| | | | |

14) தோரண யோகம்

| | | | |
|---|---|---|---|
| குரு சனி செ ல | இராகு | புத சூரி சந் | |
| | இராசி | | சுக் |
| | | | |
| | | கேது | |

15) அனபா யோகம்

| | | | |
|---|---|---|---|
| சூரி புத | | கேது சுக் | |
| | இராசி | | சனி |
| செவ் | | | |
| | இராகு | | சந் குரு |

16) கிரக மாலிகா யோகம்

| | | | |
|---|---|---|---|
| சூரி | புத | குரு | செ கேது |
| சனி | இராசி | | சந் |
| | | | சுக் |
| இராகு | | | ல/ |

17) சகட யோகம்

| | | | |
|---|---|---|---|
| ல/ | | | |
| கேது குரு சுக் | இராசி | | |
| | | | ராகு சந் செவ் |
| | | சூரி புத சனி | |

18) கால சர்ப யோகம்

| | | | |
|---|---|---|---|
| கேது | சூரி | புத | சுக் |
| | இராசி | | சனி |
| | | | ல/ சந் |
| | | | செவ், குரு இராகு |

இடம் புரி கால சர்ப யோகம்

| | | | |
|---|---|---|---|
| | | | இராகு |
| | இராசி | | குரு |
| | | | ல/ சந் |
| கேது | சனி | சூரி புத, சுக் | செவ்/ |

வலம் புரி கால சர்ப யோகம்

19) தர்மகர்மாதிபதி யோகம்

| | | | |
|---|---|---|---|
| | | புத | சுக் |
| | இராசி | | |
| | | | |
| | | | ல / |

20) கோடீஸ்வர யோகம்

| | | | |
|---|---|---|---|
| ல / | | | |
| குரு கேது | இராசி | | |
| | | | |
| | | | |

21) கோடீஸ்வர யோகம்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| குரு கேது | இராசி | | |
| | | | |
| | | | |

22) குரு சண்டாள யோகம்

| | | | |
|---|---|---|---|
| குரு இராகு | | | |
| | இராசி | | |
| | | | |
| | | | கேது |

23) கஜ கேசரி யோகம்

| | | | |
|---|---|---|---|
| குரு | | | செவ் |
| | இராசி | | |
| | | | |
| | | | |

கஜ கேஸரி யோகம்

| | | | |
|---|---|---|---|
| குரு | | | |
| | இராசி | | |
| | | | |
| செவ் | | | |

24) காரி யோகம்

| | | | |
|---|---|---|---|
| குரு சனி | | | |
| | இராசி | | |
| | | | |
| | | | |

25) மாளவி யோகம்

| | | | |
|---|---|---|---|
| சூரி | புத | செ | |
| | இராசி | | |
| | | | |
| | | | |

அனுபவத்தில் யோகங்கள் கண்டுபிடிக்கும் திறமை உண்டாகும். * * * * *

# அலகு V - பாடம் 9 – தோஷங்கள்

தோஷங்கள் பலவகைப்பட்டாலும், கீழ்க்காணும் தோஷங்களுக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது.

1. நாக தோஷம்
2. புத்திர தோஷம்.
3. களத்திர தோஷம்
4. பிதுர் தோஷம்.
5. மாத்ரு தோஷம்.
6. பக்ஷி தோஷம்.

ஆயுள் தோஷம் என்பது இல்லை. அது கண்டம் என்ற பெயரில் உள்ளது.

**1. நாக தோஷம்**

நாக தோஷம் என்பது லக்கினத்துக்கு 2, 5, 7, 8 ஆகிய வீடுகளில் இராகுவோ, கேதுவோ இருப்பதைக் குறிக்கும். இப்படி லக்னத்துக்கு மட்டுமின்றி, இராசிக்கும் 2, 5, 7, 8 ஆகிய வீடுகளிலும் இராகு அல்லது கேது இருப்பது தோஷம் என்பாரும் உளர்.

லக்னத்துக்கோ இராசிக்கோ இராகு 2 இல் இருந்தால், குடும்பப் பிரச்சினை பெருகி வாக்குவாதம் கூடும்.

லக்னத்துக்கோ, இராசிக்கோ 5 இல் இராகு இருந்தால், கருச்சிதைவு மற்றும் குழந்தை பிறந்து மரிக்கும் நிலை உண்டாகும்.

லக்னம் இராசிக்கு 7 இல் இராகு இருந்தால், பிற சாதியினரால் ஈர்க்கப்படுவார். பெண்களாய் இருந்தால் மாதவிடாய் இடர் உண்டாகும்.

லக்னம் இராசிக்கு 8 இல் இராகு இருந்தால், மகப்பேறு காலத்தில் இடருண்டாகும்.

லக்னத்துக்கு 2 இல் கேது இருந்தால், விஷம் அருந்துவர், உணவு விஷம் ஆகும். காதலர்கள் இருவரும் மரிப்பர். இராசிக்கு 2 இல் கேது இருந்தாலும் இதே நிலை தான்.

லக்னத்துக்கு 5 இல் கேது இருந்தால், பெண் குழந்தை பாக்கியமே உண்டு. (இராசிக்கும் இதே நிலை தான்.)

லக்கினத்துக்கு 7 இல் கேது இருந்தால், (இராசிக்கும்) கணவர் / மனைவி உறவில் சந்தேகத்தால் பிளவு உண்டாகும்.

லக்கினத்துக்கும் இராசிக்கும் 8 இல் கேது இருந்தால், வலிய கருக்கலைப்பு செய்வர். குரு பார்த்தால் தோஷம் இன்னும் அதிகமாகும். கேது மீது சனியின் 3 ஆம் பார்வை பட்டால், முழு தோஷம் கழியும்.

லக்கினத்தில் இராகு அல்லது கேது இருந்தாலோ, கும்பத்தில் இராகு கேது இருந்தாலோ தோஷம் அல்ல. மாறாக பெரிய நிலைக்கு அந்தத் தெசை வழிவகுக்கும்.

**2. புத்திர தோஷம்:**

குரு தனித்து எந்த இராசியில் இருந்தாலும், நீச்சமானாலும், அல்லது லக்கினத்துக்கு 5 ஆம் அதிபதி நீச்சமானாலும், உச்சமானாலும் புத்திர தோஷம்.

குரு எந்த நட்சத்திரத்தில் நிற்கிறதோ, அந்த நட்சத்திரப் பெயரை வைத்துவிட்டால், தோஷம் நிவர்த்தி ஆகும். ரேவதி, கிருத்திகா, ரோகிணி, புஸ்ய, பரணி, சித்திரா இவை எடுத்துக்காட்டு பெயர்கள். ஆண் மகவு என்றால் ரேவதி பிரியன், கார்த்திகேயன் என்று வைக்க வேண்டும்.

இராசியில் குரு உச்சமாகி, அம்சத்தில் நீச்சமாவதும், 5 இல் கிரகம் (லக்கினத்துக்கு 5 இல்) நீச்சமானாலும் புத்திர சோகம் உண்டு. ( இது குறித்து பின்னர் பார்ப்போம்.)

நீச்ச குருவை அல்லது 5 ஆம் அதிபதியைச் சனி பார்த்தால் உடல் ஊனமுள்ள குழந்தை பிறக்கும். அதுவும் புத்திர சோகமே. ரிஷபம் லக்கினத்துக்கு 5 இல் சுக்கிரன் நீச்சமானாலும், மிதுனம் லக்கினத்துக்கு 5 இல் சூரியன் நீச்சமானாலும், கடகம் லக்கினத்துக்கு 5 இல் சந்திரன் நீச்சமானாலும், சிம்மம் லக்கினத்துக்கு குரு 5 இல் தனித்திருந்தாலும், கன்னி லக்கினத்துக்குக் குரு 5 இல் நீச்சமானாலும், விருச்சிகம் லக்கினத்துக்குப் புதன் 5 இல் நீச்சமானாலும் பிறந்த குழந்தைக்குப் பைத்தியம் பிடிக்கும். தனுசு லக்கினத்துக்கு மேஷத்தில் சனி நீச்சமானாலும், மீனம் லக்கினத்துக்கு 5 இல் செவ்வாய் நீச்சமானாலும் புத்திர தோஷம் – சோகம் உண்டு. பார்வையைப் பொறுத்து உடல் ஊனம், விபத்து, தொலைதேசப் பயணப் பிரிவு என்று குழந்தைகளுக்கு உண்டாகும்.

பொதுவாக 3 கிரகங்களுக்கு மேல் உச்சமாவதும், நீச்சமாவதும், ஆட்சியாவதும் தோஷம். ஐந்து கிரகம் உச்சமாக இராமர் வனவாசம் போனதும், 3 கிரகம் நீச்சமாகி நாடாண்ட அரசியல்

தலைவர்களையும் பார்த்திருக்கிறோம். அப்படி 3-க்கு மேல் உச்சமாகியோ, நீச்சமாகியோ, ஆட்சியாகியோ உள்ள ஜாதகர் கடனுபாதையைப் பெறுவார்.

கன்னி முதல் தனுசு இராசி வரை வரிசையாய் கிரக அமைப்புற்ற ஜாதகர் வீண் செலவுக்காகச் சொந்த வீட்டை விற்பார். இப்படிப்பட்ட ஜாதகம் உள்ளது புத்திர தோஷமாகும். ஒரு கிரகம் உச்சம், ஒரு கிரகம் நீச்சமாகி 5 இல் இருந்தால் மத்திய வயதில் குழந்தை திருநங்கையாகி விடும். இதுவும் புத்திர தோஷம். அல்லது இரட்டைக் குழந்தை யோகம் வரும். எனவே, கர்ப்பக் காலத்தில் இஷ்ட தெய்வத்தை வழிபட நல்ல குழந்தை தோஷமின்றிப் பிறக்க வாய்ப்புள்ளது.

திருவாதிரை, சுவாதி, சதயத்தில் பிறந்தவருக்கு நாக தோஷம் ஒன்றும் செய்யாது. அசுபதி, மகம், மூலத்தில் பிறந்தவர்க்கும் நாக தோஷம் கெடுதல் செய்யாது. ஆனால், புத்திர தோஷத்திற்கு விதிவிலக்கு ஏதுமில்லை.

### 3. களத்திர தோஷம்

மனைவி கணவர் மணவாழ்வு நிலையை நெறிப்படுத்துவது களத்திரம். ஒருவர் ஜாதகத்தில் 7 ஆம் அதிபதி மற்றும் 2 ஆம் அதிபதி உச்சமானால் களத்திர தோஷம் உண்டாகும்.

7 ஆம் அதிபதி 2 இல் உச்சமானால், களத்திர தோஷம், பிற சாதியினரை மணப்பர்.

2 ஆம் அதிபதி உச்சமானால் மறுமண யோகம் உண்டு. உச்சமான கிரகம் புதனானால் விதவையை மணப்பார். புதன் நீச்சமானால் தன்னை விடக் கீழ் சாதியினரை மணப்பார்.

7 ஆம் வீட்டில் எத்தனை கிரகங்கள் உள்ளனவோ அத்தனை திருமணம் ஆகும் என்பது தவறான கருத்து. 7 ஆம் வீட்டைச் சனி 3 ஆம் பார்வையால் பார்த்தாலோ, 7 ஆம் வீட்டு அதிபதி உச்சம், நீச்சம் இன்றி, 2 இல் இருந்தாலோ திருமணம் கிடையாது.

7 இல் சூரியன் + இராகு இருப்பதும் தோஷம். 7 இல் சந்திரன் + சுக்கிரன் இருந்தால் பல தாரம், பிறர் மனைப் புணர்வு உண்டு.

7 இல் இராகு + புதன் சேர்ந்தால், ஆண் ஆணை மணப்பார். 7 ஆம் அதிபதி, 3 ஆம் அதிபதியோடு இணைந்தால், சொந்த சகோதரியைப் புணர்வார்.

7 ஆம் அதிபதி 4 இல் இருந்தால், காதல் மணம் உண்டு. 7 ஆம் அதிபதி 12 இல் மறைந்தால் வீட்டை விட்டு ஓடிப்போய் திருமணம் செய்வார்.

7ஆம் அதிபதி 6 இல் மறைந்தால் மனைவி கணவருக்கும், கணவர் மனைவிக்கும் துரோகம் செய்வர்.

பொதுவாக, 5 ஆம் அதிபதி 6 இல் மறைந்தால் கௌரவம் பழுது உண்டாகும். அதே போல் 2 ஆம் அதிபதி 6 இல் மறைந்தால் மடல் (லெட்டர்) எழுதி வைத்து விட்டு வெளியேறுவார். 7, 2 க்கு உரியவர்கள் 8 இல் மறைந்தால் மனைவி கணவர் நோய்வாய்ப் படுவர். கேதுவுடன் 7 ஆம் அதிபதி சேர்ந்தால் சித்தியை மணப்பர். இதுவெல்லாம் களத்திர தோஷம். பரிகாரங்களைப் பின்னர்ப் பார்ப்போம்.

### 4. பித்துரு தோஷம்

9 ஆம் அதிபதி 6, 8, 12 இல் மறைந்தாலும், இராகு உடன் இணைந்தாலும், சூரியன் நீச்சமானாலும், 9 ஆம் அதிபதி நீச்சமானாலும், சூரியன் + இராகு இணைந்தாலும் பித்துரு தோஷம். சூரியன் 6, 8, 12 இல் மறைந்தாலும் தோஷமே. லக்கினத்துக்கு 4, 9 க்கு உரியவர் சேர்ந்தாலும், சூரியன் + சந்திரன் சேர்ந்தாலும் பித்துரு தோஷம். தந்தையின் பிரிவு அல்லது மரணம் ஏற்படும். இது பற்றி விளக்கம் பின்னர்க் காணலாம்.

### 5. மாத்ரு தோஷம்

சந்திரன் 4 இல் இருந்தாலும், நீச்சமானாலும், சந்திரனுடன் இராகு அல்லது கேதுவுடன் இணைந்தாலும், 4 ஆம் அதிபதி நீச்சமானாலும், உச்சமானாலும் சனி, இராகு, கேதுவுடன் சேர்ந்தாலும் மாத்ரு தோஷம். தாயின் பிரிவு அல்லது மரணம் ஏற்படும்.

இவ்விரு தோஷங்கள் நீங்க மூதாதையர் வழிபாடே நலம்.

### 6. பக்ஷி தோஷம்

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரை காகம் கரைதல், ஆந்தை அலறுதல் போன்றவற்றிற்குப் பலன்கள் கூறப்பட்டன. ஆனால், தற்போது விஞ்ஞானம் வளர்ந்து லங்குடு, குருவி, மைனா போன்ற பறவைகள் குறைந்த காரணத்தால் இந்தத் தோஷத்துக்கு முக்கியத்துவம் தர வேண்டாம். காகம் நம் தலையில் அடித்தால் தோஷம் என்றும் தீமை வருவதற்கான எச்சரிக்கை என்றும் நம்பப்பபடடது.

### 7. செவ்வாய் தோஷம்

இது திருமண காலத்தில் பொருத்தம் பார்க்கப்படும் போது கவனிக்க வேண்டியது. இதைப் பின்னர்ப் பார்க்கலாம்.

## 8. மாங்கல்ய தோஷம்

பிறந்த லக்கினத்துக்கு 8 இல் சனி அல்லது 7 இல் சூரியன் இருப்பது மாங்கல்ய தோஷம். கண்டகம் என்றால் கழுத்து என்று பொருள். இதனைக் கண்டகச் செவ்வாய், கண்டகச் சனி என்பர். சிவபெருமானுக்கு நீலகழுத்தன் என்பதை நீலகண்டன் என்று சொல்வது போல், கண்டம் என்றால் பெரிய நிலப்பகுதி, ஆபத்து, கழுத்து என்று 3 பொருள் வரும். இவ்விடம் கழுத்தை மட்டுமே குறிக்கும்.

சனி அல்லது செவ்வாய் 2, 7, 8, 12 இல் இருந்தால் மாங்கல்ய தோஷம். இப்படி இருப்பவர் இருதார யோகம் உள்ளவர். பெண்கள் பிற ஆடவர் உறவை நாடுவர். இது அபாயகரமானது. லக்னத்துக்கு 11 இல் சனி இருந்தால், பெண்ணானால் கணவருக்கும், ஆண் ஜாதகமானால் மனைவிக்கும் துரோகம் செய்வர். இது இரு பாலருக்கும் தெரிய வந்து விடும். திருமணமாகி 25 வருடங்களில் கணவர் / மனைவியை இழக்க நேரும்.

## 9. கிரகண தோஷம்

சாயா கிரகங்களான இராகு அல்லது கேதுவுடன் சூரியன் அல்லது சந்திரன் சேர்ந்தால் கிரகணத் தோஷம். இரண்டும் ஒரே நட்சத்திரக் காலில் இருப்பது இந்தத் தோஷம்.

கேதுவால் சூரியனோ சந்திரனோ பிடிக்கப்பட்டால் சூரியக் கிரகணம், சந்திரக் கிரகணம் என்று கூறுவர். இதைக் கேதுவின் பிடி என்பர். இந்தத் தோஷம் உள்ளவர்க்கு மாமா விரோதத்தை உண்டாக்கும். மாந்திரீகம் மூலம் பிறருக்கு கெடுதல் செய்வர். சூன்ய பலிதம் உள்ளவர்.

சூரியன் அல்லது சந்திரனோடு இராகு சேர்ந்தாலும் சூரியக் கிரகணம் சந்திரக் கிரகணம் என்பர். இதனைக் இராகுவின் பிடி என்பர். இப்படி இராகு கிரகணக் காலத்தில் பிறந்தவரை இராகு காலம் வாழ்நாள் முழுவதும் ஒன்றும் செய்யாது. இந்தக் கிரக அமைப்புப் பெற்றவர் கள்ளக்கடத்தல் வேலை செய்வார். சிலர் திரைப்படப் பின்னணி வேலைகள் செய்வர். சில நேரம் இது யோகமாயும் இருக்கும். கேதுவைச் சிறு பாம்பு என்றும் இராகுவைப் பெரும் பாம்பு என்றும் கூறுவர்.

## 9. பரிகாரங்கள்

நாக தோஷம் உள்ளவர்கள் புடலங்காய் உண்ணாமல் இருந்தால் தோஷம் நிவர்த்தி யாகும்.

புத்திர தோஷம் உள்ளவர் வியாழக்கிழமை சம்போகம் செய்யாமல் இருந்தால் தோஷம் விலகும். அதே போல் புனர்பூசம், விசாகம், பூரட்டாதி நட்சத்திரங்கள் வரும் நாட்களில் மனைவி / கணவர் உறவு இல்லாதிருப்பது பரிகாரமாகும்.

களத்திர தோஷம் உள்ளவர்கள் வெள்ளிக் கிழமையில் திருமணம் வைத்தால் நலமுறுவர். தோஷம் நீக்கம் ஆகும்.

பித்ரு தோஷம் உள்ளவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளிலும், மாத்ரு தோஷம் உள்ளவர்கள் திங்கட்கிழமைகளிலும் இஷ்ட தெய்வ ஆராதனை மற்றும் மூதாதையரை நினைவு கூறலால் தோஷம் விலகும்.

மாங்கல்ய தோஷம், இராகு தோஷம் உள்ளவர் சனிக்கிழமைகளிலும், கேது தோஷம் உள்ளவர்கள் புதன் கிழமைகளிலும் இறைவழிபாடு செய்தாலே மாங்கல்ய தோஷம் விலகும்.

எல்லாம் மூன்று மாதங்கள் அதாவது, 3 அமாவாசை கழியும் வரை செய்தாலே போதும். வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டாம்.

* * * * *

# அலகு V - பாடம் 10 – விதிவிலக்குகள்

1. ஐப்பசி மாதத்தில் ஞாயிற்றுக் கிழமையில் பிறந்தவர்களுக்குச் சூரிய நீச்சம் ஒன்றும் பண்ணாது.

2. இராசிக் கட்டத்தில் சந்திரன் வளர்பிறையாய் இருந்தாலும் ஆட்சி, உச்சம் பெற்றாலும் சந்திராஷ்டமம் ஒன்றும் செய்யாது.

3. செவ்வாய் மேஷம், விருச்சிகம், மகரத்தில் இருந்தாலும் ஜாதகர் செவ்வாய்க் கிழமை பிறந்திருந்தாலும் செவ்வாய் தோஷம் ஒன்றும் செய்யாது.

4. புதன் கிழமை பிறந்தவரை நீச்ச புதன் ஒன்றும் செய்யாது.

5. பூரம் 1 இல் குரு சஞ்சரிக்கும் போது குரு வர்கோத்தமமாவதால் மாமாங்கத் தடை ஒன்றும் செய்யாது.

6. வியாழக்கிழமை பிறந்தவருக்குக் குருவின் நீச்சம் ஒன்றும் செய்யாது.

7. வெள்ளிக்கிழமை பிறந்தவரை நீச்சச் சுக்கிரன் ஒன்றும் செய்யாது.

8. சனி, மகரம், கும்பம், துலாத்தில் இருக்கப் பிறந்தவரையும் பூசம், அனுஷம், உத்தரட்டாதி நட்சத்திரக்காரரையும் ஏழரைச் சனி, அட்டமச் சனி, அர்தாட்டமச் சனி ஒன்றும் செய்யாது.

9. திருவாதிரை, சுவாதி, சதயம் நட்சத்திரக்காரரையும் இராகு தெசை நடப்பவரையும் இராகு காலம் ஒன்றும் செய்யாது.

10. கும்பத்தில், கேது இருந்தால் அந்தத் தெசை யோக பலன் தரும். இராகு இருந்தால் பரிசு விழும்.

11. மீனம், மிதுனம், கன்னி, தனுசு ஆகிய மூலை வீடுகள் கேந்திரஸ்தானம் ஆகும். அங்கு மீனத்தல் குரு, மிதுனம், கன்னியில் புதன், தனுசில் குரு தனித்திருந்தால் பாதகம் இல்லை.

12. லக்கினத்துக்கு 1, 5, 9 ஆம் வீடுகள் திரிகோண ஸ்தானங்கள். அங்குச் செவ்வாய், சனி இருப்பது நல்லது.

13. லக்கினத்துக்கு 6, 8, 12 ஆம் வீடுகள் மறைவு ஸ்தானங்கள். அந்த வீடுகளில் கிரகங்கள் இருந்தால் வலுவிழக்கும். சுக்கிரனுக்கு 12 ஆம் வீட்டுக்குப் பதில் 3 ஆம் வீடு மறைவு ஸ்தானம். சுக்கிரன் 3 இல் இருக்க அந்தத் தெசை நடந்தால் ஜாதகர் ஊர் ஊராய்ச் சுற்றுவார்.

14. இராகு–கேது செவ்வாய்க்கு நல்லது செய்யும். சனி–சூரியன் சந்திரனுக்கு நல்லது செய்யும்..

15. நீர் கட்டங்களான மீனம், கடகம், விருச்சிகத்தில் கிரகங்கள் (இராசியிலோ அம்சத்திலோ) இருந்தால் வெளிநாட்டு யோகம் உண்டு.

16. சந்திரன் 7 இல் உச்சமுற்றால் வசுமதி யோகம். நல்ல மனைவி / கணவர் அமைவார்.

17. மேஷம் இராசிக்கு அஷ்டமச் சனி ஒன்றும் செய்யாது.

18. மிதுனம் இராசிக்கு அர்த்தாட்டம குரு ஒன்றும் செய்யாது.

19. ஒருவருக்குச் சனி தெசை நடக்கும் போது அஷ்டமச் சனி, ஏழரைச் சனி, அர்த்தாட்டமச் சனி வந்தால் தீமை நிகழாது.

20. அஷ்டமி, நவமி திதிகளில் மருந்துண்டால் உடல் நோய் உடனே மறையும்.

21. சந்திரன் கேது, சூரியன் கேது, சந்திரன் இராகு, சூரியன் இராகு இணைந்த ஜாதகத்தினரைக் கிரகணம் ஒன்றும் செய்யாது.

22. இராகுவைப் போல் கொடுப்பாருமில்லை, கெடுப்பாருமில்லை என்ற வசனம் கிடையாது.

23. செவ்வாயைப் போல் கேது, சனியைப் போல் இராகு என்பது கேதுவுக்கும் செவ்வாய்க்கும் தெசை ஆட்சிக் காலம் ஏழாண்டுகள் என்பதாலும் சனிக்கும் இராகுவுக்கும் தெசை ஆட்சிக் காலம் 18, 19 ஆண்டுகள் என்பதாலும் கூறப்பட்டது.

24. அசுபதி, மகம், மூலம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குக் கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன் செவ்வாய், இராகு என்ற வரிசையில் கிரக வாழ்வு அமைவதால் தெசைகள் பின்யோக ஜாதகம் ஆகும்.

25. இராகு-கேது வர்கோத்தமமானால் நல்ல பலன்கள் உண்டாகும்.

26. பரணி, பூரம், பூராடம் நட்சத்திரக்காரர்களுக்கு மகான்கள் அருள் அதிக முயற்சியினாலேயே கிடைக்கும்.

27. திருவாதிரை, சுவாதி, சதயம் நட்சத்திரக்காரர்கள் இராகு, குரு, சனி, புதன், கேது என்னும் வரிசையில் தெசைகள் அமைவதால் வெளிநாட்டு யோகம் உண்டு. முன்யோக ஜாதகமுள்ளவர்களாவர். பலன்கள் அமோக நலம் தரும்.

இதுகாறும் நாம் யோகங்கள், தோஷங்கள், விதிவிலக்குகளைப் பார்த்தோம். இதனை அவ்வப்போது பார்த்தாலே மனப்பாடமாகி விடும். பலன்கள் சொல்ல வசதியாய் இருக்கும்.

* * * * *

# தாள்– 1 சோதிட அடிப்படைகள்

## வினாக்கள்

### பாடம் 1 – **சோதிடம் ஓர் அறிமுகம்**

1. வான்வீதியில் 12 இராசிகளின் பாகைகளை எழுதுக.
2. மேஷம், சிம்மம், தனுசு இராசிகளிலுள்ள நட்சத்திரங்கள் எவை?
3. கிரக தெசைகளின் வரிசையையும் தெசை ஆண்டுகளையும் குறிப்பிடுக.
4. எந்த நட்சத்திரங்களில் பிறந்தவர்ளுக்குக் சூரியன், குரு, சனி தெசை முதலில் தொடங்கும்?
5. 12 இராசிகளுக்குரிய நட்சத்திரங்களைப் பட்டியலிடுக.
6. 9 கிரகங்களுக்குரிய நட்சத்தரங்களையும் தெசை ஆண்டுகளையும் குறிப்பிடுக.

### பாடம் 2 – **கிரகங்களும் நட்சத்திரங்களும்**

1. அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கும் ஜோதிடத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
2. ரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரைக்காரர்கள் தெசா புக்திகளை வரிசைப்படுத்துக.
3. ஏதாவது 4 நட்சத்திரங்களைப் பற்றியும் அவற்றின் குணநலன்களைப் பற்றியும் குறிப்பு வரைக.
4. சுக்கிரன், இராகு–கேதுக்கள் குணநலன்கள் பற்றிக் கூறுக?

### பாடம் 3 – **லக்னம், இராசி, நவாம்சம்**

1. லக்னம்–இராசிக்கு உள்ள வேறுபாடுகளை எழுதுக.
2. மிதுனம் லக்னமும் கன்னி லக்னமும் ஒப்பிடுக.
3. கால், அரை, முக்கால், முழு நட்சத்திரங்கள் யாவை?
4. ரிஷபம், மிதுனம் இராசிக்காரர்களின் குணநலன்கள் யாவை?
5. கடகம் லக்னத்துக்கும், கடகம் இராசிக்கும், கடகம் நவாம்சத்துக்கம் உள்ள வேறுபாடுகள் யாவை?

### பாடம் 4 – **கிரகங்களின் ஆட்சி, உச்சம், நீச்சம், வர்கோத்தமம், பரிவர்த்தனை**

1. 12 இராசிகளை வரிசைப்படுத்தி 9 கிரகங்களின் உச்சம் வீடுகளை நிரப்புக.
2. சூரியன், சனி, செவ்வாய் ஆட்சி, உச்சம், நீச்சம் வீடுகளைக் கூறுக.
3. சூரியன், செவ்வாய் வர்கோத்தமமானால் பலன் என்ன?
4. கத்தரி வர்கோத்தமம் என்றால் என்ன? விளக்குக.

5. சுக்கிரன் மற்றும் சூரியன், சுக்கிரன் மற்றும் சந்திரன் பரிவர்த்தனையானால் என்ன நிகழும்?

6. ஓரடுக்கு, ஈரடுக்கு, மூன்றடுக்கு பரிவர்த்தனை விபரங்கள் வரைக.

**பாடம் 5 – காரகத்துவமும் ஆதிபத்தியமும்**

1. சூரியன், செவ்வாய் ஆதிபத்திய விவரங்கள், பலன்கள் கூறுக.
2. புதன் காரகத்துவம் ஆதிபத்திய விவரங்கள் யாவை?
3. மாத்துர்காரகன் மாதாமகர்காரகன் பற்றிய விவரங்கள் கூறுக.
4. ஆதிபத்தியம் காரகத்துவம் ஒன்றாய் இருக்கும் லக்னங்கள் யாவை?
5. 12 வீடுகளின் உட்பொருட்கள் யாவை?

**பாடம் 6 – பரஸ்பர பார்வை**

1. கிரகங்களின் பார்வைகள் எவை?
2. செவ்வாய், புதன் பரஸ்பர பார்வை பலன் கூறுக.
3. பரஸ்பர பார்வையின் பயன்கள் யாவை?

**பாடம் 7 – பிறந்த எண் மற்றும் நவரத்தினங்கள்**

1. 3 ஆம் எண்ணில் பிறந்தவர்களின் குணநலன்களை வரைக.
2. 5, 8 ஆம் தேதிகளில் பிறந்தவர்களின் பலன்களைக் கூறுக?
3. வைரம் அணிவதால் நன்மை, தீமை யாவை?
4. முத்து, மரகதம் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
5. புதன், செவ்வாயின் இரத்தினங்கள் யாவை? அவற்றை அணிவதால் உண்டாகும் பயன்கள் எவை?
6. பவழம்– வைடூரியத்தைப் பற்றி எழுதுக. இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
7. நவரத்தின மோதிரங்கள் யாவை? ஏதாவது மூன்றைப் பற்றிக் குறிப்பு வரைக.
8. 7 ஆம் எண்காரரும் புட்பராக மோதிரமும் ஆய்வு செய்க?
9. மோதிரம் அணியாதிருந்தால் என்னவாகும்? விளக்குக.
10. ஜோதிடத்துக்கும் எண் கணிதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் எவை?

**பாடம் 8 – யோகங்கள்**

1. சூரியன் + சந்திரன் சேர்ந்தால் வரும் யோகமும் அதன் பலன்களும் வரைக.
2. புதாதித்திய யோகத்தின் சிறப்புக்கள் யாவை?

3. குருச்சந்திர யோகம், குருமங்கள யோகம், சந்திரமங்கள யோகம் இவற்றிற்கு உண்டான தொடர்புகள் யாவை?

4. சாயாயோகம் பற்றி குறிப்பு வரைக.

**பாடம் 9 – தோஷங்கள்**

1. முக்கியமான தோஷங்கள் எவை?
2. களத்திர தோஷம் விளக்குக.

**பாடம் 10 – விதிவிலக்குகள்**

1. ஏதேனும் 5 விதிவிலக்குகுகளை எழுதுக.

* * * * *